


எல்லாம்
உனக்காக
ரமணிசந்திரன்


எல்லாம்
உனக்காக
ரமணிசந்திரன்

# எல்லாம் உனக்காக...



## 1

அன்றைக்கு அலுவலகத்துக்கு விடுமுறை! ஏதோ நாடு தழுவிய போராட்டம்!

வேண்டிய பாதுகாப்புத் தருவதாக அரசாங்கம் அறிவித் திருந்ததால், விடுமுறை விட வேண்டிய அவசியம் இல்லைதான்! ஆனால், பெரிய கண்ணாடித் தடுப்புகளும், அலங்கார விளக்குகளும், நிறைய கம்ப்யூட்டர்களும், ஏசியுமாக, என்னவோ சொல்லுவார்களே, வாழையிலை முள்ளில் விழுந்தாலும், முள் வாழையிலை மேல் விழுந் தாலும், சேதம் வாழையிலைக்குத்தான் என்று, அது போல கலவரம் வெடித்துக் கல்லெறி, தடியடி என்று என்ன நடந்தாலும் தங்களது அலுவலகத்துக்குத்தான் பெருத்த சேதம் ஏற்பட்டுப் போகும் என்ற அச்சம் நிர் வாகத்துக்கு வந்துவிட்டது!

சேதத்துக்கு இன்ஷ்யூரன்சில் ஈடு கிடைத்துவிடும் என்றாலும் எத்தனை நாள் வேலை கெட்டுப் போகுமோ? அதைவிட, அன்றைய ஒரு நாள் இழப்போடு முடியட்டும் என்ற எண்ணம்! அனேகமாக, இன்னொரு விடுமுறை நாளில் வேலை செய்ய வைத்து, இந்த இழப்பை ஈடு கட்டியும் விடுவார்கள் என்பது, நிர்மலாவின் ஊகம்!

எனவே, கிடைத்த விடுமுறையை வீணாக்காமல், தட்டிக் கொட்டி சாமான்களை அடுக்கி வைத்தாள்! சில சல்வார் செட்டுகளில், அங்கங்கே தையல் விட்டுப் போயிருந்ததைத் தைத்தாள்!

இடையே தலையில் எண்ணெய் ஊற வைத்து ஷாம்பூ தேய்த்து, ஆற அமரக் குளித்தாள்.

உடலுக்கு இதமாக, ஒரு பழைய சல்வாரை அணிந்தவள், ஒரு கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு படுத்தாள்.

சும்மா இருந்தால்தான் வேண்டாததை எல்லாம் நினைத்து மனதை உளையத் தொடங்கி விடுகிறதே!

இப்படி இருந்திருக்கலாமோ... அப்படி நடந்திருந்தால்... என்று மனம் கலங்கிப் பைத்தியமாகிவிடும்!

எனவே, சோம்பியிருக்க முடியாமல், அதற்கு ஏதாவது தீனி போட்டுக் கொண்டே இருப்பது, இப்போது அவளுக்கு பழகிவிட்டது!

பயங்கரமான உளவுத் துறைக் கதை அது! காதல் கதைகளையெல்லாம்தான் மூட்டை கட்டிப் போட்டுப் பல மாதங்கள் ஆகி விட்டனவே! அதன் பிறகு, கொலை, கொள்ளை, அரசியல் சதிகளைப் பற்றிய கதைகள்தான்!

அதிலும், இந்த நெடுங்கதையில் நியூயார்க்கிலிருந்து, மாஸ்கோ வரை, அரசாங்க உதவியோடு, ஒரு நல்ல



வனைக் கொல்வதற்காக, வில்லன்கள் விரட்டிக் கொண்டிருந்தார்கள்! அந்த விரட்டலில் ஒவ்வோர் இடத்திலும் பல கொலைகள் நடந்து கொண்டே இருந்தன!

ரொம்பவும் புகழ் பெற்ற நாவல்தான்! ஆனால், படுத்துக் கொண்டு படித்ததாலோ என்னவோ, நாவலில் முழுக் கவனம் பதிக்க முடியாமல், அரைத் தூக்கத்தில் அவளது கையிலிருந்து புத்தகம் நழுவுகையில், யாரோ அவளது அறைக் கதவைத் தட்டினார்கள்!

முதலில், அதைக் கூடக் கதையில் வரும் ஏதோ ஒரு சம்பவத்தை மனம் நிஜம் போலக் கற்பனை செய்கிறது என்று நினைத்து, நிர்மலா அசையாமல்தான் கிடந்தாள்!

ஆனால், கதவு பலமாகத் தட்டப்பட்டதோடு, ''நிர்மலாம்மா, உங்களைப் பார்க்க ஒரு 'விசிட்டர்' வந்துக் கீறாரம்மா! நம்ம நிர்வாகி அம்மா உன்னிட்ட சொல்லச் சொன்னாங்கம்மா! தூங்கறியா? முழிச்சுக்கோ!'' என்று, அந்த விடுதியில் சுற்று வேலை பார்க்கும் சிங்காரி, சற்று உரக்க அழைப்பது காதில் விழ, நடப்பு புரிந்து, விழுந்தடித்துக் கொண்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

அவளைப் பார்த்ததும், ''என்னம்மா, எம்மா நேரம் கதவைத் தட்றது? லீவுதானேன்னு தூங்கிக்கினியாக்கும்? சரிசரி, மூஞ்சிய அலம்பிக்கினு வா! யாரோ, பெரிய மனுசன் வந்துக் கீறார்!'' என்று தகவல் தெரிவித்துவிட்டுக் கிளம்பியவள், சட்டென நின்று, ''அட, இத்தத் தர மறந்திட்டேனே! இந்தா! அவுரு கொடுத்தது!'' என்று ஒரு விசிட்டிங் கார்டை நிர்மலாவிடம் கொடுத்துவிட்டுப் போனாள்.

கார்டைக் கையில் வாங்கியதுமே, நிர்மலா அப்படியே திக்பிரமித்துப் போனாள்.



தலை கீழாகப் பிடித்திருந்த கார்டைத் திருப்பி, அதிலிருக்கும் பெயரைப் படித்துப் பார்க்கும் எண்ணம் கூட அவளுக்கு வரவில்லை! அதற்குத் தேவையும் இல்லை! ஏனெனில், அந்தக் கார்டை வடிவமைத்துக் கொடுத்ததே அவள்தான்!

ஆனால், இவன் எங்கே இங்கே வந்தான்?! எதற்கு வந்தான்?

பல மாதங்களாக, அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதே, அவர்கள் இருவரின் வக்கீல்கள் மூலமாகத்தான்!

அந்தப் பேச்சின் தேவை கூட முடிந்து போய், இருவருமாக, மண விலக்கிற்கு முந்திய பிரிவுக் காலத்தைத்தான் இப்போது கழித்துக் கொண்டிருந்தார்கள்!

அதற்கிடையில், அவன் ஏன் அவளைத் தேடி, இங்கே வந்தான்?

மணவிலக்கு கிடைத்துவிட்டதா? அதைத்தான் சந்தோஷமாகச் சொல்ல வந்தானா என்று ஒரு கணம் நிர்மலா அதிர்ந்தாள்.

ஆனால் உடனேயே, அதற்கு இன்னும் மூன்று மாதங்களேனும் ஆகும் என்று, அவளுடைய வக்கீல் சொன்னது நினைவு வர, அதிர்ச்சி மாறி, எதற்காக வந்தான் என்று மனம் மீண்டும் ஆராயலாயிற்று.

எதற்காக என்று குழம்பியவளுக்கு, அவனைப் போய்ப் பார்த்தால் விவரம் தெரிந்து விட்டுப் போகிறது என்ற சின்ன விஷயம் ஒருவாறு மனதில் உறைக்க, கதவை மூடுவதற்காகப் பூட்டை எடுக்க உள்ளே சென்றாள்.

விடுதியில் பெரும்பாலோர் நம்பிக்கைக்கு உரியவர்களே என்ற போதும், அவரவர் பொருட்கள், அவரவர்



பொறுப்பு என்ற விதிமுறையும் இருந்ததால், அறையிலிருந்து செல்லும்போது எல்லோரும் பூட்டிக் கொண்டு செல்வது!

தொலைத்துவிட்டுத் தவிப்பதை விடத் தொலையாமல் காப்பது மேல் அல்லவா?

அவளைப் போலத் தொலைத்துத் தவித்த யாரையோ பார்த்துவிட்டு நிர்வாகம் இந்த விதியை ஏற்படுத்தியிருக்க வேண்டும்!

கடவுளே! அவள் தொலைப்பதற்கு, இனி என்ன இருக்கிறது?

மலைத்து நின்றவள், தலையை உலுக்கி, மீண்டும் நடப்புக்குத் திரும்பி வந்தாள்!

பூட்டை எடுத்துத் திரும்பும்போது, அணிந்திருந்த சல்வாரின் மீது தற்செயலாகப் பார்வை விழ, நிர்மலா மீண்டும் அதிர்ந்து நின்றாள்!

இது, அவளுடைய கணவன் நித்யானந்தன் முதல் முதலாக அவளுக்கு வாங்கிக் கொடுத்த உடைகளில் ஒன்று! அணிய அவளுக்கும், அவள் அணிந்திருப்பதைப் பார்க்க அவனுக்கும் மிகவும் பிடித்தமானது!

அதற்காகவே அடிக்கடி அணிந்து, சீக்கிரமாகப் பழசாகிப் போயிற்று! ஆனாலும், அணிந்தால் உடலுக்கும் மனதுக்கும் இதமாக இருக்கிறது என்று, அவனைப் பிரிந்த பிறகும் அடிக்கடி அதை அணிவாள்!

இன்றைப் போல!

ஆனால், இந்தச் சுரிதாரோடு அவன் முன்னே போய் நின்றால் என்ன நினைப்பான்? அவனுக்காக ஏங்குவதாக

எண்ண மாட்டானா? அதுவும், விவாகரத்து விரைவி லேயே கிடைக்க இருக்கும் இந்த நேரத்தில், அவனுக் காகவாவது, ஏங்குவதாவது?

முக்கியமாக, அவள் ஏங்குவதாக அவனை நினைக்க விடுவதாவது?

அப்படிப்பட்ட எண்ணம் தோன்ற விடுவதே, அவளுக்கு மகாக் கேவலம் அல்லவா?

கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு, அவசரமாகக் கொஞ்சம் புதிய ஆனால் ஒரேயடியாகப் பளிச்சென்றிராத ஒன்றை எடுத்து வேகமாக அணிந்தாள்.

ஏனெனில், நித்யானந்தன் ஒரு மாதிரி புத்திசாலி! நொட்டு நொசுக்கென்று எதிர்பாராத எதையாவது பிடித்துக் கொண்டு என்னமாவது சொல்வான்!

ஒரேயடியாகப் பளிச்சென்று இருந்தாலும், ஏதோ அவ னுக்காக அலங்கரித்துக் கொண்ட மாதிரியும் நினைத்துக் கொள்ளலாம்! அல்லது, நன்றாக இருப்பது போலக் காட்டிக் கொள்வதற்காக இந்த வேஷமா என்று, கேட்கவும் கூடும். எதற்கு வம்பு? கையில் காசு புரள்வதால், கண்ட படி செலவு செய்வதை என்னிடம் காட்ட வேண்டு மாக்கும் என்று, இன்னொரு வகையிலும் பாயலாம்!

மூன்றுமே இந்த உடையில் நடக்காது!

அப்புறம் தலை! பரட்டையாகப் பறந்த கூந்தல், அவள் விரும்பிய வகையில் படிய மறுத்தது! ஷாம்பு போட்ட முடியை முழுதாகக் காயுமுன் கொஞ்சமேனும் சீப்பால் கோதி விட்டிருக்க வேண்டும்! அலையலையாக அடர்த்தி யான நெளி மயிர் வேறு, அவளுக்கு! முடிந்தவரை அவசர மாக அழுத்தி வாரியதில், சீப்பு உடைந்தே போயிற்று!



கடவுளே... என்று அவளுக்குக் கண் கூடக் கலங்கி விட்டது!

இடையிலே பல் உடைந்து போனதால், கழித்துக் குப்பைத் தொட்டியில் வீசியிருந்த பழைய சீப்பைத் தேடி யெடுத்துக் கூந்தலில் பதித்தவள் ஒரு கணம் யோசித் தாள்! இதுவும் உடைந்து போனால், காளிகாதேவி போல, விரிந்த கூந்தலோடுதான் அவன் முன் சென்று நிற்க நேரும்!

அதற்கு வேறு, ஏதாவது விளக்கம் வரும்!

அவசரத்துக்கு லேசாகத் தண்ணீரைத் தடவி, விரல் களால் கோதி, கூந்தலை ஓரளவு ஒழுங்குக்குக் கொண்டு வந்து, அதன் பிறகு சீப்பு கொண்டு வாரி, முகத்தைக் கழுவித் துடைத்து, நெற்றியில் ஒரு கோபியை ஒட்டிக் கொண்டு பார்த்தால், என்னதான் மின்னல் வேகத்தில் செயல்பட்டிருந்த போதும், சிங்காரி வந்து தகவல் சொல்லிக் கிட்டத்தட்டப் பத்து நிமிஷங்கள் ஆகி விட்டிருந்தன!

அவள் அஞ்சியது போல அரை மணி நேரம் ஆகி விடவில்லை என்று கொஞ்சம் நிம்மதியுற்ற போதும், ப...த்...து நிமிஷங்கள் ஆகிவிட்டனவே என்று, அவ ளுக்குக் கவலையாகவும் இருந்தது!

இந்தப் பத்து நிமிஷத் தாமதத்துக்கு என்ன காரணம் சொல்வது?

மொட்டு மொட்டென்று தனியே உட்கார்ந்து காத் திருப்பவனுக்கு, இது அரை மணியாகவே தோன்றவும் கூடும்!

அந்த ஆத்திரத்தில் எப்படி எரிந்து விழப் போகிறானோ!



கிட்டத்தட்ட அவன் யாரோ, அவள் யாரோ என்று ஆகிவிட்ட பிறகும், நித்யன் எரிந்து விழுவது பற்றிக் கலக்கமுறுவது மடத்தனம் என்று தனக்குத் தானே அறிவுறுத்தியவாறு சென்றால், அங்கே விடுதி நிர்வாகி யோடு கலகலப்பாக உரையாடியவாறு நித்யானந்தன் இலகுவாக உட்கார்ந்திருந்தான்!

இவனாவது, மொட்டு மொட்டென்று தனியாக உட்கார்ந்திருப்பதாவது?

எந்த இடத்திலும் இவனது பேச்சை ஆ என்று வாயைப் பிளந்து கேட்க யாராவது கிடைக்காமல் போக மாட்டார் களே!

ஆனாலும், இந்த விடுதி நிர்வாகிக்கு, இப்படிச் சிரிக் கவும் தெரியும் என்று இன்றுதான் தெரிகிறது!

இங்கே தங்கியிருப்பவர்கள், வேலைக்குப் போகிறவர் களா, பள்ளி மாணவிகளா என்று சந்தேகப்படுகிற அள வுக்குக் கண்டிப்பும் கடுகடுப்புமாக இருப்பவள்! பக்கத்து அறையில் இருக்கும் நாற்பது வயது கலாவதிக்குக் கூட, நிர்வாகியிடம் பயம்தான். விதிகளுக்குக் கட்டுப்பட்டு இருப்பதானால், இங்கே இரு... இல்லாவிட்டால் மூட்டையைக் கட்டிக் கொண்டு கிளம்பு என்று தாட்சண் ணியமே இல்லாமல் விரட்டுகிறவள் ஆயிற்றே!

அதனாலேயே, இங்கே கூட்டமும் அதிகம்!

அதற்குள் நிர்மலாவைக் கண்டு விட்ட நிர்வாகியின் முகம் மாறியது!

"சிங்காரியை எப்போது அனுப்பினேன்? அறையை விட்டு வருவதற்கு இவ்வளவு நேரமா? இவர் எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறார், தெரியுமா? ஏன் இவ்வளவு நேரம்?"



"அது வந்து... மேடம், நான் வந்து..."

என்ன சொல்லி சமாளிப்பது என்று இன்னமும் தெரி யாமல் நிர்மலா தடுமாறியபோது, கூந்தலைப் படிய வைப்பதற்காக அவள் தடவிய நீர், நிர்வாகியின் கண்ணில் பட்டு, அவளுக்கு உதவி செய்தது!

"ஓ! குளித்துக் கொண்டிருந்தாயா? சொல்வதுதானே?" என்று நித்யானந்தனின் பக்கம் திரும்பி, "நான் சொல்ல வில்லை. நிர்மலா நல்ல பெண். அவளால் பிரச்சினையே கிடையாது என்று! இன்று எதிர்பாராத விடுமுறை கிடைக்கவே நிதானமாகக் குளித்திருக்கிறாள்! சரி, நீங்கள் உங்கள் விஷயம் பேசுங்கள், மிஸ்டர் நித்யா! அப்புறம். அந்த 'லைப்ரரி லோன்' பற்றிச் சொன்னீர்களே, அது பற்றி மட்டும் கொஞ்சம் விசாரித்துச் சொல்லுங்கள்! நீங்கள் சொன்ன மாதிரி, இங்கே ஒரு 'லெண்டிங் லைப்ரரி' வைத்தால் லாபகரமாகத்தான் நடக்கும்! பெண்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும் என்றால், எனக்கு லாபமும் அதிகம் கிடைக்குமே! என்னென்ன புத்தகங்கள் நன்றாகப் போகும் என்று விசாரித்து, அதற்கு எவ்வளவு செலவாகும் என்று, நானும் ஒரு கணக்குப் போட்டு வைக்கிறேன்! பத்து நாட்களில் மறுபடியும் வருவதாகச் சொன்னீர்களே, அதற்குள் தயார் பண்ணி விடுகிறேன்! நீங்களும் முடிந்ததைச் செய்வீர்கள் என்பது எனக்கு நூறு சதவீதம் நிச்சயம்!" என்ற நிர்வாகியின் குரல் குழைந்து தழைந்தது!

ஓசியில் வரப் போகிற உதவியல்லவா? நிர்வாகி நன் றாகவே குழையடிப்பார்கள்! இந்தப் பத்து நாட்களும் நிர்வாகி அம்மாள் போடுகிற சோப்பில், நித்யனின் தோல் பிய்ந்து விடாமல் இருந்தால், அதுதான் அதிசயம்!

இளக்காரமாக எண்ணமிடும் போதுதான், பத்து நாட்களில் மறுபடி வருவதாக, நித்யன் சொல்லியிருப்பது மனதில் பட்டது!

எதற்கு? அவன் எதற்காக இங்கே, அவள் தங்கியிருக்கும் இடத்துக்கு வரவேண்டும்?

அவள் ஒன்றும், அவனை அழைக்கவில்லை!

மனைவியைப் பாராமல் இருக்க முடியாது என்கிற நேசமோ, அவனுக்குக் கொஞ்சமும் கிடையாது.

அது, துளியளவு இருந்தாலும், மணவிலக்கு வரை, ஏன் போகப் போகிறார்கள்?

ஆனால் வேறு எதற்காக வரப் போகிறான்?

அவள் கேள்வியாக நோக்கும்போதே, "உன்னைப் பார்த்தால் இப்போது குளித்ததை போலத் தெரியவில்லையே!" என்றான் நித்யானந்தன். "ஆனால், தலையில் மட்டும் இந்த நேரத்தில் ஏன் தண்ணீரை ஊற்றினாய்? ஒரு வேளை..."

இவன் முழு உண்மையையும் ஊகித்து விடுவானோ என்ற பயத்தில், "நான் குளித்தேனா, இல்லையா என்பது பற்றிய ஆராய்ச்சி நடத்தத்தான் இங்கே வந்தீர்களா?" என்று, இளக்காரமான குரலில் கேட்டாள் நிர்மலா! "அதை யாராவது வேலையற்றவளிடம் போய்ச் செய்யுங்கள்!"

அவன் விலுக்கென விறைத்து நிமிரவும், "தேவையற்றது அந்த ஆராய்ச்சி என்று புரிந்து விட்டால், வந்த விவரம் பற்றியும் சொல்லலாம்தானே?" என்று மீண்டும் ஏளனமாகவே வினவினாள்! "அதாவது, சொல்வதற்கு விவரம் ஏதேனும் இருந்தால்...!" என்று வேண்டும் என்றே சேர்த்தும் சொன்னாள்!



அவள் விரும்பியது பலித்து, குளியல் ஆராய்ச்சியிலிருந்து, நித்யானந்தனின் மனம், அவன் வந்த விஷயத்துக்குத் திரும்பியது!

இதை எப்படிச் சொல்வது என்று யோசித்தவன் போல, ஒரு சில வினாடி காலம் பேசாமலே இருந்தான்! அவன் யோசிப்பதைப் பார்த்ததும், அவளுக்கும் சிறு கலக்கம் உண்டாயிற்று!

யாருக்கும் உடம்பு கிடம்பு சரியில்லையா? ரொம்பவே?

அவர்கள் பிரிந்திருப்பதை தெரியாமல், அவனிடம் விஷயத்தைச் சொல்லி, அவன், அவளிடம் தெரிவிக்க வந்திருக்கிறானா?

யாருக்கு? அம்மா? அப்பா? அண்ணன்? எல்லாருமேவா? எல்லோரும் எங்கேயோ செல்லும்போது, விபத்து... ஏதாவது...

குடும்பம் முழுவதையும் விபத்துக்காளாக்கி, அவள் கலங்கிக் கண்ணீர் வடிக்கத் தொடங்குமுன், "நல்ல வேளையாக நேற்றே மாமா எச்சரிக்கை கொடுத்தது போல, பெரிய மாமா இன்று நம் வீட்டுக்கு வந்தபோது தயாராக இருக்க முடிந்தது!" என்றான் நித்யானந்தன்.

மாமாவாமே! அங்கே பேச்சு வார்த்தை எல்லாம் ஜரூராக நடக்கிறது போல!

ஆடு பகை, குட்டி உறவு என்பார்கள்! இங்கே குட்டி பகை, ஆடு உறவாக்கும்!

இருக்கட்டும், இருக்கட்டும்! இந்த அப்பாவைப் பிறகு ஒரு கை பார்க்க வேண்டும்! அவர் எதற்கு, அவனுடைய அத்தை கணவர் வரவு பற்றி, இவனுக்குத் தகவல் கொடுக்க வேண்டும்?

அந்த அத்தை கணவரோடு ஹைஸ்கூலில் படித்தால், அதை இன்னமுமா கொண்டாடுவது? முதலில், அந்தப் பழக்கத்தை விடச் சொல்ல வேண்டும்!

அவனது பேச்சு காதில் விழுந்தது என்பதற்கு அடையாளமாக, "என்னவாம், உங்கள் அத்தைக்கு?" என்றாள் அசுவாரசியமாக!

இவனுடைய பெரிய மாமா, அதாவது பெரிய அத்தையுடைய கணவர் இவனைப் பார்க்க வந்தால், அவளுக்கு என்ன வந்தது? சும்மா நாளிலேயே, அவனுடைய அந்த அத்தையை அவளுக்குப் பிடிக்காது! அந்தம்மாள் எப்போதும், யாரையாவது குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பாள்!

அவளுடைய கணவன் குடும்பத்துப் பெண் ஒருத்தியை நித்திக்கு மணமுடிக்க அவளுக்கு ஆசையாம். அவன் மறுத்திருக்கிறான்!

திருமணத்துக்கே மாட்டேன், முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்தவன், நிர்மலாவைப் பார்த்ததும், சம்மதித்து, விரைவாக மணமும் நடந்தேறி விட்டது என்று, நிர்மலாவிடமும் அவளுக்கு வெறுப்பு உண்டு! அது அவ்வப்போது பார்வையில், பேச்சில் வெளிப்படும்!

அவளது குணம் புரிந்து, நிர்மலாவும், அவள் அருகிலேயே போவதில்லை!

சும்மாவே அந்த அத்தை பற்றி, நிர்மலாவுக்கு அக்கறை கிடையாது! அவனையே விட்டு விலகப் போகும் இப்போது மட்டும், அது எப்படி வரும்?

ஆனால், அவளது அலட்சியக் கேள்விக்குப் பதிலாக, "வந்தது, என் பெரியத்தை கணவர் அல்ல! உன் பெரிய



பெரியப்பா!" என்று நித்யானந்தன் கூறவும், அவள் துள்ளிக் குதித்தாள்!

"பெ பெரிய பெரியப்பாவா? துபாய்ப் பெரியப்பாவா? இந்தியாவுக்கு எப்போது வந்தாராம்?" என்று ஆச்சரியமும், ஆர்வமுமாய்க் கேட்டாள்!

"பிரமாதமான கேள்வி!" என்று பாராட்டுவது போலக் கையை விரித்து, புருவம் உயர்த்திச் சொன்னான், அவன். "உனக்கு என்னோடுதானே தகராறு? குடும்பத்தில் அத்தனை பேரையுமே பேசக் கொள்ளப் பிடிக்காமல் விலக்கி வைப்பானேன்?" என்று கேட்டான் நித்யானந்தன்!



நித்யானந்தன் கேட்டது, மிகவும் சரியே!

குடும்பத்தின் அத்தனை பேரையுமே நிர்மலா ஒதுக்கித்தான் வைத்திருந்தாள்!

யாரிடம் பேசினாலும், அனுசரித்துப் போ, பொறுத்துப் போ என்று அவளுக்கே புத்தி கூறும் விதமாகவே பேச, அவளுக்கு அதைக் கேட்கப் பிடிக்காமல் நிர்மலா குடும்பத்திலிருந்தே ஒதுங்கி விட்டிருந்தாள்.

பெரியவர்கள் என்றால், திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர். பெண்ணாகப் பிறந்தவள் பொறுமையை நகையாகவே அணிய வேண்டும்... இப்படி ஓதுவார்கள்!

இளைய தலைமுறையோ, ஆள் அம்சமாக இருக்கிறார், வேறு எவளும் கொத்திக் கொண்டு போக விட்டு விடாதே என்று இன்னொரு வகையில் தொணப்புவார்கள்!

எல்லாமே, அவளுக்குச் சித்திரவதையாக இருக்கும்!

அவளுக்கு மட்டும் அவனைப் பிரிவதில் ஆசையா?

அதிலும், இருவரும் எவ்வளவு நேசமாய் இணை பிரியாமல் இருந்தார்கள் என்று, மற்றவர்களைக் காட்டிலும், அவளுக்குத்தானே தெரியும்? அந்த அன்பு விஷமானதில், அவள் எவ்வளவு தவித்திருக்கக் கூடும்?

இதையெல்லாம் மீறி, கணவனைப் பிரிவது என்று முடிவெடுக்க, அவள் எவ்வளவு ஆலோசித்திருக்க வேண்டும்? அப்படி ஆராயாமல் முடிவெடுப்பதற்கு, அவள் என்ன அறிவற்ற முட்டாளா?

இதொன்றும் யோசியாமல், ஆளாளுக்கு அறிவுரை கூறுகையில், நிர்மலாவுக்குப் பற்றிக் கொண்டு வரும்!

அவளுக்கு ஆலோசனை கூறும் அளவுக்கு, இவர்கள் என்ன கெட்டிக்காரர்கள்? ஒருவர்கூட, பள்ளி, கல்லூரிகளில் அவளது மதிப்பெண் பெற்றவர்கள் அல்ல! அவளுடைய அம்மா, அப்பா உட்பட!

கடைசி யோசனைக்காக லீவு போட்டுவிட்டுத் தாயார் வீட்டில் ஒரு வாரம் தங்கலாம் என்று எண்ணிப் போனவள், தாயின் தொணதொணப்பு பொறுக்க மாட்டாமல், நாலு நாட்களிலேயே இந்த வேலை பார்க்கும் மகளிர் விடுதியில் இடம் பார்த்துக் கொண்டு வந்து சேர்ந்து விட்டாள்!

அதிலும் முக்கியமாக இந்த 'ராணி மங்கம்மா' விடுதியில் அவள் சேரக் காரணமே அவர்களது கண்டிப்பான





சட்ட திட்டங்கள்தான்! பெண் பார்வையாளர்கள்கூட, அறைக்கு வந்து உட்கார்ந்து பேசக்கூடாது! ஆணோ, பெண்ணோ, பார்க்க வருகிறவர்கள் எல்லாருமே, வரவேற்பு அறையோடு நின்றுவிட வேண்டும்! இங்கே தங்கியிருப்பவர்களுக்கும், அவரவர் வேலைக்குச் சரியாகப் பல கட்டுதிட்டங்கள் இருந்தன!

இந்த விதிகளைக் காட்டியே, பல்வேறு நன்மை விரும்பிகளிடம் இருந்து, நிர்மலா தப்பித்துக் கொள்ள முடிந்தது!

இன்று, இங்கே வந்து கால் மேல் கால் போட்டு, ஸ்டைலாக அமர்ந்து கொண்டு குற்றமென்று சொல்கிறானே, அதே போல நட்பு, சுற்றம் அத்தனை பேரிடம் இருந்தும், விலகி, ஒதுங்கிக் கொள்ளவும் முடிந்தது!

அவரவர் குணத்துக்கு ஏற்றபடியான பரிவு, அதட்டல், வம்புப் பேச்சுகள் இல்லாமல், ஓரளவு நிம்மதியாகவும் இருக்க முடிந்தது!

ஆனால் விஷயம் இப்படி என்பதை, இவனிடம் எப்படிச் சொல்வது? அதுவும், இந்த ஒதுக்கத்தையே குறை கூறுகிற இப்போது, கூடவே கூடாது! அப்புறம், நித்யூவுக்கு இன்னமும் எக்காளம் ஆகிவிடும்!

உரிய விதமாக அவனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது போகவே, நிர்மலா பரிகாசப் பேச்சில் ஈடுபட்டாள். "பெரியப்பா வந்த காரணம், உங்களுக்கும் தெரியாது என்று இப்போதல்லவா, எனக்குத் தெரிகிறது! தெரிந்திருந்தால்தான், அப்போதே சொல்லியிருப்பீர்களே!" என்றாள், ஏளனமாக!

"எனக்கு..." என்று தொடங்கியவன், ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, விவரம் சொன்னான். "உன் பெரிய

பெரியப்பாவுடைய கடைசி மகனுக்குத் திருமணமாம்! பெண் என் சித்தப்பா மகள்! சித்தப்பாவும் அங்கே வேலை பார்ப்பதால், துபாயிலேயே பேசி முடித்திருக்கிறார்கள்! திருமணத்தை இங்கே உறவினர் மத்தியில் நடத்த வேண்டும் என்று, இருவரும் குடும்பத்தோடு இங்கே வந்திருக்கிறார்களாம்! நெருங்கிய உறவுக்குள், இவ்வளவு நடந்திருக்கிறது! இந்த விவரம் ஒன்றுகூடத் தெரியாமல் இருந்திருக்கிறாய், நீ!'' என்று பழைய குற்றச்சாட்டிலேயே வந்து நின்றான், நித்யானந்தன்.

''என்ன பெரிய நஷ்டம்? இப்போதுதான் தெரிந்து விட்டதே! என் அழைப்பிதழைக் கொடுங்கள்!'' என்று கையை நீட்டினாள் அவள்.

''இந்த அழைப்பு உனக்கு மட்டும் அல்ல!'' என்று, 'ப்ரீஃப்கேசி'லிருந்து அழைப்பிதழை எடுத்து அவளிடம் காட்டினான் அவன்.

உரிய திரு. திருமதியோடு நிர்மலா, நித்யானந்தன் என்று, இருவரின் பெயர்களும் முகவரிப் பகுதியில் காணப்பட்டன.

கணவன் மனைவியாக, இருவரும் சேர்ந்து வாழ்வது போல!

அவர்களது பிரிவைப் பற்றிப் பெரியப்பாவிடம் யாரும் சொல்லவில்லையா? சொல்லவில்லை என்றுதான் தெரிகிறது!

அவள் திகைப்புடன் பார்த்தபோது, "இது மட்டும் அல்ல!'' என்று அழைப்பிதழைப் பிரித்துக் கடைசிப் பக்கத்தைக் காட்டினான் நித்யானந்தன்.



உங்கள் நல்வரவை விரும்பும் உறவினர் பெயர்களிலும், அவர்கள் இருவரின் பெயர்களுமே முதன்மையாகக் காணப்பட்டது!

நிர்மலாவுடைய தந்தையோடு சேர்த்து, உடன் பிறந்தவர்கள் ஐந்து பேர்! அத்தனை பேருக்கும், ஆண் குழந்தைகளே பிறக்க, குடும்பத்தில் முதல் பெண்ணாகப் பிறந்தவள் நிர்மலா! ரொம்பப் பின்னால், இன்னமும் இரு பெண்கள் பிறந்தபோதும், நிர்மலா எல்லா வீட்டினருக்கும் செல்லம்!

இப்படி எல்லாருமே செல்லம் கொடுத்து, கொடுத்து தான், எதற்கும் பிடிவாதம் பிடிப்பதோடு, எதையும் யோசித்துச் செய்கிற பழக்கமே அவளுக்கு இல்லை என்று, நித்யானந்தன் குற்றம் சாட்டுவது உண்டு.

ஆனால் அது, சற்றும் நியாயமற்ற பேச்சு என்பது, இன்னொரு வேறு விஷயம்!

அதிலும், இந்தப் பெரியப்பாவுக்குக் கடைசி வரையிலும், பெண் குழந்தையே பிறக்காததால், அவருக்கு, இவளிடம் ரொம்பவே தனி அன்பு! இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தரம் துபாயிலிருந்து இங்கே வரும் போதெல்லாம், அவளுக்குத் தனியாக நல்ல பரிசுகள் வரும்! வந்த பிறகும், கூடக் கூடக் கூட்டிக் கொண்டே அலைவார்!

இப்போது மகனின் திருமண அழைப்பிலும், வரவேற்போர் பட்டியலில் முதலாவதாக அவள் பெயரைப் போட்டு விட்டார்! அவளுடைய கணவன் பெயரையும் சேர்த்து!

இது என் சொந்த வாழ்க்கைப் பிரச்சினை. நானும் என் கணவனும் மட்டுமே சம்பந்தப்பட்டது! இது எங்களுக்

குள் இருந்தால் போதும். இதை வட்ட மேஜை மகாநாடு நடத்துவது போல, மற்றவரோடு உட்கார்ந்து விவாதிக் கவோ, ஊர் முழுவதும் பறை சாற்றவோ எனக்குப் பிரிய மில்லை! என் மேல் கொஞ்சமேனும் அன்பிருந்தால், என் விருப்பத்தை மதித்து நீங்களும் யாருமே, இந்த விஷயம் பற்றி உங்களுக்குள் கூடப் பேச வேண்டாம் என்று, அந்தப் பேச்சுக்கே, மற்றவர்களிடம் தடை போட்டாள் அவள்!

அவளைப் போலவே கருத்துதான், தன்மானம் மிக்க அவளுடைய கணவனுக்கும்!

இருவரின் கருத்துக்கும் மதிப்புக் கொடுத்தோ, அல்லது யாரும் தலையிடாமல் இருந்தால் அவர்களுக்கிடையே தானாகச் சரியாகி விடாதா என்று நல்ல ஆவலாலோ, அன்றி அவரவர் பிரச்சினைகளில் இதன் சுவாரசியம் குறைந்து போனதாலோ, இவர்களது பிரிவு பற்றி பேச்சு அத்தோடு நின்று விட்டது!

மணவிலக்குக்கான பிரிவில் இருக்கிறார்கள் என்பது கூட, மிக நெருங்கிய உள் வட்டத்துக்குத்தான் தெரியும்!

எனவே, விஷயம் துபாய் வரை சென்று, பெரியப் பாவை எட்டாதது அதிசயமில்லைதான்!

ஆனால், இப்போது என்ன செய்வது என்று புரியாமல், நிர்மலாவின் மனம் குழம்பியது!

அவளது குழப்பத்தை அதிகப்படுத்துகிறவன் போல், ''பெரிய மாமாவுக்கு ரத்த அழுத்தம் சற்று அதிகமாக இருப்பதால், அவரிடம் எதையும் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று, மாமா கேட்டுக் கொண்டார்!'' என்றான் நித்யானந்தன்.



காட்டிக் கொள்ள வேண்டாம் என்றால்?

அழைப்பில் ஜோடியாகப் பெயரைப் போட்ட பெரி யப்பா, அவர்களிடம் என்னென்ன எதிர்பார்ப்பார்? சேர்ந்து நின்று திருமண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண் டும் என்றா?

எப்படி முடியும் என்பதோடு, சட்டப்படியான பிரிந்து வாழ்தலோடு, அது ஒத்துப் போகுமா என்பதிலும், நிர்மலாவுக்குக் குழப்பம் ஏற்பட்டது!

இன்னும் இதில் எத்தனை பிரச்சினைகள் இருக்கின்றன என்று யோசிக்க, யோசிக்க, நிர்மலாவுக்குத் தலை சுற்றியது!

நித்யன் கூறியது போல அவள் யோசிக்கத் தெரியாத வளாக இருந்தால், அவளுக்கு இப்படித் தலை சுற்றுமா? அது பற்றி, அவனல்லவா யோசிக்கவே இல்லை!

''இப்போது என்ன செய்யலாம் என்று உங்களுக்குத் தோன்றுகிறது?'' என்று அவனிடம் அபிப்பிராயம் கேட்கிற பாவனையில், பிரச்சினையில் முடிவு காண்கிற பொறுப்பை அவனிடம் தள்ளிவிட முயன்றாள் நிர்மலா.

ஆனால், அவன் அந்தப் பொறுப்பேற்கத் தயாராக இல்லை போலும்!

கோபத்துள் நுழைகிறவனாகி, உதட்டைப் பிதுக்கி, ''நீதான், நிறைய நிறையச் சம்பாதிக்கிற மகா புத்திசாலி ஆயிற்றே! நீயே முடிவு செய்! ஆனால், பெரிய மாமாவின் உடல்நிலைப் பற்றியும் கவனம் இருக்கட்டும்! என் சித்தப்பா பற்றிப் பிரச்சினையில்லை! அவர் நெருங்கிய உறவுதான் என்றாலும், நம் விஷயம் அவருக்குத் தெரிவது, தெரியாதது பற்றிக் கவலைப்பட ஒன்றுமில்லை!

கிண்ட வேண்டாம் என்று அவரிடம் நேரடியாக என்னால் சொல்ல முடியும்! என் சொல்லுக்கு மதிப்பும் கொடுப்பார்கள்! ஆனால்... கௌரவக் குறைச்சலாக எண்ணாவிட்டால், நிர்மலா, நீ உன் அப்பாவிடமும் கலந்து பேசுவது நல்லது! உன் முடிவு பற்றி, நான் நாளை வந்து கேட்டுக் கொள்கிறேன்'' என்று, அழைப்பிதழை அவளிடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டான்!

அதே அக்கறையற்ற, ஆனால் கூர்மையான குத்தல் பேச்சு! அதற்குள்ளே விரவித் தெளித்தாற்போலப் பல குற்றச்சாட்டுகள்!

சம்பாதிக்கிற கர்வத்தில், தான் மகா புத்திசாலி என்று நினைத்துக் கொள்கிறாளாம்! அடுத்தவரின் அபிப்பிராயத்தைக் கேட்பதையே கௌரவக் குறைச்சலாகக் கருதுகிறவளாம்!

பெற்ற தந்தைக்கும் மரியாதை கொடுப்பதில்லையாம்!

பிரிவுக்கு முன், சிலபல காலத்தில், ஒருவருக்கொருவர் நோகப் பேசியது உண்டுதான்! அப்போது அவள் வாயிலிருந்தும் சில அதிகப்படி வார்த்தைகளும் விழத்தான் செய்தன!

நித்யனும், அவளை மூளையில்லாதவள், ஊதாரி, திமிர் பிடித்தவள் என்று கண்டபடி திட்டியிருக்கிறான்!

அலுவலகத்திலும், உற்றமும், சுற்றமும் அவளை மிக உயர்வாகக் கொண்டாடியபோது, நித்யனுக்கு மட்டும், அவளிடம் உள்ள குறைகள் மட்டும்தானே தெரிந்தன!

அவன் கூறிய அந்தக் குறைகள் கூட அவனது கற்பனையில் மட்டுமே உதித்தவை என்பதுதான், அவளது அபிப்பிராயம்! மற்றபடி, அவனுக்காகவே உழைக்கிறவளை, யாராலும் அப்படிப் பேச முடியாது!



அதுவும், அவனிடம் அவளுக்கு உள்ள அன்பினால் மட்டுமே செய்ததையெல்லாம்கூட, என்னென்ன சொன்னான் என்று நினைக்கும்போதே, நிர்மலாவுக்குத் துக்கத்தில் தொண்டை அடைத்தது!

ஆனால், இப்போது அவைகளை நினைத்து என்ன பயன்?

இன்னமும் அழுகை வரும்!

எதற்கு? எண்ணி எண்ணி வடித்தது போதாது?

அதைவிட, இப்போது என்ன செய்வது என்பதில் மனதைச் செலுத்துவது எவ்வளவோ நல்லது!

நெஞ்சை அடைக்கும் துக்கமும் குறையும்., இப்போதையச் சிக்கலுக்குத் தீர்வும் கிடைக்கக் கூடும்!

தீவிரமாக யோசிக்க முயன்றவாறு, கையிலிருந்த அழைப்பிதழை வெறித்துப் பார்த்தவண்ணம், வெகு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள், நிர்மலா.

யோசிக்கவே, முயற்சி மட்டும்தான் பண்ண முடிந்தது! மூளை ஒரேயடியாக மக்கர் பண்ண, என்னமோ அந்த அழைப்பிதழில் இருந்துதான் யோசனைகள் கொட்டப் போவது போல, அதையே வெறித்தாள் அவள்!

அழைப்பிதழில், புதிதாக அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் இனி எதுவுமில்லை! அந்த அளவுக்கு மனப்பாடமாகி விட்டது!

துபாய்ப் பெரியப்பா, குடும்பத்துக்கே மூத்தவர்! அவருடைய கடைசி மகனுக்குத் திருமணம்! அவர்கள் வீட்டில் இது கடைசித் திருமணமும்கூட!

அழைப்பிதழை எடுத்துக் கடைசிப் பக்கத்தை மீண்டும் ஒரு தரம் பார்த்தாள் அவள்.



நிர்மலா., நித்யானந்தன்!

பொருத்தமான பெயர்கள்!

கடவுளைப் பற்றி, நிர்மல நித்யானந்தா என்று ஒரு பாடலில்கூட வருமாமே!

அதைப் பற்றியும், இருவரின் பெயர்களின் மோனை நயம் பற்றியும், அவர்களது திருமணத்தின்போது, காது புளிக்கும் வரை எல்லோரும் குறிப்பிட்டார்கள்!

விசித்திரம் என்னவென்றால், அப்போது, அவர்கள் இருவருக்குமே காது புளிக்கவே இல்லை! தேனாக இனித்தது! கேட்கக் கேட்க, சங்கீதம் போல, மிக இனிமையாகத்தான் இருந்தது! தனக்குத்தானே கூட சொல்லிப் பார்த்து இருவருமே ரசித்திருக்கிறார்கள்!

அவ்வளவு இனிமையான ஒன்று, எப்படிக் கசந்தது?

கசந்து, விவாக ரத்து வரை, வந்து விட்ட பிறகு, அதைப் பற்றி யோசிப்பதில் அர்த்தமில்லை!

ஆனால், எவ்வளவோ கஷ்டப்பட்டு ஒதுக்கித் தள்ளிய பிறகு, மறுபடியும் இப்போது ஏன் இந்த நினைவு?

காரணமும் பெரிதாக ஒன்றுமில்லை! இந்தக் கல்யாண அழைப்பிதழ்தான் காரணம்!

ஆனால், என்ன முயன்றும், மறக்க முடிவு செய்ததைப் பற்றித்தான் யோசனை ஓடியதே தவிர, புதிய பிரச்சினையில் அவள் மனம் பதியவில்லை!

ஆனால் ஒன்று! ஒரு பெரிய சிக்கலில் இருந்து அவளது முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் நிர்மலா தப்பியிருக்கிறாள்!



திருமணத்துக்கு அழைப்பதற்காகப் பெரியப்பா வந்த போது, அவள் மட்டும் அந்த வீட்டில் தனியாக இருந்திருந்தால், நிலைமையைச் சமாளிப்பதற்குள், திணறித் திண்டாடிப் போயிருப்பாளே! நல்லவேளை! அவள், அப்படி மாட்டிக் கொள்ளவில்லை!

'வேண்டுமானால் வீட்டில் நீ தங்கிக்கொள்., நான் ஏதாவது அறையில், யாரோடாவது இருந்து கொள்கிறேன்' என்று நித்யானந்தன் அப்போது ரொம்பப் பெருந்தன்மை போல, அவளிடம் சொல்லத்தான் செய்தான்!

என்னவோ, அவன் பெரிதாக விட்டுக் கொடுக்கிற மாதிரி, அவன் பேசுவதாகத் தோன்றவும், அவள்தான் வேண்டாம் என்றுவிட்டாள்!

அதென்ன, அவன் விட்டுக் கொடுத்து, அவள் பெற்றுக் கொள்வது?

வாழ்க்கையில், எதெதெற்கோ பிடிவாதம் பிடித்து நோகடித்துவிட்டு, இதென்ன பெரிய விட்டுக் கொடுத்தல்?

அத்தோடு, அவனது பணத்தில் அட்வான்ஸ் கொடுத்து, வாடகைக்கு எடுத்த வீடு அது! அந்த வீட்டில் இருப்பதா என்ற வீராப்பு, அவளுக்கு இராதா?

அத்தோடு, வீடு என்று இருந்தால், தொட்டுத் தொட்டு எத்தனையோ வேலைகள், நேரத்தை இழுத்துக் கொண்டே இருக்கும்! இதைப் பார்த்து, அதைப் பார்த்து என்று இரவாகிவிடும்!

அப்போதானால், படித்தபடியே, நித்யனும் பல வேலைகளைச் செய்வான்! உதவிகள் செய்வதற்கு அவனும் இல்லாமல், தனியே செய்து முடிப்பதற்குள், உயிரே வெறுத்துப் போகும்! செய்து முடிக்கப்பட வேண்டிய

எதையுமே, மறு நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடுவதோ, அவளுக்குப் பழக்கமே இல்லை!

அவனைப் பிரிவதிலும் அப்படித்தான்!

இப்படிச் சண்டையும் சச்சரவுமாக வாழ்வதற்குப் பிரிந்து விடுவதே நல்லது என்று தோன்றியதுமே, சற்றும் தள்ளிப் போடாமல், அவனிடமும் சொல்லி விட்டாள்!

ஒரு வேளை, சற்று நிதானித்து யோசித்துவிட்டு, அப்புறமாகச் சொல்லியிருக்க வேண்டுமா? அவன் வழக்க மாகக் குற்றம் சாட்டுவது போல, யோசியாமல் அவசர மாகப் பேசிவிட்டாளோ?

ஆனால், நித்யானந்தனும்தான் அப்போது யோசிக்கவே இல்லைதானே?

'நன்றே செய், அதையும் இன்றே செய்' என்கிற மாதிரி யில்... மாதிரியென்ன, அப்படியே. சொல்லவே செய்தானே!

'இப்படி நாயும் பூனையுமாக வாழ்வதற்கு, இருவரும் பிரிந்து விடுவோமா' என்று அவள் கேட்டதற்கு, 'தாராள மாய்' என்று உடனே தலையாட்டிவிட்டு, 'நன்றே செய்.. அதையும் இன்றே செய்' என்பார்கள். அதனால், முடிந்த வரை சீக்கிரமாகவே பிரிந்து விடலாம் என்றானே, அது மட்டும் அவன் ஆயிரம் முறை யோசித்து, அலசி ஆராய்ந்து சொன்ன வார்த்தைகளா?

எவ்வளவோ முயன்றும் ஒதுக்க முடியாமல், அந்தப் பழைய கதை. அதன் அடிப்படைக் காரணம், யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட மாதிரி, அவளும் அதை ஒப்பியது... எல்லாம் அவள் மனதில் படமாக ஓடலாயிற்று!






நித்யானந்தனைப் பொறுத்த வரையில், எப்போதுமே அவன் திட்டமிட்டுச் செயல்படுகிறவன்!

படிப்பு, வேலை எல்லாமே! திட்டப்படிதான் நடப் பதும்!

அவனது திட்டத்தை மீறி, அவன் செய்த ஒரே செயல், அவர்களது திருமணம் மட்டுமாகத்தான் இருக்க வேண் டும் என்பது, நிர்மலாவின் கருத்து!

அப்படித்தான் என்று, அவனும் சொல்லியிருக்கிறான்!

அவளைப் பார்த்ததும், மூளை கிறுகிறுத்துப் போய், வேலை செய்வதையே நிறுத்தி விட்டதாம்! வாய் தானா கத் திருமணத்துக்குச் சம்மதம் சொல்லிவிட்டதாம்!

'ஆசை அறுபது நாள்' மயக்கத்தின்போது, அவனே கூறியது!

மற்றபடி, ரொம்பப் பெரிய வேலைக்குப் போய், மிக அதிகமாகச் சம்பாதித்த பிறகுதான் திருமணம் செய்ய வேண்டும் என்று தீவிரமாக எண்ணியிருந்தவனாம், அவன்.

ஆனால், அப்போதே அவன் ஓரளவு நல்ல வேலையே பார்த்துக் கொண்டிருந்ததால், மகனுக்குத் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்பது, அவனுடைய பெற் றோரின் விருப்பம்!

மகனின் பொறுப்பை மருமகளிடம் கொடுத்துவிட்டு, குன்னூரில் இருந்த அவர்களது சிறு பண்ணையில், வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்க ஆசை!

அது போரடித்தால், வெளிநாட்டில் இருந்த மற்ற மகன்கள் வீட்டுக்கு ஒரு சுற்றுக் கவலையற்றுப் போய் வரலாம்!

அப்போது கூட, அவர்கள் குன்னூரில்தான் வசித்துக் கொண்டிருந்தார்கள்! ஆனால், நிம்மதியாக இருக்க முடிய வில்லையாம்! மற்ற இரு மக்களும் அமெரிக்காவில் நல்ல படியாகக் குடும்பம் நடத்த, தனிக்கட்டையாக இருந்த இந்தக் கடைசி மகனைப் பற்றிப் பெற்றோருக்குக் கவலை!

அப்போதும், பெண்ணைப் பார்., அதற்கு மேல் உன் விருப்பம் என்றுதான், நித்யானந்தனைக் கூட்டி வந் திருந்தார்கள்!

இல்லை என்று மறுப்பதற்கு, ஒரு பெண்ணின் வீட் டுக்குப் போய் இனிப்பும் காரமுமாகத் தின்ன, அவனுக்கு விருப்பமில்லை! எனவே, சும்மாக் கோயிலுக்குப் போகிற மாதிரிப் போய்ப் பார்க்கலாம் என்று அவன் கூற, அதற் கேற்ப ஏற்பாடு செய்திருந்தார்கள்!

மனமற்று, அவனுடைய அன்னையின் தூண்டுதலில் நிர்மலாவைப் பார்த்ததுதான்! பார்த்ததுமே தலையாட்டி விட்டானாம்! அதைத்தான் 'கிறுகிறுப்பு' என்பான்!

நிர்மலா நின்ற இடத்துக்குப் பின்னிருந்த தூணில், ஒரு ரதி மன்மதன் சிலை இருந்தது. அங்கிருந்து, படு பாவி மன்மதன் அவன் மேல் குறி பார்த்து மலரம்பை விட்டு விட்டான் என்றெல்லாம் அவன் கதை சொல்லி, இருவருமாகச் சேர்ந்து சிரித்ததுண்டு!



ஆனால், நித்யானந்தனிடம் ஒரு நேர்மை உண்டு.

நல்ல வருமானம் என்று எண்ணி, இந்த வேலையைப் பெரிதாகக் கருதி, நிர்மலா அவனை மணக்க நினைக்கக் கூடாது என்று அவளிடம் தெளிவாக, முதலிலேயே எடுத்துச் சொல்லிவிட்டான்.

அப்போது, நிர்மலா கம்ப்யூட்டர் கோர்ஸ் ஒன்றில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

அங்கேயே சென்று, அவளோடு சற்றுப் பேச வேண் டும் என்று, அங்குள்ள காண்டீனுக்கே அழைத்துச் சென்றான், நித்யானந்தன்!

அவனைப் பார்த்ததும், முதலில் ஏற்பட்ட மகிழ்ச்சி, படபடப்பு, பேச வேண்டும் என்றதும் மிரண்டது - அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது போல எதுவும் சொல்லி விடுவானோ என்ற அச்சம் - தயக்கத்துடன் அவனோடு சென்றது... எல்லாமே, அப்போதுபோல அவளுக்கு நினைவு வந்தது!

அவளது கலக்கத்தை, அவன் கவனித்திருப்பான் போல! எனவே 'கண்டேன் சீதையை' மாடலில், எடுத் ததுமே முதல் வாக்கியமாக, அவனைப் பொறுத்த வரை யில், அவளை மிகவும் பிடித்திருப்பதாகச் சொல்லி, அவளை அமைதிப்படுத்தி விட்டுத்தான், நித்யன் தன் எதிர்காலத் திட்டம் பற்றி, அவளிடம் தெரிவித்தான்!

அப்படி, அவளது கலக்கத்தையே தாங்காது அவளை அமைதிப் படுத்தியவனால், பிற்காலத்தில் எப்படி அவளை அவ்வளவு வேதனைப்படுத்த முடிந்தது?

இன்றளவும், அவளுக்கு, அது புரியாத புதிர்தான்!

அன்றைக்கு எவ்வளவு அழகாக அவள் மீது தனக்குள்ள அன்பை வெளிப்படுத்திவிட்டு, அப்புறமாக எதிர்காலச் சிக்கல் பற்றி எடுத்துரைத்தான்!

அதைச் சிக்கல் என்றுகூடச் சொல்ல முடியாது! வளமான வருங்காலத்துக்காக, அவன் தீட்டி வைத்திருந்த திட்டம், சிறப்பான திட்டம் என்றுதான் கூறலாம்!

அப்படித்தான், அப்போது அவளுக்குத் தோன்றியது!

அது நடைமுறைக்கு ஒவ்வாத மூடத்தனமான திட்டம் என்பதை, அனுபவித்துப் பார்த்துதானே, அறிய வேண்டியிருந்தது!

ஆனால், அப்போது நித்யானந்தன் அவனது திட்டத்தை விவரித்தபோது, விழிகளை அகல விரித்து, இமை தட்டாமல் அவனைப் பார்த்தபடிதான் அவள் கேட்டிருந்தாள்!

திட்டம் இதுதான்!

அந்தச் சமயத்தில் அவன் செய்து கொண்டிருந்த பணியிலேயே நல்ல ஊதியம்தான். ஆனால், வருங்காலத்தில் பெரிதாக வளருவதற்கான வாய்ப்புகள், அதில் அதிகம் இருக்கவில்லை! எனவே, அப்போதைக்கு அந்த வேலையை விட்டுவிட்டு, ஆறு மாதங்கள் கடுமையாக உழைத்து ஒரு தேர்வை எழுதினால் மிகவும் உயர்ந்த நிலையை எளிதாக எட்டிவிடலாம்! தேர்வை எழுதி விட்டால், அவனுக்கு வெற்றி கிட்டும் என்பது, நூறு சதவீத நிச்சயம்! வெற்றிக்குப் பின் இரு மடங்கு சம்பளத்தில், உடனேயே வேலை கிடைக்கும்! அவன் இப்போது பணிபுரியும் நிறுவனமே, தருவதாகச் சொல்லியிருக்கிறது!



அப்புறமும், மேலே போய்க் கொண்டே இருக்கலாம்!

உறவை விட்டு, நாட்டை விட்டு எங்கெங்கோ போய் அவனுடைய அண்ணன்மார், மற்றவர்கள் சம்பாதிப்பதை, அவன் இங்கே, தாய் நாட்டில் இருந்து கொண்டே எட்டிக் காட்டுவான்!

அவனது தோற்றமும், குரலும், அவளுக்கு மயக்கம் தந்த போதும், அவளும் முட்டாளல்ல!

அவன் வேலையை விடுவது, அவளுடைய வருங்காலக் கணவன் என்கிற நிலையைக் கேள்விக்குறியாக ஆக்குமா என்று கேட்க வந்திருக்கிறான்!

அவனது கண்களை நேராகப் பார்த்து முறுவலித்து, "எப்போது வேலையை விடப் போகிறீர்கள்? நம் திருமணத்துக்குப் பிறகா? அல்லது, இப்போதேயா?" என்று இனிய குரலில் வினவினாள்!

நித்யனின் கண்களிலும், முகத்திலும் தோன்றிய பிரகாசம், இப்போதும் அவளுக்கு நினைவிருக்கிறது!

அதைப் பார்த்து, அவள் உள்ளம் பூரித்ததும்!

அதற்குள், அவனுக்குப் பிடித்த மாதிரிப் பேசிவிட்டாளே!

அவன் மேற்கொண்டு தன் திட்டத்தை விவரித்தான்.

"இப்போது இல்லைம்மா! அதற்குக் கொஞ்ச காலம் பிடிக்கும்! இதுவரை வேலை பார்த்ததில், ஓரளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறேன்! இன்னும் கொஞ்சம் சேர்த்து விட்டால், படிக்கிற காலத்தில், நாம் யாரிடமும் உதவி கேட்கத் தேவையிராது! படிப்புச் செலவும் இருக்கிறதல்லவா? இன்னும் ஓர் ஆண்டாவது ஆகும்!" என்றான் அவன்.





மீண்டும், அவளது மூளை, நித்யானந்தன் சொல்லாமல் விட்டதையும் சேர்த்து ஊகித்து அறிந்து கொண்டது!

அவளுக்குக் கணவனாக வர இருக்கிறவன் தன்மானம் மிக்கவன்!

சமூகத்தில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கான கல்வியை, அவனுடைய பெற்றோர் ஏற்கனவே தந்து விட்டார்கள்! அதற்கேற்ப, பெரும்பான்மையினரைக் காட்டிலும் அதிக வருமானம் தரும் வேலையும் அவனுக்குக் கிடைத்திருக்கிறது! அந்த வகையில், அவனுடைய பெற்றோரின் கடன் முடிந்து விட்டது!

எனவே, இதற்கு மேல் அவன் உயரப் பறக்க விரும்பினால், அது அவனது சொந்த முயற்சியினால் மட்டும்தான் அமைய வேண்டும் என்று நினைக்கிறான்!

கேட்டால், அவர்கள் கொடுக்கத்தான் செய்வார்கள்! ஆனால், இவனுக்கு அது விருப்பம் இல்லை! தன் செலவைத் தானே பார்த்துக் கொள்ள வேண்டும்.

தன்மானம்! சுயகௌரவம்!

இந்தத் தன்மதிப்புதான் அவர்களது பிரிவுக்குக் காரணமாயிற்றோ?

பெற்றோரிடம் கௌரவம் பார்க்கிறவன், பெண்டாட்டியிடம் ரோஷம் காட்டாமல் விடுவானா?

அவள் சம்பாதிக்க, தான் சும்மா இருக்கிறோம் என்பது வேறு இருந்திருக்கும்!

ஆனால், அவன் சம்பாதித்து, அவள் வீட்டில் சும்மா இருக்கையில், அவள் ஒன்றும் இப்படி உணரவில்லையே!



இந்த ஆண்களுக்கு மட்டும், அப்படி என்ன ஒரு தாழ்வுணர்ச்சி?

நியாயமே கிடையாது என்று எரிச்சலோடு எண்ணினாள் நிர்மலா!

ஆனால், வருங்காலத்தில் இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரியாததால், அன்று உள்ளூரப் பெருமையும், நித்யானந்தன் மீது பெரு மதிப்பும் அவளுக்கு உண்டாக, அவனை ஒட்டியே பேசினாள்!

"அவ்வளவு நாள் காத்திருப்பானேன்? என் கம்ப்யூட்டர் கோர்ஸ் அடுத்த நாலு மாதங்களில் முடிந்து விடும்! வேலை உத்தரவாதத்துடன் கூடிய படிப்பு அது! தேவைப்பட்டால், இங்கேயே வேலை தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்! அந்தப் பணமும் இருக்கும்போது, நீங்கள் சீக்கிரமே படிப்பைத் தொடங்கி விடலாமல்லவா?" என்று கேட்டாள் அவள்!

மறுபடியும், அவன் முகத்தில், ஆயிரம் வாட் பல்பு பிரகாசமாக எரிந்தது!

மேஜை மேல் இருந்த அவளது கையைப் பற்றி அழுத்தி, "நன்றி, நிலா!" என்றவனின் முகம் சட்டெனச் சிவந்தது!

"திருமணத்துக்கு அப்புறம்தான், உன்னை அப்படி அழைக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்! உன் முகமும் நிலா மாதிரி இருக்கிறதா? பெயரிலும், அந்த இரண்டு எழுத்துக்களும் இருக்கவே..." என்றான் லேசான தடுமாற்றத்துடன்!

அவளுக்கு அப்படியே உச்சி குளிர்ந்து விட்டது!

இன்றுவரை, இது யாருக்குமே தோன்றவில்லையே!

இவன் ரொம்பக் கெட்டிக்காரன்தான்! இவனது வெற்றிகளில், சந்தேகமே தேவையில்லை!

அத்தோடு, அவளைப் பற்றி எவ்வளவு யோசித்திருக்கிறான்! இவனைக் கணவனாக அடைய, அவள் எவ்வளவோ கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

அவனது பிடியில் இருந்த கையை லேசாகச் சுழற்றி, அவனது விரல்களைப் பற்றி அழுத்தி, "நானும் உங்களையேதான் நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்றாள் வெட்கத்துடன்!

அவளது விரல்களில் லேசாக முத்தமிட்டு, "இன்னும் ஒரு மாதம் கழித்துத்தான் நல்ல முகூர்த்தம் இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்! அவ்வளவு நாளா... என்று இருக்கிறது!" என்றான் அவன் தயக்கத்துடன்!

கன்னங்களில் ரோஜா நிறம் பரவிய போதும், "எனக்கும்!" என்றாள் அவள் மென் குரலில்!

அவளது விரல்களோடு விளையாடிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து, "இன்னொன்றும் சொல்ல வேண்டுமே, நிலா! இந்தத் தேர்வு முடிந்து பெரிய வேலைக்குச் செல்லும் வரை, நம் குடும்பம் சின்னதாகவே இருப்பது நல்லது என்பது என் கருத்து! ஆனால், இதில் உன் சம்மதமும் முக்கியம்! உனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லையே?" என்று அவளுடைய அபிப்பிராயம் கேட்டான் நித்யானந்தன்!

அவளுக்குப் பொருள் புரியாமல் இல்லை!

இப்போதைக்குக் குழந்தை வேண்டாம் என்கிறான்! எப்போதுமே வேண்டாம் என்று சொல்லவில்லை! அவன் விரும்புகிற நல்ல நிலைக்கு வரும் வரை, தள்ளிப் போட விரும்புகிறான்! அவனுடைய வாரிசு, ராஜகுமாரனாகவோ, ராஜகுமாரியாகவோதான் பிறக்க வேண்டுமாம்!



இப்படித்தான், அன்று நிர்மலா எண்ணினாள்.

ஆனால், தனியாக அமர்ந்து யோசிக்கும் இன்றோ, அவனுக்கு வேறு நோக்கமும் இருந்திருக்குமோ என்று அவளுக்குத் தோன்றிற்று!

ஒரு வேளை, அவர்களது திருமணம் தோல்வியுற்றால்... அதாவது, இப்போது போலத் தோல்வியுற்றால், பிரிவதற்குக் குழந்தை தடையாக இருக்கக் கூடும் என்று அதைத் தவிர்க்கவும் நித்யன் விரும்பியிருக்கலாம் அல்லவா?

அவன் அவ்வளவு யோசிக்கக் கூடியவன்தான்!

ஆனால் அன்றைக்கு அவளுக்கு இப்படியெல்லாம் ஒன்றுமே தோன்றவில்லை!

யோசிக்காமல் முடிவெடுக்கிறவன் என்று குற்றம் சாட்டுகிற அவனும், அவள் யோசிக்க அவகாசம் கொடுக்கவுமில்லை! அவளது கை விரல்களை வருடியும், அழுத்தியும் விளையாடிக் கொண்டிருந்த அவனது விரல்களை மீறி, அவனது சொல்லுக்கு மாறாக எதையும் யோசிக்கும் எண்ணம் அவளுக்கு வரவுமில்லை!

எனவே, ஒரு மட்டியைப் போல, அன்று அதற்கும் நிர்மலா முகம் சிவக்கத் தலையாட்டினாள்!

அந்த ஒப்புதலின் பரிசாக, மீண்டும் அவளது விரல்களுக்கு ஓர் இதழொற்றுதல் கிடைக்கவே, அதிலேயே அவள் அகமகிழ்ந்தும் போனாள்!

அந்த மகிழ்ச்சி, திருமணமாகி ஆறு மாதங்கள் வரையிலும் கூட நீடித்தது!

அதன் பிறகு, நிர்மலாவுக்குச் சென்னையிலேயே வேலை கிடைத்தது.

அப்போதுதான், தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்கிறவளாகி, கணவனை வேலையை விடச் சொன்னாள் அவள்!

ஒரு முட்டாளைப் போல அதற்குள்ளாகவே, சின்னக் குழந்தைகளைப் பார்க்கும்போது, அவளது உடலில் ஒரு நெகிழ்வு வரத் தொடங்கியிருந்தது!

அவன் படிப்பைத் தொடங்கினால்தானே, சீக்கிரமாகப் பரீட்சையையும் எழுதுவான், எழுதி வெற்றி பெற்று, பெரிய வேலை கிடைத்து, அவளுக்கு ஒரு குட்டி ஆனந்தன் பிறப்பான்?

வெட்கமும் சிவப்புமாக அவள் விஷயத்தை விளக்கிய போது அவனுக்கும் அது பிடித்த மாதிரிதான் தோன்றியது!

அவனுமே அதே யோசனையிலேயே இருந்தது போல, சந்தோஷமாகவே வேலையை விட்டான்!

நிறுவனம் கொடுத்திருந்த வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தபோது, முதல் அதிர்வு உண்டாயிற்று!

அதை, அதிர்வு என்றுகூடச் சொல்ல முடியாது! சிறு உறுத்தல்! சோபா, கட்டில், சாப்பாட்டு மேஜை, ஹீட்டர் என்று சகல வசதிகளுடன் கூடிய வீட்டை விட்டு விட்டு, ஒரு வெற்று ப்ளாட்டை வாடகைக்கு எடுத்து அதில் சமாளித்து வாழ நேர்ந்ததில் ஏற்பட்ட சங்கட நிலை!

அப்போதும், கட்டில், பீரோ போன்ற சில பல பொருட்களை, அவளுடைய தந்தையிடம் கேட்டால் வாங்கிக் கொடுத்திருப்பார்! ஆனால், அவனது சுயகௌரவம் இதற்குத் தடையாக இருந்தது!



முதலில் ஜம்பமாக, எதுவும் தேவையில்லை என்று விட்டு, இப்போது போய்க் கேட்பதா என்று நித்யனுக்கு... அவனது தன்மானத்துக்குப் பிடிக்கவில்லை!

அவை இல்லாமல் சமாளிப்போம்! அல்லது, இப் போதைக்குக் குறைந்த விலையில் சின்ன அளவில் நாமே வாங்கிக் கொள்வோம் என்றான் அவன்!

அவ்வாறே, பழைய பொருட்களை விற்கும் கடையில் மேஜை, நாற்காலி என்று அவசியத் தேவையாக இருந்த வற்றை வாங்கினார்கள்!

ஆனால், கட்டில் மட்டும் பழசு வாங்க, இருவருக்குமே ஏனோ பிடிக்கவில்லை. என்னவோ, ஒரு ஜமீன்தார் வீட்டுக் கட்டில் என்று, ஒரு கட்டிலைக் காட்டி, அந்த விற்பனை ஆள் ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்தபோதும், இருவருமே மறுப்பாய்த் தலையசைத்துத் திரும்பி வந்து விட்டனர்.

''அதற்கு வேறு ஏற்பாடு செய்கிறேன். அதுவரை நமக்குப் பாய் போதும்.'' என்று விட்டான் நித்யானந்தன்.

ஆனால், வேறு ஏற்பாடு செய்கிற எண்ணமே இல்லாத வனாக, அலைந்து திரிந்து அவன் வாங்கி வந்திருந்த ஒரு மூட்டை புத்தகங்களில் அவன் மூழ்கிவிட டிரஸ்ஸிங் டேபிள், கட்டில் போன்ற, மிகவும் தேவையானவை பற்றி, அவனிடம் பேசக்கூட நிர்மலாவால் முடியவில்லை!

எப்போதாவது வெளியே போய், காய்கறி, மளிகைச் சாமான்கள் வாங்கி வருவான்!

வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், அவன் வாங்கி வரும் அத்தனையும், ஓரளவு சிக்கனத்தைப் பறை சாற்றின!

அவளாக ஏதாவது நல்லதாய் உண்ண வாங்கி வந்தாலும் பிடிக்காதது போலக் காட்டிக் கொண்டான்!

அவளுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை!

அந்த முதல் ஆறு மாதங்களில் ரசித்து உண்டவை தானே? இப்போது என்ன வந்துவிட்டது என்று, நிர்மலா குழம்பித் தவித்தாள்!

அவன் பிரிவுக்குத் துடிக்கிறான் என்று அறிந்து கொள்ள, அவளுக்கு இன்னமும் இது போன்ற பல சம்பவங்கள் தேவைப்பட்டன!

அவை, நிறையவே நிகழவும் செய்தன!



## 4

ஒரு நாள் ஓர் அழகான பூக்குவளையும், அதில் வைக்க சில செயற்கை மலர்களையும் வாங்கி வந்து, அழகுற அடுக்கி மேஜை மேல் வைத்துவிட்டு, அவனது வியப்புடன் கூடிய ரசனைக்காகக் காத்திருந்தாள் அவள்.

ஒரு பழம்பொருள் விற்கும் கடையின் 'ஷோ கேசி'ல் அந்தப் பூக்குவளையைப் பார்த்தவள், அதிலிருந்து கண்ணை எடுக்க முடியாமல், போய்க் கொண்டிருந்த பஸ்சில் இருந்து, அடுத்த நிறுத்தத்தில் இறங்கி, ஆட்டோவில் திரும்பச் சென்று, அந்தப் பூக்குவளையை வாங்கினாள்!



வெறும் பூக்குவளையை வைத்து என்ன பிரயோஜனம்?

தினம் தினம், இந்தக் குவளைக்கு ஏற்ற உண்மையான புதுப் பூக்களை வாங்குவது. அப்போதைய நிலையில், அதிகப்படிச் செலவு!

இப்படி யோசித்து, சற்றுத் தொலைவில் இருந்த ஒரு தரமான செயற்கை மலர்கள் கடைக்கு மீண்டும் ஆட்டோவில் சென்று, குவளைக்கு ஏற்ற அளவில் பூக்களை வாங்கி வந்து, அழகுற அடுக்கி வைத்துவிட்டு, ஆவலாகக் காத்திருந்தால், நித்யானந்தன் அதை ரசிக்காதது மட்டுமின்றி, காட்டுக் கத்தலாகக் கத்தித் தீர்த்து விட்டான்!

அவசியமற்றுப் பணத்தை வீணாக்கியிருக்கிறாளாம்! கொஞ்சம் மூளையைப் பயன்படுத்தி யோசித்திருந்தால், இந்த வீண் செலவைச் செய்திருக்க மாட்டாளாம்!

அவளா யோசிக்கவில்லை?

தினம் தினம் ஆர்க்கிடும், லேடீஸ் லேசுமாக வாங்கிச் செருகியிருந்தால், அவசியமற்ற, அதிகப்படியான வீண் செலவு என்றால் என்னவென்று, நித்யனுக்கு அப்போது புரிந்திருக்கும்!

அது கூடாது என்று, அவள் யோசித்துச் செயல்பட்டால், அதைப் பாராட்டக்கூடத் தெரியவில்லையே!

உள்ளம் குமுறத் தனியாகப் போய்ப் படுத்துக் கொண்டாள் நிர்மலா! அவனும், அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை!

மறுநாள், நித்யன் வாங்கி வந்த தடிமனான புத்தகத்தின் விலை, ஆயிரத்து நூறு ரூபாய்!

இது வீண் செலவில்லையா? படிப்பதற்குத் தேவைப்பட்டால், 'லைப்ரரி'யில் எடுத்துப் படிக்க வேண்டியது தானே?

சொன்னதற்கு, ''உளறாதே!'' என்றான் ரத்தினச் சுருக்க மாக, அவன்!

உளறலா?!

அலுவலகத்தில் பக்கத்து சீட் பிரதீப், அவளது ஒவ்வொரு வார்த்தையும், கோர்த்து பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய முத்து என்கிறான்! இவனுக்கு உளறலாகத் தெரிகிறது!

அவள் ஒன்று சொல்லி, அதற்குப் பதில் சொல்ல அவனுக்குத் தெரியவில்லை என்றால், அவள் பேச்சு உளறல்! அவன் என்ன சொன்னாலும், அது வேத வாக்கியம்! அவ்வளவுதான் விஷயம்!

ஆத்திரத்தோடு, பிரதீபனின் பாராட்டைக் கணவனிடம் எடுத்துச் சொன்னாள்!

ஆனால், 'சிரிக்கச் சிரிக்கச் சொல்வோர் பிறர், அழ அழச் சொல்வோர்தான் தமர்' என்று பழைய பாடலே இருக்கிறது என்றான் நித்யானந்தன்.

ஆனால், அழ வைக்க மட்டுமே பேசுகிறவர்களும் 'தமர்' ஆக மாட்டார்கள் என்று வாதாடினாள் நிர்மலா!

பேச்சு நீண்டு, ஆளுக்கொரு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்ள அன்றைய உணவு வீணாயிற்று!

இந்தப் பூவுக்கே இப்படி என்றபோது, ஆளுயர நிலைக் கண்ணாடிக்கு நித்யன் கத்தியது, குறைவுதான்!

ஆனால், வேலைக்குச் செல்லும்போது, வீட்டில் இருந்த குட்டி முகம் பார்க்கும் கண்ணாடியில் முழுத் தோற்றத்தையும் பார்க்க முடியாமல், சேலை கட்ட அவள் பட்ட பாடு, அவளுக்குத்தானே, தெரியும்?



''என் வருமானத்தில்தானே வாங்கினேன்?'' என்று, அவள் திருப்பிப் பேசியது அப்போதுதான்!

அப்புறம் எத்தனையோ சண்டைகள்! நோகடிக்கும் எத்தனையோ வார்த்தைகள்!

சண்டைக்குப் பிறகு நேரும் சமாதான முயற்சிகள், கொஞ்சல், குலாவல்கள் மெல்ல மெல்ல நின்று போயின.

பொறுக்க முடியாமல்தான், பிரிந்து விடலாம் என்று அவள் ஒரு நாள் சொன்னது!

அதற்காகவே காத்திருந்தான் போலும்!

இப்படிக் கீரியும் பாம்புமாக வாழ்வதற்கு 'கண்ணில் படாத தூரத்தே நீங்குவது, எவ்வளவோ நல்லது என்று அவனும் முடித்து விட்டான்!

'கொம்புளதற்கு' என்று தொடங்கும் அந்தப் பாடல் அவளுக்கும் தெரியும். அவளது கண்ணில் படாத தூரம் போவது நல்லது என்றால், அந்தப் பாடலில் வருகிற 'வம்பு செறி தீங்கினர்' அவளா?

அவர்களில், யார் பாம்பு என்று அவள் ஆத்திரமாகக் கேட்டதற்கு, யார் எதுவாக இருந்தாலும், அந்த ஒப்புமையின் பொருள் ஒன்றுதான் என்று, அவளது மூடமதிக்குப் புரிந்தால் போதும் என்றான்!

மூட மதியாமே! அப்படியானால், அவள் முட்டாளா?

வேலையில் சேர்ந்து ஆறே மாதத்துக்குள் அவள் செய்து கொடுத்த ப்ராஜெக்ட் பிடித்துப் போய், அவளுக்குப் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் அப்போதுதான் கொடுத்திருந்தார்கள்!

'பொன் மலர் நாற்றமுடைத்து' என்பதற்குச் சரியான உதாரணமாக, அவளுக்கு அழகோடு அறிவும் மிகுதியாக இருக்கிறது என்று, முன்தினம்தான் பிரதீப் சொன்னான்!

அவளுக்குப் போய் மூடமதியாமா?

அதுவும், அவளைப் போலத் திறமையால் மேல் பதவியை எட்ட முடியாமல், ஒரு மூட்டை புத்தகங்களைப் படித்துக் கொண்டு, ஒரு பைசா சம்பாதிக்கத் துப்பில்லாமல் உட்கார்ந்திருப்பவனுக்குத்தான் மூடமதி என்று, நன்றாகச் சம்பாதிக்கிற ஒருத்தி பதில்கூடச் சொல்ல மாட்டாளா, என்ன?

சொன்னாள்!

அவ்வளவுதான்! அவனுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்து விட்டது!

உண்மையைச் சொன்னால், உடம்பு எரியும்தானே?

"ஆமாம் தாயே, உன்னைப் போய் மணந்து கொண்டேன், பார்! எனக்கு நிச்சயமாக மூடமதிதான்! உன் சம்பாத்தியத்தையே நீயே வைத்துக் கொள்! இப்போதே இங்கிருந்து வெளியே போய், என் செலவை நானே பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றான் அவன்!

சொன்னதோடு மட்டுமின்றி, பெட்டியொன்றை எடுத்து, சினிமாக்களில் வருகிற மாதிரி, துணிகளை அதில் அடைக்கவும் தொடங்கினான்!

அவன் துணிகளோடு, சீப்பு, பல் துலக்கும் பிரஷ், ஷேவிங் பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து வைக்கவும், நித்யா உண்மையாகவே வெளியேறப் போகிறான் என்று நிர்மலாவுக்குப் புரிந்து போயிற்று!



ஒரு கணம் 'ஹோ'வென்று, அவளுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது.

ஆனால் உடனேயே, அப்படித்தான் அன்றில் பறவைகளைப் போல, ஒன்றி வாழ்வது பாழாகப் போகிறதாக்கும் என்று ஒரு விரக்தியும் உடனே தோன்றிவிட, அதிர்ச்சியின் தாக்கம் குறைந்து யோசித்து, உருப்படியாக, ஒரு வேலை செய்தாள்!

நித்யன் இங்கிருந்து வெளியேறினால், வீட்டில் அவள் இருப்பதாக அல்லவா, ஆகும்?

அவனோடு மகிழ்ச்சியாகவும், கோபம், வருத்தமாகவும் இருந்த நிலைகள், அந்த நிகழ்ச்சிகள் நடந்த இடங்கள் என்று, ஒவ்வொன்றாக நினைவு வந்து துன்பப்படுத்தாது?

தன்னந்தனியாக மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருக்கும்போது, இந்த நினைவுகளில் அழுகை வராதா?

இன்னொரு முக்கியமான விஷயமும் இருந்தது!

உறவினர், நண்பர்கள் என்று வருவோரை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை! அவர்களில், யார் முகத்தில், எப்படி விழிப்பாள்? என்னவென்று விளக்குவாள்?

வரும் நண்பர்கள், உறவினரிடம் நித்யன் அங்கே இல்லாதிருப்பதையும், அதன் காரணத்தையும் விளக்குவது, அவர்கள் அதற்குக் கருத்துத் தெரிவிப்பது, அதற்குத் தன்னிலை விளக்கம் கொடுப்பது... என்று பல்வேறு நிலைகளும் கற்பனையில் படமாக ஓட, அவளுக்கு உடம்பே கூசிக் குறுகிப் போயிற்று!

வேதனையும், அவமானமுமான இந்தத் துன்பத்தை அவள் தலையில் கட்டிவிட்டு, இவன் எங்கோ தனியாகத் தங்கி, நிம்மதியாக இருப்பதா?

அதற்கு, அவள் தலையாட்டுவதா?

திருமணத்துக்கும், அதைத் தொடர்ந்த அவனது திட்டங்களுக்கும் தலையாட்டிவிட்டு, அவள் பட்டுக் கொண்டிருக்கும் வேதனைகள் போதாதா?

தொடர்ந்து அவளை வருந்த வைக்கும், அவனது அடுத்த திட்டம், இது!

உற்றார், உறவினரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், கூனிக் குறுகி, திணறித் திண்டாடி, அது பொறுக்காமல், அவன் காலில் வந்து விழ வைக்கும் திட்டம்!

இதற்கு இடம் கொடுத்தாள் என்றால், சூடு பட்ட பூனை என்கிறார்களே. அந்த ஐந்தறிவு மிருகத்தை விடவும் புத்தியற்றவள் ஆகிவிடுவாள்! அதற்கு விடுவதா?

ஒரு கணம் யோசித்துவிட்டு, கைப்பையை எடுத்துக் கொண்டு, நேரே அவனது அறைக்குள் சென்றாள்.

''பாருங்கள் இது உங்கள் வீடு! நீங்கள் முன் பணம் கொடுத்து, உங்கள் பெயரில் வாடகை ஒப்பந்தம் எழுதி இருப்பது! இதில் தொடர்ந்து வசிப்பதற்கு, நான் தயாரில்லை! சொல்லப் போனால், இந்த வீட்டில் ஒரு சின்ன இடத்தைப் பார்க்கக்கூட, எனக்குப் பிடிக்கவில்லை! அதனால், இங்கிருந்து நான் வெளியே போய் விடுகிறேன்! என் துணிமணிகளை அப்புறமாக எடுத்துக் கொள்ளுகிறேன்!'' என்று மடமடவென்று மொழிந்துவிட்டுத் திரும்பிப் பாராமல் அங்கிருந்து வேகமாகக் கிளம்பினாள் நிர்மலா!



என்னவோ அக்கறை உள்ள கணவனாக, அவள் பின்னோடு ஓடி வந்து, ''திரும்பவும் அசட்டுத்தனம் பண்ணாதே, நிர்மலா! திடீரென்று வீட்டை விட்டு வெளியே போய் எங்கே தங்குவாய்...'' என்று கரிசனம் போலக் கேட்டவனை இடையிட்டு, ''நீங்கள் மட்டும் திடீரென்று எங்கே தங்கப் போவதாக உத்தேசம்? ஒரு வேளை தங்குமிடம் ஏற்பாடு செய்து விட்டுத்தான், இப்படியொரு சண்டையைத் திட்டமிட்டுத் தொடங்கினீர்கள் போல?'' என்று கேட்கையிலேயே, அவளுக்கு ஆத்திரம் பொங்கியது!

விஷயம் அப்படித்தான் இருக்க வேண்டும்! திட்டமிட்டுக் கிளப்பிய தகராறு! இல்லாவிட்டால், ஒரு கட்டிலை வாங்கியதற்காக... அதுவும், அவனிடம் பணம் கூடக் கேளாமல், அவளது வருமானத்தில் வாங்கியதைக் காரணமாக வைத்து, இப்படித் திட்டுவானா?

இந்த ஒன்றை எப்படியோ, அவள் கண்டு கொண்டாள்! இதைப் போல எத்தனை சச்சரவுகளை, நித்யன் வேண்டுமென்று தொடங்கிப் பெரிய சண்டையாக வளர்த்தானோ?

ஏமாந்த உணர்ச்சி அவளைக் கொதிநிலைக்கே கொண்டு சென்றது.

கண்டு கொண்டாளே என்று, அவனுக்கும் கோபம் வந்தது போலும். ''உளறாதே!'' என்று அதட்டினான்! ''நான் வேறு ஏற்பாடு செய்திருக்கிறேன், என்று சொன்ன பிறகும், ஒரு தத்தியைப் போல இந்த விலை கொடுத்து, நீ இந்தக் கட்டிலை வாங்கி வருவாய் என்று எனக்கு எப்படித் தெரியும்? எப்போதும், மடத்தனமாகவே முடிவெடுப்பது! மூளையைப் பயன்படுத்துவதே இல்லை!'' என்றான் அவன் எகத்தாளமாக.

தத்தியா? உண்மைதான்! தத்தியேதான்! இல்லாவிட்டால், அவனை மணப்பாளா?

''தத்தியாய், நான் செய்த ஒரே ஒரு மடத்தனமான முடிவு, உங்களை மணக்கச் சம்மதம் சொன்னது! நல்ல வேளையாகப் பழைய காலம் போல இல்லாமல், திருமணம் இப்போது நிரந்தரம் இல்லை! அந்த மட்டும் தப்பித்தேன்! காலுக்கு உதவாத செருப்பை, இலகுவாகக் கழற்றி எறிந்து விடலாம்!'' என்று, அவனுக்குச் சற்றும் குறையாத எகத்தாளத்துடனேயே பதில் கொடுத்தாள் நிர்மலா!

கை நீட்டி விடுவோமோ என்று அஞ்சியவன் போலக் கையை இறுக மூடிக் கொண்டு நின்றான் நித்யானந்தன்.

ஒரு வேக மூச்சின் பின், ''அந்த விஷயம், ஏற்கனவே முடிவு செய்தாயிற்று. ஆனால், இப்போது நீ எங்கே போய்த் தங்குவாய் என்பதைப் பார்ப்போம்! இன்னமும், இந்த நாட்டில் காந்தி கண்ட ராமராஜ்ஜியம் நடைமுறைக்கு வரவில்லை! பெண்கள் தனியே சுற்றுவது ஆபத்தை வலிய அழைப்பது போல! அதுவும் அழகான பெண் என்றால், ரொம்பவே ஆபத்து என்பதால்...'' என்றவனைக் கோபமாக இடையிட்டாள் அவள்.

அழகு பற்றிப் பேசி, அவளை இளக வைக்க முயற்சிக்கிறான்! இன்னமும், இதில் ஏமாற, அவள் என்ன அடி முட்டாளா?

''பரவாயில்லையே! முட்டாள், தத்தி என்பதற்கு இடையே, இன்னமும் அழகெல்லாம் கண்ணில் படுகிறதோ!'' என்றாள் இளக்காரமாக!



''அழகுக்கென்ன? பாம்பு கூட அழகுதானே? ஆனாலும், அதுவும் அடிபட்டுச் சாகிறது என்பதால்தான் சொல்வது!'' என்று இன்னமும் கடுமையாகத் தாக்கினான் அவன்!

''என்னைப் பாம்பு என்றா சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டவளுக்குத் தொண்டை அடைத்தது!

நிலவோடு ஒப்பிட்டு, நிலா என்றே அழைத்தவன் இப்போது பாம்பு என்கிறான்! அந்தப் பாம்பின் விஷமாகவே அவனது மனம் மாறிவிட்டது என்பதை அறிய, இதற்கு மேல், என்ன ருசு வேண்டும்?

முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''அப்படித்தான் சீறுகிறாய்!'' என்றான் அவன்.

அவளுக்கும்தான் முகம் திருப்பத் தெரியும்!

''பாம்போ, பல்லியோ? நாம்தான் பிரிந்து விடப் போகிறோமே! எனக்கு என்ன நேர்ந்தால், உங்களுக்கு என்ன? ஒரு வேளை, தமிழ்நாட்டுப் பெண்களுக்குக் காவல்காரனாக, உங்களை யாரேனும் நியமித்து இருக்கிறார்களா? ஆனால், பரவாயில்லை! ஏதோ அந்தக் காவல்காரன் வேலையாவது கிடைத்ததே! நான் போன பிறகு, வயிற்றை நிரப்ப உதவும்!'' என்றாள் குத்தலாக!

''ஏய்..!'' என்று ஆத்திரமாக அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவன், அப்படியே நின்றான்! முஷ்டி இறுகக் கை மூடி நின்றவன், ''யோசிக்காமல் பேசாதே! உன் பாதுகாப்புக்காகத்தான் சொன்னேன்!'' என்றான் அவன்.

'யோசிக்காமல்' என்ற வார்த்தையில் மீண்டும் கொதித்து, ''என் பாதுகாப்புக்காகவா? அல்லது, அந்தச் சாக்கில் இந்த வீட்டு வாடகையை என் தலையில் கட்டுவதற்காகவா?'' என்று எகத்தாளமாகக் கேட்டாள் நிர்மலா.

அதற்குப் பிறகு, அவன், அவளைத் தடுக்கவில்லை!

உள்ளே போய், ஒரு சாவியை எடுத்து வந்து அவள் முன் வைத்தான்! "நீ ரொம்பக் கெட்டிக்காரி என்று நன்றாகப் புரிந்து கொண்டேன்! இப்போது நான் வெளியே போகி றேன்! இந்த வீட்டில் உனக்கு என்னென்ன வேண்டுமோ அத்தனையும், ஏன் எல்லாவற்றையும் நீ எடுத்துப் போக லாம்! இப்போதே எடுத்துப் போக முடியாததையும் பிறகு வந்து எடுப்பதற்கு வசதியாகச் சாவி உன்னிடமே இருக் கட்டும்! வருகிறேன்!" என்று, அவளது முகத்தைப் பாராமலே சொல்லிவிட்டு, மடமடவென்று வெளியே போய் விட்டான்!

காதுக்குள் ஹோவென்று ஏதோ பேரிரைச்சலாக ஒலிக்க, சற்று நேரம் நிர்மலாவுக்கு ஒன்றுமே புரிய வில்லை!

பிரிவு என்று திட்டவட்டமாக முடிவாகி விட்டது!

நீ எக்கேடும் கெட்டுப் போ. ஆனால் நான் திரும்பி வருவதற்குள் என் வீட்டிலிருந்து போய்த் தொலைந்துவிடு என்று சொல்லாமல் சொல்வது போல, வெளியே போகச் சொல்லிவிட்டு, அவனே முந்திக் கொண்டு வெளியேயும் போய்விட்டான்!

அவளது திருமணம் முழுதாக முறிந்துவிட்டது!

கடவுளே! இதுதான் திருமணமா? அப்படி இதுதான் திருமணம் என்றால், தொடரக் கூடிய ஈரேழு பிறவிக்கும், அவளுக்குத் திருமணமே நடவாது போகட்டும்!

போகலாம் என்று சொல்லிச் சாவியையும் தந்த பிறகு, அவன் திரும்பி வரும் வரை அங்கேயே இருப்பது மகாக் கேவலம்!



எங்கே போவது, என்ன செய்வது என்று புரியாமல் சில நிமிஷங்கள் மருட்டியபோதும், முயன்றால் முடியாதது என்ன இருக்கிறது?

உடன் பணி புரியும் தோழி ஒருத்தியோடு தொடர்பு கொண்டு, உடனடித் தங்கலுக்கு ஏற்பாடு செய்து கொண்டு, நிர்மலா அங்கிருந்து கிளம்பினாள்!

இவள் தங்கியிருக்கும் இந்த விடுதியைப் பற்றிப் பலர் கூற, அவள் கேட்டதுண்டு! தோழி வீட்டில் சிபாரிசில், விடுதியில் இடமும் எளிதாகவே கிடைத்தது!

அப்போதும், கடைசி முடிவுக்கு வருமுன், விடுமுறை எடுத்துக் கொண்டு, பிறந்த வீட்டில் சில நாட்கள் தங்கி யிருந்து யோசித்துப் பார்த்தாள்!

ஆனால், நாலே நாட்களில், சுவரில் அடித்த பந்து போலச் சென்னைக்குத் திரும்பி வந்து, விடுதியில் சேர்ந்து விட்டாள்!

வீட்டிலிருந்து முடிந்தவரை துணிமணிகளை எடுத்து வந்தாள். ஆனால், அவர்களது பிரச்சினையின் ஒட்டகத் துரும்பாய்க் கடைசி முடிவெடுக்க வைத்த கட்டிலை மட்டும் அங்கேயே விட்டு விட்டாள்.

இவ்வளவு பெரிய அரண்மனைக் கட்டிலை, விடு திக்குக் கொணர்ந்து எங்கே போடுவது?

அத்தோடு, அந்தக் கட்டிலை மீண்டும் கண்ணால் பார்க்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை!

ஆனால், அதை வெளிப்படையாகச் சொன்னால், அவன் இளக்காரமாக ஏதேனும் சொல்லக் கூடும் என்ப தால், அவனால் கட்டில் என்று ஒன்றை எப்போதேனும்

வாங்க முடியுமோ, என்னவோ, அதனால், அந்தக் கட்டிலை, அவளது பிரிவுக்கான நினைவுப் பரிசாக வைத்துக் கொள்ளும்படி, நக்கலாகக் கூறிவிட்டு, அதற்கு மேல் அங்கே நில்லாமல், மடமடவென்று வெளியே வந்து விட்டாள் அவள்!

அதன் பிறகு, இருவரும் பேசியது வக்கீல்கள் மூலமாகத்தான்!

அப்புறமாகக் குடும்பக் கோர்ட்டில் மூன்று சந்திப்புகள்!

ஒவ்வொரு சந்திப்பும், ஒரு சித்திரவதைதான்!

அவனைப் பார்த்ததுமே, முதல் சந்திப்பிலிருந்து அத்தனையும் நினைவு வரும்!

கொஞ்சிக் குலாவியதோடு, கொத்திக் குதறியதும் சேர்ந்து மனத்திரையில் உலா வர, தவியாய்த் தவித்துப் போவாள்! அதை வெளிக்காட்டாமல் சமாளிப்பது வேறு!

அந்தத் தவிப்பில், வெளிநாடுகளில் எல்லாம் இப்படியா இழுத்து, இழுத்துத் துன்புறுத்துகிறார்கள்? வேண்டாம் என்றால் விட்டுத் தொலைப்பதுதானே என்று அவள் வெறுப்புடன் எண்ணிக் கொள்வாள்.

ஒரு வழியாக, அந்தத் துன்பங்கள் எல்லாம் முடிந்து, "கடைசியாகக் கொஞ்ச காலம் பிரிந்திருந்து பாருங்கள்! அதன் பிறகும், இருவருக்கும் இதே கருத்து நீடித்தால், மணவிலக்கு அமுலுக்கு வரும்" என்ற கோர்ட் உத்திரவின்படி அவர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், இப்படி ஒரு பிரச்சினையா?

இதை எப்படிச் சமாளிப்பது?

நிர்மலா குழம்பினாள்!





# 5

வலி தந்த பழைய நினைவலைகள் ஒருவாறு ஓய்ந்து அப்போதைய பிரச்சினைக்கு வந்து சேர்ந்த நிர்மலாவுக்குச் சும்மாவே உடலும் மனமும் சோர்ந்து போயிருந்தன!

எப்படித் தொடங்கியது, எப்படி முடிந்து விட்டது என்ற ஏக்கம்!

சிந்திய பாலுக்கு அழுவது போல முட்டாள்தனம்தான்! ஆனால், அவளால் தவிர்க்க முடியவில்லை!

மனதோடு போராடிக் களைத்து மீண்டும் வந்தால், இப்போது என்ன செய்வது என்ற கலக்கம், அவளை இன்னமும் சோர்வுறச் செய்தது!

பெரியப்பாவிடம் எதையும் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று, நித்யானந்தனிடம் தந்தை எச்சரித்திருக்கிறார்!

அவருக்கு இதயத்தில் பிரச்சினை உண்டு என்பது, நிர்மலாவும் அறிந்ததே!

ஆனால், மாமா, மருமகன் குலாவல் அவளுக்குத் தெரியாமல் நடந்துகொண்டுதான் இருக்கிறது என்பது, இன்னொரு கணக்குத் தீர்க்கப்பட வேண்டிய விஷயம்! இருக்கட்டும்! அதை, அப்புறம் பார்க்கலாம்!

இப்போது முதல் முக்கியம் பெரியப்பாதான்!

குடும்பத்தில் மூத்தவர் என்பதால், எல்லோருக்கும் அவரிடம் தனிப்பட்ட மரியாதை உண்டு!

அதற்காக, யாருடைய சொந்த வாழ்விலும் அவர் தலை யிடுவார். அவருக்காக மற்றவர்கள் முடிவுகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் இல்லை! மற்றவர் களை மதிக்கத் தெரிந்த அவர், அந்த மாதிரி அசட்டுத் தனங்கள் ஏதும் செய்வதே கிடையாது! ஆனால், அவரது மனம் வருத்தப்படும்படியான விஷயங்களை அவரிடம் மற்றவர்கள் அவசரப்பட்டுச் சொல்வதில்லை! பாசம், மென்மை இரண்டுமே அவருக்கு அதிகம் என்பதால், முடிந்தவரை தள்ளிப் போடுவார்கள்!

நிர்மலாவின் திருமணம் தோற்றது பற்றி அவருக்குத் தெரியாததும் அப்படித்தான் இருக்க வேண்டும்!

மற்றவர்களைப் போலவே அவளும் இப்போது அவசரப் பட்டு அவரிடம் எதையும் சொல்ல வேண்டாம் என்று தான் நிர்மலாவுக்குமே தோன்றியது!

மகனது திருமணத்துக்கு என்று சந்தோஷமாக வந் திருப்பவர்! ஒரு மாதம், நாற்பது நாட்களில் புறப்பட்டு விடுவார்! அதற்குள்ளாக, அவரது மனதை நோகடிப் பானேன்?

எப்படியும் திருமணத்துக்குச் செல்லத்தான் வேண்டும்! அத்தோடு சேர்ந்த பலப்பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளத்தான் நேரும்! அந்தத் தருணங்களில் அவளைப் பார்க்கும் போதெல்லாம், பெரியப்பாவின் மனம் நோகும்!

எதற்கு வீணாக? அதுவும், தந்தை வேறு எச்சரித் திருக்கையில்?



மகனின் திருமணம் முடிந்து, அவர் துபாய்க்குத் திரும்பிச் சென்றபின், கொஞ்ச நாள் கழித்து, ஒரு கடிதத் தில், ஒத்துப் போகாததால் கணவன் மனைவி பிரிந்து விட்டார்கள் என்று தகவல் தெரிவித்து விட்டால், விஷயம் அத்தோடு முடியும்!

அதுவரை, அப்படி இப்படி என்று, பெரியவர் காதில் பூச்சுற்றித்தானாக வேண்டும்! சில அசுசியான நிலைமை களைச் சமாளித்துத் தானாக வேண்டும்!

பெரிய தந்தையைப் பொறுத்தவரையில் தனது நிலைமை என்ன என்று முடிவு செய்துவிட்ட நிர்மலா வுக்கு இப்போது அவருடன் பேசி மகிழும் ஆசை தலை தூக்கியது!

அவளது திருமணத்துக்கு ஒரே நாள் வந்துவிட்டுப் போனார்!

தூரம், செலவு எதையும் பாராமல் வந்தாரே!

வந்து, எவ்வளவு பிரியமாக அவளை ஆசீர்வதித்தார்!

அதற்கு மேல் பொறுத்திருக்க மாட்டாமல், நிர்மலா சுந்தரலிங்கத்துக்குப் போன் செய்தாள்!

''நிம்மிக் குட்டியா?'' என்று அவருக்கு ஒரே சந் தோஷம்! ''அப்போதிருந்து, உன் குரலை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன்! மாப்பிள்ளை சொன்னாரா?'' என்று கேட்டார் அவர்.

''இம். சொன்னார். நீங்கள் வந்தபோது, நான் வீட்டில் இருக்க முடியவில்லை பெரியப்பா!'' என்றாள் அவள் உண்மையான வருத்தத்துடன்!

அவளும் நித்யானந்தனும் மட்டும் ஒன்றாக இருந் திருந்தால் பெரியப்பாவைச் சாப்பிடக் கூப்பிட்டிருப்பாள்!

அங்கேயே தங்கும்படி கேட்டிருப்பாள். அவருக்குப் பிடித்தமான பூண்டுக் குழம்பும், அவியலும் செய்து கொடுத்திருப்பாள்!

பெரியப்பாவுக்குப் பிடிக்கும் என்றே, இந்த இரண்டு பக்குவங்களையும், அவளுடைய அப்பா வழிப்பாட்டி யிடம் இருந்து, கல்லூரிக் காலத்திலேயே நிர்மலா கற்று வைத்திருந்தாள்! அம்மா கைப்பக்குவம் பேத்திக்கு வந்து விட்டது என்று, சுந்தரலிங்கமும் ரசித்துச் சாப்பிடுவார்!

அவளது வீட்டில் அவரை உபசரிக்க, அவள் கொடுத்து வைக்கவில்லையே!

"மாப்பிள்ளை சொன்னாரம்மா! நல்ல பிள்ளை, அவர்! நீ வேலை பார்ப்பதைப் பற்றிச் சொன்னார்! உன் வேலைக்கு நேரக் கணக்கு கிடையாதாமே! புரிந்து கொண்டு பிரிய மாகவும் இருப்பவர் என்பதால், தாமதமாகிற நாட்களில் அங்கேயே விடுதியில் தங்கி விடவும் அனுமதி கொடுத் திருக்கிறாரே, அதைச் சொல்லு..."

நித்யன் என்ன, அவளுக்கு அனுமதி கொடுப்பது என்று நிர்மலா புகையும்போதே "...சின்ன வயதுதானே? கல்யாணம் ஆகி ஒரே ஆண்டில், வேறு யார், இப்படி விட்டுக் கொடுப்பார்கள்? குட்டிம்மா, உனக்குத் தெரியுமா, மாப்பிள்ளையுடைய சித்தப்பா மகளை... உன் சின்ன மாமனார் மகள்தான், மோகனுடைய வருங்கால மனைவி! உனக்கும் மாப்பிள்ளைக்கும் இரட்டை உறவு!" என்று சிரித்தார் பெரியவர்!

இல்லையே.. இல்லையே.. முதலுக்கே மோசமாகப் போகிறதே என்று ஒரு சில வினாடிகள், நிர்மலா தவி யாய்த் தவித்துப் போனாள்!



"எங்கே தங்கியிருக்கிறீர்கள் பெரியப்பா? உங்களைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறதே!" என்று பேச்சை மாற்றினாள் பெண்.

பெரியவரைச் சந்திக்க, அவளுக்கு மெய்யாகவே ஆசையும் கூடத்தான்!

அவருக்கும் மகளைச் சந்திக்க ஆசைதான்!

"ஆனால் ஊருக்குப் போக வேண்டியிருக்கிறதும்மா! கோயிலில் பொங்கல் வைக்க வேண்டுமில்லையா? போய் விட்டு வந்து விடுகிறோம்! அதற்கெல்லாம் நீ லீவு போட வேண்டாம்! ஆனால், அப்புறம் முடிந்த அளவு எங்களோடுதான்! இங்கே உள்ளவர்களை நேரில் அழைக்க வேண்டும்! துணிமணி, நகை எல்லாம் நாத்தனாராய் நீதானே பார்த்து வாங்க வேண்டும்? பாரேன், இதுவரை, உன் திருமணத்தில் இந்த ரதிப் பொண்ணு, அவள்தான் நாத்தனாராகச் சுற்றிக் கொண்டிருந்தாள்! இப்போது பார்த்தால், நீ அவளுக்கு நாத்தனாராகி விட்டாய்..."

இதே ரீதியில் சுந்தரலிங்கம் பேச, அதுவும் அவளுக்கு இன்னொரு வகைத் துன்பமாகவே முடிந்தது!

வலியை அடக்கிக் கொண்டு, சந்தோஷம் போலக் காட்டிக் கொள்ள வேண்டியிருந்ததே!

இதைப் போலப் பெரியப்பா, நித்யானந்தனிடம் பேசி யிருப்பாரா?!

பேசியிருப்பார்! மற்றபடி, இவள் விடுதியில் தங்கு வதன் காரணக் கதையெல்லாம் கூற நேர்ந்திராதே! என்ன வீட்டு மாப்பிள்ளை என்று, கொஞ்சம் மரியாதையோடு பேசியிருப்பார்! அப்படியானால், அவனுக்கும் இதே வேதனை ஏற்பட்டுத்தான் இருக்கும்!

படட்டும்! உப்பைத் தின்றால், தண்ணீர் குடித்துத் தானே ஆக வேண்டும்? முட்டாள், மூடமதி என்று, என்னவெல்லாம் சொன்னான்?

ஆனாலும்...

தன்னை மீறிப் பெருமூச்சு வந்தது அவளுக்கு!

சொன்ன சொல்லை ரொம்பவே காப்பாற்றுகிறவன் போல, மறுநாள் அதே நேரத்துக்கு வந்து, "என்ன முடிவு செய்தாய்?" என்று வினவினான் நித்யானந்தன்.

நித்திய ஆனந்தன்!

இவனால், தினம் தினம் ஆனந்தமாக இருக்கப் போவதாக அவள் கனவு கண்டதற்கு, என்ன மாதிரி எல்லாம் தலைகீழாகி விட்டது!

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அவனிடமே திருப்பிக் கேட்டாள் அவள்!

"உன் விருப்பம் போலச் செய்யலாம்!"

"என்னவோ, என் விருப்பங்களுக்கு ரொம்பவும் மதிப்புக் கொடுக்கிற மாதிரிப் பேசுகிறீர்களே!" என்றாள் அவள் எரிச்சலாக!

"ஏன், தரவில்லையா? பிரிவைக்கூட, நீதானே முதலில் கோரினாய்! உடனே சரியெனவில்லை?" என்று, வெந்த புண்ணில் வேலைச் சொருகினான், நித்யானந்தன்.

என்ன மாதிரி வெறுப்பில் சொன்னாள்!

கொலைகாரனுக்குத் திருடன் மேல் என்பது போல, தினம் தினம் சண்டையிட்டு, ஒருவரை ஒருவர் கொத்திக் குதறித் துன்புறுத்துவதை விடப் பிரிவது மேல் என்று எண்ணிச் சொன்னாள்!



பிரிவு என்ற வார்த்தையை அவள் முதலில் கூறியது நிஜமே! ஆனால், சொல்லிவிட்டு, எவ்வளவு வேதனைப் பட்டிருப்பாள்! அதைப் போய்க் குத்திக் காட்டுகிறானே!

ஆத்திரமுற்று, "கணவனின் விருப்பத்தை நிறைவேற்றுவது மனைவியின் கடமையாமே! உங்கள் மனதில் இருந்ததைக் கண்டு சொன்னேன்!" என்றாள் அவள்!

என்னவோ மனதுக்குள் புகுந்து பார்த்தது போலச் சொல்லுகிறாயே.. அடுத்தவர் மனதை அறிவதற்கு எவ்வளவோ மூளை வேண்டுமே என்ற பதில் குத்தலுக்குத் தயாராக நிர்மலா இறுகி நின்றபோது, அந்தப் பதில் தாக்குதல் வரவே இல்லை!

மாறாகச் சிறு அமைதியின் பின், "சரி, சரி! அதெல்லாம் தான் முடிந்தே போயிற்றே! இப்போது பெரிய மாமாதான் முக்கியம்! இந்தத் திருமணம் முடிந்து திரும்பிப் போகிற வரை, அவர் நிம்மதியாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று, மாமா சொல்லியிருக்கிறார்! அதற்கு என்ன வழி என்று யோசிப்போம்!" என்றான் நித்யானந்தன்.

மணமான புதிதில் எல்லாம், இப்படி யோசிப்போம் என்று யார் சொன்னாலும், 'அது சாத்தியமில்லையே., யோசிப்பதற்கு முக்கியமாக மூளை என்று ஒன்று இருக்க வேண்டுமே' என்று அடுத்தவர் கிண்டலடிப்பது நிச்சயம்! தொடர்ந்து கேலியாகச் சிரிப்பதும், தொடரும் விளையாட்டும்!

தொடர்ந்து, உனக்கு மூளையில்லை. உனக்குத்தான் மூளையே கிடையாது என்று குத்தலும் கோபமுமாக, அடுத்தவரை வருத்தப் பேசியதும்!

அந்த நினைவுகளைத் தலையசைத்து விரட்ட முயன்ற படி, ''பெரியப்பா ஊருக்குப் போகிறாராம்'' என்றாள் நிர்மலா.

''திரும்பி வருவதற்கு ஒரு வாரம் ஆகும் என்றார் என்னிடம்.''

''வந்ததும், இங்குள்ளவர்களை அழைக்க வேண்டு மாம்! கடை கண்ணிகளுக்குப் போக வேண்டுமாம்!''

''அப்படியானால் சேர்ந்தே வரச் சொல்லுவார்!''

அவன் மறுப்பானா?

அவள் தயக்கத்துடன் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்க, ''பரவாயில்லை. இரு குடும்பங்களுக்கும் பெரிய வர். அவரது மனம் புண்படாமல் பார்த்துக் கொள்வோமே! மிஞ்சி, மிஞ்சி, அவர் சென்னையில் இருக்கப் போவது இருபது நாட்கள்தானே? எதையும் காட்டிக் கொள்ளாமல் சமாளித்து விடலாம் என்று தோன்றுகிறது. செய்ய லாமா?'' என்று கேட்டான் நித்யானந்தன்.

எதற்கும் முடிவு சொல்லிப் பழக்கப்பட்டவன். இப்போது தன் யோசனையாகச் சொல்லி, அவளிடம் அபிப்பிராயம் கேட்கிறான்!

முன்பே செய்திருக்கலாமே என்று எண்ணும்போதே அவளுக்குத் தொண்டையை அடைக்க, வாய் திறவாமல் சம்மதமாகத் தலையாட்டினாள்!

''அப்படியானால், அடுத்த வாரத்திலிருந்து, கொஞ்சம் அவ்வப்போது விடுமுறை எடுக்கிற மாதிரி ஏற்பாடு செய்து கொள்ளலாம். எனக்குச் சற்று முன்னதாகச் சொல்லாவிட்டால், லீவு கிடைப்பது கடினம்!'' என்றான் நித்யன்.



சில வினாடிகள் பொறுத்தே அவன் சொன்னது உறைக்க, ''அப்படியானால் வேலை கிடைத்து விட்டதா?'' என்று தன்னை மீறிய ஆவலுடன் கேட்டாள், நிர்மலா.

''ஆமாம்! முதல் சம்பளம், போன மாதம் வாங்கினேன்!'' என்றான் அவன் உணர்ச்சியற்ற குரலில்!

இரண்டு மாதங்கள்! இது ஆறு மாதங்களுக்கு முன் நேர்ந்திருந்தால்? இந்த மணவிலக்கு மனுவுக்கு அவ சியமே இருந்திராதோ என்று அவளுக்குத் தோன்றியது!

ஆனால், என்னென்ன வார்த்தைகள்! விஷம் தோய்த்த கூரம்புகள்! என்ன வலி...

எங்கோ செல்லத் தொடங்கிய மனதைக் கட்டுப் படுத்தி, ''வாழ்த்துக்கள்!'' என்றாள் அவள்.

அது பெரிய விஷயமல்ல என்பது போலத் தோளைக் குலுக்கி, ''தேர்வு முடிந்தால், வேலை கிடைக்கும் என்பது எப்போதும் தெரிந்த ஒன்றுதானே?'' என்றான் அவன்!

குத்திக் காட்டுகிறானா? அது வரை, அவள் பொறுமை யாக இருக்கவில்லை என்கிறானா?

என்ன சொல்கிறீர்கள் என்று கேட்க வாயெடுத்தவள் நிறுத்திக் கொண்டு, ''பெரியப்பா முன்னிலையில், நாம் சண்டை போடாமல் இருப்பது நல்லது!'' என்றாள் அவள் கவலையோடு.

''அதைத்தான் நானும் நினைத்தேன். ஒரு வேளை, அவருக்காக நான் கேலி கிண்டல் மாதிரி ஏதாவது சொன் னால் தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நானும் அதே போல இருந்து கொள்ள முயற்சிக்கிறேன்!'' என்றான் அவனும்.

அவர்களது வீட்டுக்கே வரச் சொல்லுவானோ என்று ஒரு படபடப்புடன் கூடிய குழப்பம் வந்தது அவளுக்கு. அது மணவிலக்கு விதிகளுக்கு முரணானது ஆயிற்றே!

ஆனால், அவன் அப்படியெல்லாம் கேட்கவில்லை எனும்போது, அப்பாடி என்று நிம்மதியாயிற்று நிர்மலா வுக்கு.

கூடவே, சிறு ஏமாற்றமும்!

நிர்மலா, அவளது விடுதியிலேயே இருக்கலாம், தேவைப்படுகிற நேரம் எங்கேனும் குறிப்பிட்ட இடத் திற்கு வந்து விட்டால், அப்புறம் சேர்ந்து போய், பெரிய தந்தை முன் ஜோடியாக நின்று விடலாம் என்றுரைத்து விட்டு, அவள் முகத்தைப் பார்த்தான் அவன்.

அது சரிதான் என்பதுபோல, வெறுமனே தலையாட்டி வைத்தாள் நிர்மலா.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது!

சற்றுப் பொறுத்து, நித்யானந்தன் எழுந்தான்.

''அப்படியானால் நான் கிளம்புகிறேன். பெரிய மாமா திரும்பி வந்து தொடர்பு கொண்ட பிறகு, எங்கே, எப்படி சந்திப்பது என்று முடிவு செய்வோம்'' என்று சொன்ன போதும், திரும்பிச் செல்லாமல் அப்படியே நின்றான் அவன்.

''என்ன?''

''அதில்லை... திருமணத்துக்கு அணியும் விதமாக நல்லதாக ஏதேனும் வாங்க வேண்டுமானால்... பணம் தேவைப்பட்டால், என்னிடம் கேட்கத் தயங்க வேண் டாம்... அதைச் சொல்லத்தான்...''



ஓ. அவன் இப்போது சம்பாதிக்கிறான்!

அதுவும் நன்றாக என்று சொல்லிக் காட்டுவதற்காகத் தான் இவ்வளவு முஸ்தீபுமா?

என்னவோ, அவளை விட்டுப் போகப் பிடிக்காமல் தான் நிற்கிறானோ என்று ஒரு கணம் ஆறுதலாய் எண்ணி விட்டாளே! துள்ளலாகக் கூட!

ஏமாந்த ஆத்திரத்தோடு, ''நீங்கள் ஏன் தர வேண்டும்? நானும்தான் சம்பாதிக்கிறேன்! அதுவும், இடையில் வேலையை விடாமல், தொடர்ந்து வருகிற வருமானம்! அதனால், எனக்கு வேண்டியதை நானே வாங்கிக் கொள்ள முடியும்! அத்தோடு, உங்களுக்குப் புது வருமானம்! முன்பு போல, இதுவும் இடையிலே நின்று போனால், செலவுக்குத் தேவைப்படுமே. அதனால், இருப்பதைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் நிர்மலா குத்தலாக.

அவன் முகம் லேசாகக் கன்றியதோ என்ற சந்தேகம் அவளுக்கு! படட்டும்!

ஆனால், அவனும் படுவதோடு மட்டும் நிற்காமல் ''நீ சம்பாதிக்கிறாய் என்று எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால், விலை, தேவை எதையும் யோசியாமல், கண்ணில் பட்டதைக் கண்ணை மூடிக் கொண்டு வாங்கு கிற பழக்கம் உள்ளவள் ஆயிற்றே. மிச்சம் மீதி இருக் கிறதோ என்னவோ என்றுதா...'' என்று வலிக்கத் திருப்பிக் கொடுத்தவன், பேச்சை இடையிலேயே நிறுத் தினான்!

பழைய குற்றச்சாட்டு! யோசிக்காமல் காசை வீணாக்கு கிறவள்!

அவனுக்குப் பதிலடி கொடுப்பதற்கான வார்த்தை களைச் சேகரித்தபடி, அவன் வாக்கியத்தை முடிப்பதற் காகக் காத்திருந்தவள், தொடர்ந்து ஒன்றும் வராமல் போகவும், நிமிர்ந்து பார்த்தாள்.

இறுக மூடியிருந்த கண்களைத் திறந்து கொண்டிருந் தான் நித்யன்.

எதையோ விழுங்கிவிட்டு, "சாரிம்மா!" என்றான் அவன்.

அவள் திகைத்து நோக்கவும், "இந்த மாதிரிப் பேச்சுக்களின் பலன் என்னவென்று நன்றாக அடிபட்டுத் தெரிந்து கொண்டாயிற்று! இன்னமும் அதையே இவரும் தொடர்வது எவ்வளவு முட்டாள்தனம்! விட்டு விடலாம்! அத்தோடு, உன் பெரியப்பா முன்னிலையிலும், இது போன்ற பேச்சுக்கள் தன்னியல்பாக வந்து விடக் கூடும். எனவே, முடிந்த வரையில் பேச்சைக் கட்டுப்படுத்திக் கொள்வோம்!" என்றான் அவன்.

அவள் மீண்டும் தலையாட்டிய பின்னர், அவன் கிளம்பிச் சென்றான்!

நிர்மலாவுக்குமே, அப்போது மனம் கூசிப் போயி ருந்தது!

காரணம், மெய்யாகவே, அவளிடம் அந்தச் சமயத்தில், அதிகமாகப் பணம் இல்லைதான்! உடன் வேலை செய் வோர் சிலருக்கு, ஏதோ தேவை என்று கடன் கொடுத் திருந்தாள். ஒரு தந்த விசிறி, ஒரு சந்தனச் சிலை, விலை உயர்ந்த தஞ்சாவூர்ச் சித்திரம், சில கிறிஸ்டல் பறவைகள்... இப்படி ஏதேதோ வாங்கிப் போட்டிருந்தாள்.



வீட்டில் பெற்றோரின் திருமண நாளுக்கும் பெரிதாகப் பூஜையறை மணிமண்டபம் பரிசளித்தாள்.

எல்லாமே, மிகவும் அருமையான கலைப் பொருட்கள் தான்!

ஆனால், வாங்கி பத்திரப்படுத்திய பிறகு, இந்த விலை கொடுத்து, இதை வாங்காமல் இருந்திருக்கலாமோ என்று, அவளுக்கே தோன்றும்! இதெல்லாம், மிகவும் அத்தியா வசியமான பொருட்கள் அல்லவே! பெட்டிக்குள் பெட்டி வைப்பதற்கு, இவ்வளவு பணம் கொடுத்து வாங்க வேண் டியது இல்லை என்று அவளுக்கே தோன்றிற்று!

அதிலும், தேக்கு மரத்தில் செய்யப்பட்டிருந்த மணி மண்டபம் வெகு அழகாகவே இருந்த போதும், அவளுடைய பெற்றோரின் பூஜையறைக்குச் சற்று அளவு பெரிதாக இருந்தது! அத்தோடு, அதற்காகச் செலவு செய்த பணத்தில் பத்தில் ஒரு பங்குப் பணத்தில், சின்னதாக எதையாவது வாங்கிக் கொடுத்திருந்தாலும் அவளுடைய பெற்றோர் திருப்தி அடைந்திருப்பார்கள்!

அவர்களை மிக மிகத் திருப்தி அடைய வைக்கக் கூடியது. மகளும், மருமகனும் இந்த மணவிலக்கு நட வடிக்கைகளைக் கைவிட்டு, ஒன்று சேர்ந்து விட்டார்கள் என்பதுதான்., அதற்குப் பணச்செலவே தேவையில்லை என்றும் நிர்மலாவுக்கு நன்றாகவே தெரியும்!

ஆனால், இந்த அளவுக்கு வந்த பிறகு, எப்படித் திரும்பிப் போவது?

அவளுடைய தந்தையே நிர்மலாவின் இந்தச் செலவு களைப் பார்த்துவிட்டு, அவளைக் கட்டாயப்படுத்தி, சம்பளத்தில் ஒரு கணிசமான தொகையை பாங்கில் வைப்பு நிதியாகப் போட வைத்திருந்தார்!

அந்தப் பணம் ஓரளவு வளர்ந்திருந்த போதும், அதை இப்போது அவசரத்துக்கு எடுக்க முடியாது! இன்னும், இரண்டு ஆண்டுகள் பொறுத்துதான் முழுமை பெறும்!

அதன் பிறகு, அந்தப் பணத்தைக் கொண்டு, புறநகர்ப் பகுதியில் ஓரிரு மனை நிலம்கூட வாங்கிப் போடலாம்!

போட்டுவிட்டு, நித்யனை அழைத்துக் காட்டி, 'பார்த்தாயா, எப்படிப் பயனுள்ளதாக, நாளுக்கு நாள் விலையேறுவதான ஒன்றில் பணத்தைப் போட்டிருக்கிறேன்' என்று பெருமையடிக்கலாம்! அவன் முகம் கன்றிக் கறுப்பதைப் பார்த்து ரசிக்கவும் செய்யலாம்!

ஆனால், இப்போதைக்கு அந்தப் பணத்தைத் தொட முடியாது!

அத்தோடு, அந்த முதலீடும், அவளுடைய தந்தையின் வற்புறுத்தலின் பேரில் கட்டுவதுதான்! அவளாகச் செய்வது அல்ல! எனவே, அதைச் சொல்லிப் பெருமையடிப்பதும் கஷ்டம்! சரியும் அல்ல!

எனவே, அவளது தன்மை அறிந்து, உதவி என்று எண்ணியே, நித்யன் கேட்டிருக்கலாம்! அதில் தப்பு ஒன்றும் கிடையாது!

ஆனால், தொடர்ந்து அவன் பேசியது, ரொம்பவே அதிகப்படியான தப்புதான்! அப்படி ஒன்றும் அவள் கண்ணை மூடிக் கொண்டு, உப்புப் பெறாத பொருட்களை, யானை விலை, குதிரை விலை கொடுத்து வாங்கவில்லையே! என்றோ ஒரு நாள், இளவரசி டயானா அவளது ஆடைகளை விற்றது போல, இவைகளையும் விற்றுப் பார்த்தால், அப்போது அவனுக்குப் புரியும்!



இன்றைக்கு அவசியம் இல்லை என்பதால், அவற்றைக் குறைவாக மதிப்பிட முடியாது!

ஏதோ கண்காட்சி மாதிரி வைத்து, அவள் வாங்கி வைத்த பொருட்களை விற்பது போலவும், விற்று வந்த பணத்தை எண்ணிவிட்டு, அடேயப்பா என்று நித்யன் வியப்பது போலவும், சுகமான கற்பனை கூட, ஒன்று அவளுக்குத் தோன்றியது!

அதெல்லாம் என்றோ ஒரு நாள் நடக்கலாம், நடக்காமலும் போகலாம்!

ஆனால், இப்போதைக்கு மோகனனின் திருமணமும், அது தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகளும், வெகு விரைவில் நடக்க இருப்பன!

அத் த்த்... தனையிலும் நித்யானந்தனும், அவள் அருகிலேயே இருந்து, பங்கேற்கப் போகிறான்!

அப்போதெல்லாம் திகைத்துத் திணறி, மனம் பரிதவிக்காமல் இருக்க வேண்டுமானால், அவள் அப்படித் தவிப்பதைப் பெரியப்பா கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டுமானால், ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் எப்படியெப்படி நடந்து கொள்வது என்று யோசித்து, மனதில் ஒத்திகை பார்த்து வைத்துக் கொள்வதுதான், இப்போதைக்கு முக்கியம்!

ஆனால், அவளது கற்பனை ஒத்திகைகளில், அவளுடைய கணவனையே மீண்டும் மீண்டும் காண நேரும் என்றோ, அவனை மறந்து ஒதுக்க வேண்டிய காலம் அது என்பதே அவளுக்கு அடியோடு மறந்து போகும் என்றோ, அப்போது அவளுக்குத் தோன்றவே இல்லை!



# 6

சொல்லிச் சென்றது போலவே சுந்தரலிங்கம் ஒரு வாரத்தில் ஊரிலிருந்து திரும்பி வந்துவிட, நிர்மலாவின் கற்பனை ஒத்திகைகள் விரைவிலேயே நிஜமாக நடக்கத் தொடங்கின.

கணவன் மனைவி இருவரும் திட்டமிட்டது போல. பெரியவர் எதற்காக, எப்போது அழைத்தாலும், ஒருவருக் கொருவர் தகவல் பரிமாறிக் கொண்டு, ஜோடியாக வந்து நின்று, ஆவன செய்தனர்!

பெரியவர் குடும்பத்துடன் இந்த இருவரும் சேர்ந்து அழைக்கப் போனார்கள்.

சென்னை, மற்றும் சுற்று வட்டாரத்தில் இருந்த மற்ற நெருங்கிய உறவினருக்கெல்லாம், இருவரும் இணைந்து நின்றதைப் பார்த்து, மிகுந்த வியப்பு!

நிர்மலா, நித்யானந்தனின் மணவிலக்கு விவகாரம் அறிந்து, அதைத் தடுக்க முயன்று தோற்றிருந்த அவர் களுக்குக் குறுகுறுப்போடு, ஆவலும்கூட! பார்வைக்குப் பொருத்தமாக இருக்கும் அவர்கள், இதைச் சாக்கிட்டு இணையட்டுமே என்கிற நல்ல எண்ணமும் பலருக்கு இருந்ததால், மகிழ்ச்சியும் கூட!

பொறாமை போன்ற மற்ற உணர்வு உள்ளவர்களும், பெரியவரான சுந்தரலிங்கத்தின் முன்னிலையில் அதைக் காட்டிக் கொள்ளத் தயங்கினார்கள்!



எனவே, குத்தல், ஜாடைப் பேச்சு போன்றவற்றுக்கும் வாய்ப்பில்லாது போயிற்று!

திருமண வேலையாக, முதலாவதாகக் கல்யாணத் துக்குத் துணி எடுப்பதில் முனைந்தார்கள்! தயார் ரகம் ஓரளவுதானே வாங்க முடியும்? மற்றவை தைத்து வர வேண்டுமே!

முக்கியமாக மணப் பெண்ணுக்குத் தேவையான ரவிக்கைகள்!

இரு வீட்டாரும், நிர்மலா, நித்யானந்தன் திருமணத்தின் மூலமாகவே ஏற்கனவே அறிந்தவர்கள் என்பதால், ஒதுக்கம், தயக்கம் இல்லாமல், எல்லோரும் ஒன்றாகவே துணி வாங்கச் சென்றிருந்தார்கள்!

''அவளும் வரட்டும் என்று, அப்பாவிடம் சொல்லு, நிம்மி!'' என்று முதலிலேயே ஒன்று விட்ட தங்கையின் காதைக் கடித்தான் கல்யாண மாப்பிள்ளை!

''ரதியைக் கூட்டிப் போகாமல், நாங்கள் விட்டு விடுவோ மாக்கும்! கோந்து போட்டு ஒட்டியாவது கூட அனுப்பி விட மாட்டோமா? ஆனால், இப்போதுள்ள சில கோந்து வகைகளை வைத்து ஒட்டினால், அப்புறம் தோலை உரித்துதான் பிரிக்க முடியுமாம்! ஒழுங்கு மரியாதையாகக் கூட்டிப் போகாவிட்டால், அப்புறம் தோலை இழக்க வேண்டியதுதான்! புது மாப்பிள்ளைக்கு, எப்படி சவுகரியம்?'' என்று மோகனனை வம்புக்கு இழுத்தான் நித்யானந்தன்.

''நான்தான் கோந்து இல்லாமலே ஒட்டிக் கொள்கிறேன் என்கிறேனே! அப்புறமென்ன, பசையும், இன்னொன்றும்?'' என்று மோகனன் வழிய ஒவென்று எல்லோரும் நகைத் தனர்!

சுந்தரலிங்கத்தின் காதுகளுக்கு விஷயம் சென்றதும், ''நிம்மியும், மாப்பிள்ளையும் சொன்னால் சரி!'' என்றார், அவர்!

''எங்கள் திருமணத்தின் போதும் சேர்ந்துதான் சென்றோம்!'' என்று நித்யானந்தன் கூறவும், ''பின்னே கேட்பானேன்?'' என்று அனுமதி வழங்கினார் பெரியவர்!

கேலிப் பேச்சும், சிரிப்புமாக இளைய தலைமுறை பட்டுகள் பகுதிக்குக் கடையின் உள்ளே செல்ல இங்கிதமாக விலகி, ''தேர்ந்தெடுத்துக் கொண்டு வாருங்கள்! பணம் கட்ட, நாங்கள் இங்கேயே இருக்கிறோம்!'' என்று பணம் கட்டும் முன் பகுதியிலேயே பெரியவர்கள் அமர்ந்து கொண்டனர்.

அவளுடைய திருமணத்தின்போதும், இப்படித்தான்!

ஆனால், அப்போது, இப்படி அமர்ந்திருந்தது. நிர்மலாவுடைய தந்தை, ஞானலிங்கம் மட்டும்! தந்தையால் அலைய முடியாது என்பதால், திருமணச் சேலை போன்றவற்றை, நித்யன் தன் பொறுப்பிலேயே வாங்கினான், பெண் வீட்டுத் துணிமணிகளை அவள் தந்தை வாங்கினார்.

பெரியவராகக் கூட வந்தது அவர் மட்டுமே!

இப்போது தன் அண்ணனுக்கு உதவியாக ஞானலிங்கமும் கடைக்கு வந்திருந்தார்! கூடவே, மணப் பெண் ரதியுடைய அப்பாவும்.

எனவே, போரடிக்காமல் அவர்களுக்குள்ளும் பேச்சு இலகுவாக ஓடிக் கொண்டிருந்தது.

ஆனால், தந்தையை நினைக்கையில், நிர்மலாவுக்குப் பரிதாபமாக இருந்தது!



சென்ற முறை தனியே காத்திருந்த போதும், அவர் முகத்தில் மகிழ்ச்சி இருந்தது! பணம் கொடுக்கும்போது, பெருமிதம் இருந்தது! அந்த நினைவெல்லாம், அவருக்கும் வரும்தானே -

அவளைப் போல!

வராமல் இருக்க வாய்ப்பில்லை! ஏனெனில், கடையில் நுழைந்த வினாடியில் இருந்து, பழைய நினைவுகள், நிர்மலாவை அரித்தெடுத்துக் கொண்டிருந்தன. பெற்றவர், அவருக்கு மட்டும் எப்படி மறக்கும்?

முன்னே நடந்தது எதையும் நினைக்கக் கூடாது என்று தனக்குத் தானே பல முறை அறிவுறுத்திக் கொண்டுதான், நிர்மலா இந்தக் கல்யாணத் துணிமணி எடுப்புக்குக் கிளம்பியதே!

ஆனால், அவளாக நினைக்காவிட்டாலும், சித்தப்பா மகன், பெரிய அத்தை பிள்ளை, அவன் மனைவி, பெரியப்பாவுடைய மூத்த மகன், மருமகள், அப்புறம் நித்யனுடைய சித்தப்பா, மாமா பிள்ளைகள் என்று ஒரு பட்டாளமே அங்கே இருந்ததே, கண்டும் காணாதது போல, அவர்களது ஜாடை மாடைப் பார்வையே போதுமே!

நல்ல வேளையாக, மணமகனும், மணமகளும் தனி உலகத்தில் இருந்தார்கள்! அத்தோடு, பாதிக்குப் பாதி அவர்கள் பக்கமும் மற்றவர்கள் கவனம் திரும்பியது! மற்றபடி, நிர்மலாவால் நிச்சயமாகத் தாங்க முடிந்திராது!

முதலில் எல்லோரும், மணமகளுக்கான கல்யாணச் சேலையைத் தேர்ந்தெடுப்பதில் முனைந்தார்கள்.

வாங்கப் போவது இன்ன விலையில் என்று தெரிவித்ததும், சற்றே முன்னும் பின்னுமாக அதையொத்த



விலையில் பல சேலைகளைக் கடையின் விற்பனைப் பணியாளர் எடுத்துக் காட்டலானார்.

தனக்குப் பிடித்ததும், தன் வருங்கால மனைவிக்குப் பிடிக்கும் என்று தோன்றியதுமான சில சேலைகளைக் காட்டி, இது எப்படி, இது நன்றாக இருக்கிறதா என்று மோகனன் கேட்கக் கேட்க, மணப்பெண் ரதி வெட்கத்துடன் தலையாட்டிக் கொண்டே இருந்தாள்!

வருங்காலக் கணவன், அவனுக்குப் பிடித்துப் போய்க் காட்டுகிறான் என்பது தவிர, அந்தச் சேலைகளின் நிறத்தையேனும் அவள் பார்த்தாளா என்பதே சந்தேகம் தான்!

இதைக் கவனித்துவிட்டு, ''ரதிம்மா, மாப்பிள்ளை காட்டுவதைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்துவிட்டுத் தலையை ஆட்டு! இப்படி எதற்கும் சரியென்றால், எல்லாமே வேண்டும் என்று சொல்கிறாயோ, கடையையே வாங்கும்படி ஆகிவிடுமோ என்று மனிதர் பயந்து ஓடிவிடப் போகிறார், பாவம்!'' என்றான் நித்யானந்தன் கேலியாக.

வாய்ப்புக் கிடைத்தது என்று எண்ணினாற் போல, ''ஓகோ! முன்பு எங்கள் நிம்மி உங்களிடம் இப்படித் தலையாட்டியபோது, நீங்கள் என்ன நினைத்தீர்கள் என்று இப்போதல்லவா தெரிகிறது!'' என்று நிர்மலாவுடைய அத்தை மருமகள் ஒரு போடு போட, எல்லோரும் நகைத்தனர்!

''ஆகா, எங்கள் ரதிக்கு இவ்வளவு ஆதரவு இருக்கிறதா? அவள் அண்ணனான நானே வாயைத் திறக்க முடியாது போல இருக்கிறதே! பார்...'' என்று அவளுக்குப்



பதில் கூறியவாறு மனைவியைப் பார்த்த நித்யானந்தனின் பேச்சு இடையில் நின்றது!

கனவு மிதக்கும் விழிகளோடு ஒரு பதுமை போல நின்றவளின் மனம் எங்கே இருக்கிறது என்று, அவனுக்கு நன்றாகவே புரிந்தது!

இப்படிக் கடையின் விற்பனையாளர் எடுத்துக் காட்டிய அத்தனை சேலைகளையும், அவள் மீது வைத்து நினைத்துப் பார்த்ததும், பின்னர் அது பற்றி அவளிடம் சொன்னதும், நித்யானந்தனுக்கும் தெளிவாக நினைவு வந்தது!

அவளும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்!

அதிலும், அந்தச் செம்பவள நிறச் சேலை!

கல்யாணப் பட்டுக்கு, அந்தச் சேலையின் ஜரிகை வேலைப்பாடு போதாது என்று விட்டார்கள், பெரியவர்கள்!

அந்தச் சேலையின் நிறத்துக்கும், நிர்மலாவின் சருமத்துக்கும்...

பழைய நினைவில் இருவரும் ஆழ்ந்திருக்க, அவளுடைய சித்தப்பா பிள்ளை சஞ்சய், ''அந்த நாள் ஞாபகம் இந்த நாள் வந்ததே!'' என்று ஒரு வரியை எடுத்து விட, எல்லோரும் 'ஓ'வென்று நகைத்தனர்!

கடைச் சிப்பந்திகளால் கூட, முறுவலை அடக்க முடியாமல் போயிற்று! குடும்பமே, அங்கேதானே, அவ்வப்போது துணி வாங்குவது அந்த அறிமுக உரிமையில் அவர்களும் சிரித்தனர்.

பிரிந்தே விடப் போகும், இந்த நேரத்தில் பழைய நினைவில் மெய் மறப்பதா? நித்யன் கண்டு கொண்டிருப்பானா? அவளைப் பற்றி என்ன நினைப்பான்?!

முகம் சூடாவதை உணர்ந்து, கால் பெரு விரலைப் பூமியில் அழுத்தி அதைத் தடுக்க முயன்றபடி, "சும்மா உபயோகமற்ற வெற்று அரட்டை அடிக்காமல் எல்லோரும் வந்த வேலையைப் பாருங்கள்! இன்னும் பிள்ளைகளைக் காணோமே, பட்டுச் சேலை வாங்கப் போனார்களா, தறியில் நெய்து எடுக்கிறார்களா என்று, பெரியப்பா சீக்கிரமே இங்கே வந்து நிற்கப் போகிறார்!" லேசாக மிரட்டினாள் நிர்மலா.

"ஆமாம். இதற்கு மேல் யாரும், வந்த வேலையைப் பாராமல் வம்பளக்கக் கூடாது!" என்று அவளை ஒட்டிப் பேசிய நித்யானந்தன், விற்பனைச் சிப்பந்தியைப் பார்த்து, "சேல்ஸ்மேன், இந்த விலை உயர்ந்த பட்டுகளிலேயே, நிறைய பூ வேலை செய்த புதுவிதச் சேலைகளையும் காட்டுங்கள்! இன்றைய நாகரீகம், அவைகளும்தானே? பிடித்தமானதைத் தேர்ந்து எடுக்கட்டும்!" என்று சொல்லி, நிர்மலாவைத் திகைக்க வைத்தான்!

அவர்கள் திருமணத்தின்போது, "இந்த பட்டுச் சேலைகளில் பூவேலை என்பதெல்லாம், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் மாறிவிடக் கூடியவையே. அதனால், இவ்வளவு விலை கொடுத்து வாங்குவதில், இந்த மாதிரிப் புதுப் பாணிகள் எல்லாம் வேண்டாம்!" என்று அவள் காதோடு கிசுகிசுத்து மறுத்தவன்! இப்போது நேர் மாறாகச் சொல்லுவதைப் பார்த்தால், தான் மாறியிருப்பதாகச் சொல்லாமல் சொல்லி, அவளுக்குத் தெரிவிக்கிறானா?

ஒரு கணம் நம்பிக்கையோடு துள்ளிய மனம், மறு கணமே சுருண்டு விழுந்தது!

அப்படி ஒரு வேளை மணவிலக்கு பற்றி நித்யனின் கருத்து மாறியிருந்தால், இது மட்டும்தான் என்று இல்லை.



எந்த மாதிரி விஷயம் என்றாலும், தன் எண்ணத்தை முகத்துக்கு நேராகச் சொல்லி விடுவதுதான் அவனது வழக்கம் என்பதால், இதையும் அப்படியே சொல்லியிருப்பான்!

அதைவிட்டு, அனாவசியமாகத் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறவன், அவன் அல்ல! எதையும், நெஞ்சில் தைக்கிற மாதிரி, நேராகத்தான் சொல்லுவான்!

நெஞ்சில் தைப்பதைச் சொன்னவன், அந்த வலியைப் போக்க நினைக்கவே இல்லையே!

பெருமூச்சை உள்ளடக்கிப் பிறர் அறியாது மறைத்தவள், சீக்கிரம், சீக்கிரம் என்று மற்றவர்களை உசுப்பினாள்!

முக்கியமாகச் சின்ன அண்ணன் மோகனனை!

அதற்கு நல்ல பலன் கிடைக்க, அடுத்து ஓர் அரை மணி நேரம், வேகமாக வேலை நடந்தது!

இதுவா, அதுவா என்று மணப்பெண் ரதியின் மேல் வைத்துப் பார்த்து, அவளுக்குத் திருமணப் பட்டு, நிச்சயப் பட்டு, துணைப் பட்டு எல்லாம் தேர்ந்தெடுத்து முடித்தார்கள்.

ஒரு சிப்பந்தியோடு சென்று, தேர்ந்தெடுத்தவைகளைப் பெரியவர்களிடம் காட்டி, அவர்களும் ஒப்புதல் அளிக்கவே அதை பில் போடத் தனியே எடுத்து வைத்தார்கள்.

"அடுத்து நிம்மிம்மா..." என்று அவளை அழைத்தார் சுந்தரலிங்கம். "மாப்பிள்ளை, நீங்களும் கேளுங்கள். இனி, நம் வீட்டுப் பெண்கள் எல்லோருக்கும்... மகள்கள், மருமகன்கள் எல்லோருக்கும் ஆளுக்கு ஏழாயிரம் ரூபாய்

மதிப்பில், ஏழிலிருந்து எட்டு வரை எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை! ஆனால், ஒன்றுக்கொன்று அதிக வேறுபாடு இல்லாமல் பார்த்து வாங்குங்கள்! அதிலேயே, ரதிக்கு ஒரு தங்கை இருக்கிறாளாமே, அவளுக்கும் ஒன்று எடுங்கள்! அப்புறம் சாந்தி, உன் தங்கை வசுமதிக்கும் ஒரு சேலை வாங்கும்மா. அவள் சின்னப் பெண்தான் என் றாலும், நம் குடும்பத்தில் இது கடைசிக் கல்யாணம்! முடிந்தவரை எல்லோருக்கும் ஏதாவது செய்ய வேண்டும்!'' என்று தன் பெரிய மருமகளிடமும் சொல்லி அனுப்பினார்.

ஏழிலிருந்து எட்டு வரை என்றதும், கடைசிச் சிப்பந்தி, அவர்களை இன்னோர் இடத்துக்கு அழைத்துச் சென்றார்.

எல்லோருமாக, அவரவருக்குப் பிடித்தமான வண் ணங்களைத் தேர்ந்தெடுக்கையில், ஓர் அடுக்கில் இருந்த செம்பவள வண்ணத்துச் சேலையொன்று, நிர்மலாவின் கவனத்தைக் கவர்ந்தது!

எடுத்துக் காட்டச் சொல்லிப் பார்த்த அவளுக்கு, நெருக்கமாக ஓடிய மெல்லிய ஜரிகைக் கோடுகளுடன் மேலே சிறியதாகவும், கீழே அகலமாகவும் ஜரிகைக் கரைகளுடன் அந்தச் சேலை மிகவும் பிடித்துப் போயிற்று!

அந்தச் சேலையை அவள் வாங்கிக் கொள்வதாகச் சொல்லித் தேர்வு செய்யப்பட்ட மற்றவையோடு அதை வைக்குமாறு கூறினாள், அவள்.

அவள் கூறியபடியே வைக்கப் போன விற்பனையாளர், ஏதோ சந்தேகத்துடன் மீண்டும் சேலையைப் பிரித்து விலையைப் பார்த்துவிட்டுச் சட்டென முகம் மாறினார். "ஐயோ, சாரிம்மா! மன்னித்துக் கொள்ளுங்கள்! எப்படியோ, பனிரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் விலையுள்ள



சேலையைத் தவறுதலாக இந்த வரிசையில் வைத்து அடுக்கி விட்டார்கள்! இவ்வளவு ஜரிகை உள்ளது. அதிலும் இரு பக்கக் கரையுள்ளது. இந்த வரிசையில் வராதே என்று, சந்தேகத்துக்குப் பிரித்துப் பார்த்தேன்! நான் நினைத்தது சரியாகப் போயிற்று! ஆசையாக எடுத்தீர்கள்! ரொம்ப சாரிம்மா!'' என்று உண்மையான வருத்தத்துடன் விளக்கினார்!

நிர்மலாவுக்கும் வருத்தம்தான்!

முன்னொரு தரம் நித்யன் இந்தச் சேலையைத் தேர்ந்தெடுத்தபோது, அப்போதும் தட்டிப் போயிற்று! இப்போது, இன்னொரு காரணம்!

எப்படியோ, அவன் விரும்பிய வண்ணத்துச் சேலையைக் கட்டக் கூட, அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை!

ஆனால், அவனையே இழக்கப் போகிறாள்! இந்தச் சேலையென்ன பிரமாதம்?

நடந்ததை நித்யன் கவனித்திருப்பானோ என்று திடுமெனத் தோன்றவும், உள்ளூரப் படபடப்புடன் ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.

மோகனனோடு ஏதோ பேச்சில் ஈடுபட்டிருந்தான் அவன்.

நல்லவேளை! அந்தச் சேலையை எடுக்கச் சொன்னதே எவ்வளவு முட்டாள்தனம்!

உள்ளூர ஒரு சோகம் கலந்த நிம்மதியுடன், "அதனா லென்ன சேல்ஸ்மேன்? இன்னொரு தரம் வாங்கிக் கொண்டால் போயிற்று. இப்போது, இந்த இளம் பச்சைச் சேலையைக் காட்டுங்கள், பார்ப்போம்...'' என்று கண்

ணில் பட்ட இன்னொரு சேலையைத் தனக்கென எடுத்து வைத்தாள் நிர்மலா!

ராணி மங்கம்மா விடுதிக்குத் திரும்பி வந்த நிர்மலாவுக்கு அன்று அழுகை, அழுகையாக வந்தது!

நித்யானந்தனேதான் கொண்டு விட்டுவிட்டுப் போனான்!

அலுவலகத்தில் அவனது இன்றையத் தகுதிக்காகக் கார், வீடு எல்லாம் கொடுத்திருக்கிறார்களாம்! ஆனால், வீடு இன்னமும் முழுமையாகத் தயாராகாததால், பழைய வீட்டிலேயே இருக்கிறானாம்! கொஞ்சம் கொஞ்சமாகச் சாமான்களைக் கொண்டு போய் வைத்துக் கொண்டிருக்கிறானாம்! தங்கல் மட்டும், இன்னும் பழைய வீட்டிலேயே தானாம்!

தம்பட்டமோ, என்னவோ? சொன்னான்!

இருக்கட்டும்! அவன் எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டும்!

ஆனால், அவளது பெயர் கூடவா, அவனுக்கு மறந்து போகும்?

நிலா என்று, ஒரு தரம்கூட, மறந்தும் அவன் அழைக்கவில்லை! எல்லோரையும் போல, நிம்மி, நிம்மி என்கிறான்!

அவனுக்கு என்று ஒரு பெயர், அவனே வைத்தது, 'நிலா' என்று ஒன்று உண்டுதானே?

ஒன்றி வாழ்வது போலக் காட்டிக் கொள்வது என்றால், அந்த அழைப்பையும் அவள் எதிர்பார்ப்பாள் என்று தெரியாதா?



அது இல்லாமல், வெறுமனே பக்கத்தில், பக்கத்தில் வந்து எதற்காக நிற்பது?

இதில், தூரமாகப் போய் நிற்காதே, பெரிய மாமா தப்பாக எண்ணப் போகிறார்கள் என்று, அவளுக்கு அறிவுரை வேறு!

எப்படியும்தான் பிரியப் போகிறார்கள்! அந்தச் செய்தியும் சில மாதங்களில் அவருக்குக் கிடைக்கத்தான் போகிறது! இதில், இப்போதே கொஞ்சம் தப்பாக நினைத்தால்தான் என்னவாம்?

இந்த நினைவில் அப்போதே, அவளுக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்திருந்தது! நன்றாகத் திருப்பிக் கேட்டிருப்பாள்!

குறைந்த பட்சமாகத் தனிப்பட்ட முறையில், அந்தச் சேலையை வாங்க முடிந்திருந்தாலாவது, அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்கும்!

முன்பாக இருந்திருந்தால், இருக்கிற பணத்தையெல்லாம் அரித்தெடுத்துச் சேர்த்துப் போட்டு, அதை வாங்கியும் இருப்பாள்.

ஆனால் இப்போது அது முடியாது! கையில் இருப்பதைக் காலி செய்துவிட்டால், விடுதிக்கு, மாதச் செலவைக் கட்டுவதற்குப் பணமிராது!

அவசியத்துக்கு, அவன் பணத்தைப் போட்டு சமாளிப்பான் என்றும் எதிர்பார்க்கவே முடியாது! ஏன், அவளது பணப் பற்றாக் குறையைப் பற்றி, நித்யானந்தனுக்குத் தெரிய விடுவதே கேவலம்!

அவனது குற்றச்சாட்டு நிஜமே என்பதாக, வழக்கம் போலத் தேவையற்ற செலவுகளைச் செய்து கொண்டு, அப்படியேதான் இருக்கிறாள் என்று எண்ணுவான்!




நல்லவேளை அவனது தொல்லை சீக்கிரமாக ஒழிந்து விடப் போகிறது என்று நிம்மதியாகக் கூட நினைக்கக் கூடும் என்று எண்ணினாளோ, இல்லையோ அவளால் அழுகையை அடக்கவே முடியாது போயிற்று!

இந்த ஒரு நாள் நிகழ்ச்சியிலேயே இப்படி இருக்கிறதே! திருமணம் நடந்தேற, இன்னமும் இருக்கும் பத்தொன்பது நாட்கள் எப்படிக் கழியப் போகின்றனவோ என்று தவிப்புடன் எண்ணினாள், நிர்மலா!

இன்னும் பத்தொன்பதே நாட்கள்தான். இந்தப் பத்தொன்பது நாட்களுக்குப் பிறகு இந்தப் பிரச்சினையும், அத்தோடு இந்தத் தவிப்பும் முழுமையாக முடிந்து போய்விடும் என்று தனக்குத் தானே அவள் பலமுறை சொல்லிக் கொண்ட போதும், அவளுக்கு அமைதி ஏற்படவில்லை.

மாறாக, இதயத்தின் மீது, ஏதோ இரும்புக் குண்டை ஏற்றி வைத்த உணர்வுதான் உண்டாயிற்று!

அத்தோடு, விளக்க முடியாத விசித்திரமாக, ஒவ்வொரு முறை அவள் தனக்குள் அப்படித் தேறுதலாகச் சொல்லிக் கொள்ளும்போதும், இரும்புக் குண்டின் கனம் இன்னமும் பல மடங்கு பெருகியும் போயிற்று!



## 7

நித்யானந்தனைப் பிரிந்து, பெண்கள் விடுதிக்கு வந்த புதிதில், அவளுள் நிரம்பியிருந்த ரோஷமும், சினமும், நிர்மலாவை நிமிர்ந்து நிற்க வைத்திருந்தன!



அவனுக்கு, நான் என்ன குறைந்து விட்டேன் என்கிற ரோஷம்!

முதுகு ஒடியக் கஷ்டப்பட்டு நான் சம்பாதித்த என் பணத்தை நான் செலவு செய்வதை, யார் கேட்பது என்கிற ஆத்திரம்!

கணவனே என்றாலும், அவனுக்கு அந்த உரிமை ஏது?

இன்னும் சின மிகுதியும் இருவரும் பரிமாறிக் கொண்ட வார்த்தைகள் தந்த வலி வேறு!

எல்லாமாகச் சேர்ந்து, 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று காட்டும் துடிப்பையே அவளுள் ஊக்கி வைத்திருந்தன!

அந்தத் துடிப்பே, விவாகரத்து வரையும், அவளைத் தயக்கமின்றிக் கொண்டு சென்றிருந்தது!

அவனைப் பிரிந்து சென்று, நாளாக, ஆக உற்சாகமின்மையும், எதிலும் ஓர் அலுப்பும் ஏற்படத்தான் செய்தன! ஆனால், அதன் காரணம் விவாகரத்து விவகாரம் இழுத்துக் கொண்டே போவதுதான் என்பதுதான் அவளது அபிப்பிராயமாக இருந்தது.

வெட்டொன்று, துண்டு இரண்டாக, அடியோடு பிரிந்தால்தானே, அவரவர் வாழ்வை என்ன செய்வது என்று, மனதில் எந்த விதச் சிக்கலும் இல்லாமல் சுதந்திரமாகத் தீர்மானிக்க முடியும்?

அதற்கே வழியில்லாதபோது, வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லை, மனதாரச் சிரிக்க முடியவில்லை என்று சலித்து என்ன பயன்?

இதுவே இப்படி இழுபறியாக இருக்கையில், அவளுடைய அண்ணன் வேறு வந்து விவாகரத்துக்குப் பிறகு மறுமணம் செய்து கொள்ளும் கருத்து இருக்கிறதா என்று கேட்டு, அவளிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டு போனான்!

இன்னொரு திருமணமா? ஒரு திருமணத்தில் பட்ட பாடு, ஏழேழ் பிறவிகளுக்கும் போதாதாமா?

ஏழேழ் பிறவி என்றால், நாற்பத்தொன்பது பிறவிகளா? அதற்கு மேலும் பிறவிகள் இருந்தால் மட்டும் மணந்து கொள்வாளாக்கும்?!

போதும்பா, போதும்! ஆயிரம் பிறவி எடுத்தாலும், அவளுக்குத் திருமணமே இனித் தேவையில்லை! இப்படித் தனியாகவே வாழ்க்கையைக் கழித்து விடலாம்!

அப்படி எத்தனையோ பேர் நிம்மதியாக வாழவில்லை?

ஏன்? அவர்களது விடுதியின் நிர்வாகி கூடத் திருமணமே பண்ணிக் கொள்ளாதவர்கள்!

அவருக்கு என்ன குறை? எல்லோரையும் அதிகாரம் பண்ணிக் கொண்டு, நாலு பேர் மதிக்க வாழவில்லையா? அவளும் அப்படியேதான் வாழப் போகிறாள்!

அவள் சொல்லி முடிக்கும் வரை காத்திருந்து, "அப்படியில்லை, நிம்மிம்மா. பிற்காலத்தில் உனக்கு ஒரு பாதுகாப்பு வேணுமில்லையா? யாரோ பிரதீபன் என்பாயாமே... அவர்..." என்று இழுத்த... கூடப் பிறந்தவன், அவள் ஆத்திரமாகக் கையை ஓங்கவும், அவசரமாக நிறுத்திக் கொண்டான்!



"பொறுமை, பொறுமை!" என்று பதறிய ரஞ்சன் கையசைவாலும் கெஞ்சி, "எத்தனையோ பேர், அப்படி ஓர் ஆசையுடனேயே மணவிலக்கு பெறுவதால், எதற்கும் இருக்கட்டும் என்று கேட்டேன்! மற்றபடி, உன்னை எனக்குத் தெரியாதா? நீ தாமரைப் பூ, சூரியகாந்தி ரகம் ஆயிற்றே!" என்று அவளைச் சமாதானப்படுத்திவிட்டுச் சென்றான்!

அதென்ன தாமரைப்பூ, சூரியகாந்தி என்று, அதுவும் நிர்மலாவுக்குப் பிடிக்கவில்லை. அவன் தொடங்கிய மறுமணப் பேச்சோ, மேலும் ஆத்திரத்தைக் கிளப்பியது!

அண்ணன் மேல் கோபத்துடனேயே அலைந்தவளுக்கு, இரண்டு நாட்களுக்குப் பிறகுதான், பிரதீபனின் பெயர் ரஞ்சனுக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்கத் தோன்றிற்று!

நித்யன்தான் சொல்லியிருக்க வேண்டும்!

தன் மேல் நம்பிக்கை இல்லாதவன்தான், மனைவியைச் சந்தேகப்படுவான் என்று பெரிதாகப் பேசுகிறவன், அவள் வீட்டில் மூட்டி விடக்கூடுமா?

அல்லது, சும்மாப் பேச்சுவாக்கில் பிரதீபனின் பெயர் வந்திருக்குமா?

அதென்ன பேச்சு வாக்கு? சும்மா அவன் குடும்பத்தாரோடு, அவன் எப்படிப் போய்ப் பேசலாம் என்று அது வேறு எரிச்சல் வந்தது!

இந்த நித்யனால், அவளது மகிழ்ச்சி, நிம்மதி எல்லாமே போயிற்று! இப்போது அவளது வீட்டிலும் தகராறு கிளப்புகிறானா?

ஆனால், பெரிதாக என்ன செய்ய முடியும்?

எப்படியோ மணவிலக்குக் கிடைத்துவிட்டால், அப்புறம் கொஞ்சம் முயன்றால் இதையெல்லாம் மறந்து, அதன் பின் இன்னும் கொஞ்சம் முயன்றால், அனேகமாகக் கொஞ்சம் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியலாம் என்ற மன நிலையில்தான், அதுவரை நிர்மலா இருந்தாள்.

அதாவது, அன்று மோகனனின் திருமண அழைப்பிதழோடு நித்யானந்தன் அவளைச் சந்திக்கும் வரையிலும் அப்படி இருந்தாள்.

அதற்குப் பிறகு, அவளது மனம் ரொம்பவே குழம்பிப் போயிற்று!

இனி என்றேனும், வாழ்க்கை இனிமையாக இருக்கக் கூடுமா? முடியாது என்றே தோன்றிற்று!

இனிமை இருக்கட்டும்? நிம்மதி? அதுவேனும் கிட்டக் கூடுமா?

அதுவும் சந்தேகம்தான்!

மோகனனின் திருமணத்தை இரண்டு மாதங்கள் தள்ளி, நிர்மலாவின் திருமணம் ரத்தான பிறகு வைத்திருந்தால், ஒரு வேளை அந்த நிம்மதி, அவளுக்கு ஓரளவு கிட்டியிருக்கலாம்!

ஆனால் இப்போது, ரொம்பவே நம்பிக்கை இல்லை தான்!

இந்த அழகில், போன தடவை மாதிரியே ஐஸ்கிரீம் சாப்பிட வேண்டும் என்று சித்தப்பா மகன், அந்தக் குரங்கு கருண் வேறு கிளப்பிவிட்டான்!



சரியான தின்னிப் பண்டாரம்! வீட்டில் சித்தியே அவனை அப்படித்தான் கூப்பிடுவது!

அவன் தொடங்கியதும், உடனே எல்லோரும், 'ஆமாம், ஆமாம்?' என்று அதையே பிடித்துக் கொண்டார்கள்!

வேறு வழியின்றிப் போனால், நிர்மலா, நித்யானந்தன் திருமணத்தின்போது, முதல் நாள் ஷாப்பிங் முடிந்து சாப்பிட்ட அதே கார்னெட்டா ஐஸ்!

யார் வேலை இது என்று ஆத்திரத்துடன் பார்த்தால், அவளுடைய சொந்த அண்ணன்!

தங்கையின் கண்களில் கனலைக் கண்டதும், அவள் காதருகில் குனிந்து, "என் மேல் தப்பில்லை! எல்லோரும் சென்ற தரம் போல, அதேதான் வேண்டும் என்று விட்டார்கள்! கார்னெட்டாவின் சுவை அத்தனை பேருக்கும் பிடித்தமாம். கேட்டார்கள். பெரியப்பாவும், அவரவருக்குப் பிடித்ததை ஆர்டர் பண்ணச் சொன்னாரா..." என்று இழுத்தான் ரஞ்சன்! "உனக்குக் கூட.... அதோ..."

நித்யானந்தன்தான் கொண்டு வந்து கொண்டிருந்தான்! ஆளுக்கொன்றாக இரு கைகளிலும்!

இது வேறா?

இப்படியெல்லாம் வழியத் தேவையில்லையே! மணமாகி, ஓர் ஆண்டுக்கு மேல் ஆகி விட்டதுதானே? இனியும், இதையெல்லாம் யார் எதிர்பார்ப்பார்கள்?

ஆனால், எல்லோரும் கண்குத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டிருந்ததைக் கண்டுபிடித்தபோது, ஈஈ... என்று இளித்துதான் வைக்க வேண்டியிருந்தது!



அதற்குள் நித்யன் வேறு அருகில் வந்து, "இந்தா நிம்மி! சீக்கிரம் பிடி! கொஞ்சம் இளகத் தொடங்கி, உனக்குப் பிடித்த மாதிரி இருக்கிறது! சீக்கிரமாகச் சாப்பிடு" என்று அவள் கையில் ஐஸ்கிரீம் கோனைக் கொடுக்கவும், அவளுக்கு ரொம்பவே நெஞ்சுக்குள் என்னவோ பண்ணவும் தொடங்கிவிட்டது!

அவளுக்கு என்ன மாதிரிப் பிடிக்கும் என்று, நித்யன் நினைவு வைத்திருக்கிறானே! எதிலும் ரசனையற்றுப் போன மாதிரி, இது அவளுக்கே மறந்து போன விஷயம்!

உண்மையில் முன்பு நடந்தது என்ன என்றால், அப்போது மணப் பெண்ணாக இருந்த அவளுக்கு, 'நீ கொடு, இல்லை கொடுக்காதே, மாப்பிள்ளைதான் கொடுக்க வேண்டும்.' அப்படி இப்படி என்று, இந்த இளைய தலைமுறை கலாட்டா பண்ணியதில், அவள் கைக்கு ஐஸ்கிரீம் வரவே இல்லை!

அதைக் கவனித்துவிட்டு, நித்யானந்தன்தான் அவளுக்கு வரும் வரை தானும் சாப்பிடக்கூடாது என்று தன் கையில் சும்மா வைத்திருந்ததை அவளிடம் கொடுத்தான்!

இதை உணர்ந்து, அவன் கைக்கு ஐஸ்கிரீம் வந்து சேரும் வரை அவளும் காத்திருக்க, அவள் கையில் இருந்த கார்னெட்டா லேசாக உருகத் தொடங்கி விட்டது!

உள்ளூர அவனது அன்பும் உருகி, அந்த ஐசில் கலந்திருப்பதாக ஒரு பிரமையில், லேசாக இளகியிருந்த ஐஸ்கிரீம் சுவை அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

மணமான அந்த முதல் ஆறு மாதங்களில், அவ்வப்போது வெளியே போய்ச் சாப்பிடும் தருணங்களில்,



ஐஸ்கிரீம் மட்டும் இந்தப் பதம் வரட்டும் என்று நிர்மலா காத்திருப்பாள்!

அவளுக்காக அவனும் உண்ணாமலே உட்கார்ந்திருப்பான்.

அப்புறமாகச் சேர்ந்து உண்பதில் இருவருக்குமே ஒரு நிறைவு!

அதை நினைவு வைத்து, நித்யன் தந்ததில், உள்ளூர அவளுக்கு நெகிழ்வுதான்! உள்ளே பிசைந்தெடுத்து விட்டது எனலாம்!

ஆனால், இந்தக் கல்நெஞ்சுக்காரனிடம், அதைக் காட்டுவதற்கும், அவளுக்குப் பயமாக இருந்தது.

ஏனெனில், இதுவே பெரியப்பாவுக்காக அவன் நடிக்கும் நாடகம் இல்லை என்று, அவளுக்கு என்ன நிச்சயம்? மணமகள் வேறு, நித்யனுடைய சித்தப்பா மகள்! ஒன்று விட்ட தங்கையின் திருமணம் சிக்கல், சிணுங்கல் இல்லாமல் சிறப்பாக நடக்க வேண்டும் என்று ஆசையும், அவனுக்கு இருக்குமல்லவா?

அத்தோடு, பிரிவு நிச்சயம் என்கையில், அவள் நெகிழ்வைக் காட்டுவதே, அவனுக்கு இளக்காரமாக இராதா? அந்த அளவு, அவள் இறங்குவானேன்?

எனவே, பாதிப்பு இல்லாத மாதிரி அலட்சியமாகக் கணவனுக்குக் காட்டிக் கொண்டு, அதே சமயம் பெரியப்பாவுக்காக மகிழ்ச்சியாக இருப்பது போலவும் காட்டி நடிப்பதற்குள் நிர்மலா பெரும்பாடு பட்டுப் போனாள்!

மனம் அனுபவித்த தவிப்புதான், இப்போது கண்ணீராக இறங்குகிறது போலும்!

அது மட்டுமல்ல! ஓர் ஆண்டுக்கு முந்தைய அன்றைய மகிழ்ச்சியும், இன்று அதை இழந்து நிற்கும் அவலமும் என்ன முயன்றும் தடுக்க முடியாமல் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தன!

நெஞ்சு தவியாய்த் தவிக்கும்போது, கண்ணீர் வரத் தானே செய்யும்?

கண்ணீரை நிறுத்துவதற்கு நிர்மலா முயற்சி செய்யவு மில்லை!

என்னவோ, இந்தக் கண்ணீரில் நெஞ்சின் சுமை கரைந்து, பளு குறைவது போல ஒரு பிரமை! எவ்வளவு முடியுமோ, அவ்வளவு கரையட்டுமே!

ஆனால், அழுது முடித்து, தானாகக் கண்ணீர் நின்ற பிறகோ, கண்ணையே திறக்க முடியாமல், கண்ணும் முகமும் வீங்கியிருப்பதைப் பார்த்து, அவள் இன்னமும் பதறிப் போனாள்!

இந்த முகத்தைப் பார்த்தால், நித்யானந்தன் என்ன நினைப்பான்? அவனுக்காக அழுதிருப்பதாக எண்ண மாட்டானா?

அவசரமாக விடுதியின் சமையல் பகுதிக்குச் சென்று, ஐஸ் கட்டிகளை வாங்கி வந்து ஒத்தடம் கொடுத்து வீக்கத்தை ஓரளவேனும் வடிய வைத்த பிறகே, அவளால் தூக்கத்தைப் பற்றி நினைக்கவே முடிந்தது!

ஆனால், மறுநாள் கண்ணாடியில் பார்க்கையில் முகம் இன்னமும் மோசமாகவே இருப்பது போலத் தோன்றவும், என்ன செய்வது என்று ஒரு கணம் மலைத்தாள்.



சற்று யோசித்து விட்டு, சுந்தரலிங்கத்துக்குப் போன் செய்து, அலுவலகத்தில் திடீரென்று முக்கியமான வேலை வந்து விட்டதால், அன்று கட்டாயம் அலுவல கத்துக்குச் செல்ல வேண்டும், திருமண வேலைகளுக்காக வர இயலாது என்று தெரிவித்தாள்!

யோசிக்கத் தெரியாதவளால் இப்படி சாமர்த்தியமாக சமாளிக்க முடியுமா?

ஆனால் அவள் யோசித்துச் செயல்பட்டது பற்றி, நித்யனிடம் ஒன்றுமே சொல்ல முடியாதே என்பதுதான் அவளுக்கு வருத்தமாக இருந்தது.

சமாளித்த சாமர்த்தியம் பற்றிச் சொல்வதானால், சமாளிக்க நேர்ந்ததின் காரணமான அழுகை பற்றியும் சொல்ல நேருமே!

கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்து கொள்வதைத்தான் அதற்கு உதாரணம் காட்ட முடியும்!

அவள் வர முடியாததற்காக, சுந்தரலிங்கம் அதிகமாக வருத்தப்படவில்லை!

ஏனெனில், நித்யானந்தனிடம் இருந்தும் சில வினாடி முன்புதான் போன் வந்ததாம்! அலுவலகத்தைச் சும்மா எட்டிப் பார்த்துவிட்டு வரலாம் என்று போனால், ஏதோ முக்கியமான அவசர வேலையாம்! எனவே, கல்யாண வேலையில் அவனால் கலந்து கொள்ள இயலாது என்பதை அவருக்கு உடனே தெரிவித்து விட்டால், அதற்கேற்ப அன்றைய நிகழ்ச்சிகளை அவர் அமைத்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்று எண்ணி, அலுவல கத்தில் இருந்தே, முதலில் அவருக்குச் சொன்னானாம்!



"அடுத்து மாப்பிள்ளை உனக்குச் சொல்வதாக இருந் தார். அதற்கு முன், உனக்கும் அவரைப் போல, அதே பிரச்சினை போன் மூலமாய் நேர்ந்திருக்கிறது! பரவா யில்லையம்மா. நீங்கள் இரண்டு பேரும் கெட்டிக்காரர் களாக, அவரவர் அலுவலகங்களில் முக்கியமான ஆட் களாய் இருப்பதே எனக்கு சந்தோஷம்! இங்கே நீ வந்தால் கூட்டிப் போகலாம். உன் அத்தை, சித்தியையும் கூட அழைத்துப் போய் பெரியவர்களுக்குத் தேர்ந்தெடுக்கிற வேலையைப் பார்க்கச் சொல்லிவிட்டு, உன்னோடு கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம் என்று நினைத்தேன்! சரி, வேலை இருப்பதாகச் சம்பளம் கொடுக்கிற இடத்தில், உனக்கு மதிப்புக் கொடுத்துக் கூப்பிடுகிறபோது, போய்ச் செய்தால்தானே நன்றாக இருக்கும்? நான்தான் இன்னும் கொஞ்ச நாள் இருப்பேனே! நாம் இன்னொரு நாள் பேசலாம்! நீ வேலையைப் பார்!" என்று முடித்தார் சுந்தரலிங்கம்.

நித்யனுக்கும் வேலையாமா?

நிஜமாக இருக்குமா? அல்லது, அவளைப் போலவே, அவனும் கஷ்டப்பட்டானா?

ஊகூம்! நித்யானந்தனாவது, கஷ்டப்படுவதாவது! அத்தாடு, அவன் என்ன, அவளைப் போல அழவா போகி றான். கண்ணும் முகமும் வீங்கிப் போவதற்கு?

இப்போது அவன் பார்ப்பது பெரிய வேலையல்லவா? அவனே பார்த்தாக வேண்டியதாய், நிஜமாகவே ஏதேனும் அவசரத் தேவை நேர்ந்தே இருக்கலாம்!

எப்படியோ, அவளைப் பொறுத்தவரையில், நேற்றைய வேதனை இன்று இராது!



திருமணக் கூட்டத்தில் போய்ச் சேர்ந்திருந்தாலும், நித்யனைப் பார்க்க முடியவில்லை என்பதால் பிரச்சினை கிடையாதுதான்! பெரியப்பாவிடம் கொஞ்ச நேரம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டும் இருந்திருக்கலாம்!

இனி, அது முடியாது என்பதால், மெய்யாகவே அலு வலகத்துக்குப் போக வேண்டியதுதான், குறைந்த பட்சமாக, ஒரு நாள் விடுமுறை மிச்சம்தானே?

ஒவ்வொன்றாகப் பார்க்கப் பார்க்க, ஐயோ நமக்கு இப்படி நடந்ததே, அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததே. அவ்வளவு ஆசையாக இருந்தானே என்று எண்ணி எண்ணி ஏங்குவதற்கு, உருப்படியாக அலுவலைப் பார்க்கலாம்!

நன்றாக வேலை செய்தால், சம்பள உயர்வு, பதவி உயர்வு என்று கொடுத்து அலுவலர்களுக்கு ஊக்கம் பெருக்கும் நிர்வாகம், அது! அவளுக்கே கிடைத்திருக் கிறதே! எனவே, வேலையை முனைந்து செய்தால், வளமும் பெருகும்! மன நிம்மதியும் கிடைக்கும்!

இவ்வாறெல்லாம் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு, வேலையைத் தொடங்கினால், "என்ன மேடம், உடம்பு சரியில்லையா? அல்லது, மனசுக்கு ஏதும் கஷ்டமா?" என்று மிகவும் கரிசனமாகக் கேட்டுக் கொண்டு, பிரதீப் வந்து நின்றான்.

"அப்படி ஒன்றும் இல்லையே, ஏன்" என்று, புரி யாமல், அதே சமயம் உள்ளூர எரிச்சலுடன் கேட்டாள் அவள்!

கொஞ்ச நாட்களாக, அதிலும் பதவி உயர்வை எல்லோர் முன்னிலையிலும் தலைமை நிர்வாகி சொன்னதில்

இருந்து, இவன் கொஞ்சம் அதிகமாகத்தான்... அடிக்கடி அவள் இடத்துக்கு வந்து நின்று பேசுவதாகத் தோன்று கிறது!

அதிக உரிமை எடுத்துக் கொள்வதாகவும்!

அன்றைக்குக் கூட, வேலையில் புதிதாகச் சேர்ந் திருக்கும் சுனிதா ஏதோ சந்தேகம் கேட்க அவளிடம் வந்தபோது, "சும்மா, சும்மா வந்து, மேடத்தைத் தொல்லை செய்யாதே, போ!" என்று அவளை விரட்டினான்!

யாருக்கேனும் உதவுவதும், உதவாததும் அவள் விருப்பம், இதில் இவன் என்ன தலையிடுவது என்று தோன்றத்தான் செய்தது!

இப்போதெல்லாம், இப்படித்தான் அவளை நெருங்கு கிறவர்களை எல்லாம் விரட்டுகிறான். வேலை தடைப் படாமல் நடக்கும் என்பதால், அவளுக்கு நன்மைதான் என்றாலும், தனக்கு வேண்டியதை, அவளே செய்து கொள்ள மாட்டாளா?

அதில் தலையிடுவது, என்னவோ அவள் விஷயத்தில், அவனுக்கு அதிக உரிமை இருப்பது போல, மற்றவர் களுக்குத் தோன்றக் கூடுமே!

அதனால், பிரதீப் சற்று அளவோடு பேசுவது நல்லது என்று, அப்போதே நிர்மலா நினைத்தாள்!

அதையே அவள் வாயைத் திறந்து சொல்லத் தொடங்கு முன், "இவளைப் போன்றவர்களிடம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும், நிர்மல் மேடம்! இல்லாவிட்டால், சந்தேகம் கேட்கிற பாவனையில், முழு வேலையையும் நம்மையே செய்ய வைத்து விடுவார்கள்!



உங்களுக்கு வேறு இளகிய சுபாவமாக இருக்கிறதா, ஒரேடியாக உங்கள் தலையில் ஏறி உட்கார்ந்து விடக் கூடாதே என்றுதான், உங்களை முந்திக் கொண்டு, அவசரமாகப் பேசிவிட்டேன்! தவறாகத் தோன்றினால், தயவு பண்ணி மன்னித்துவிடுங்கள்! ப்ளீஸ் மேடம்!" என்று பிரதீப் அவசரமாக விளக்கம் கூறிப் பெரிதாக மன் னிப்பும் கேட்கவே, அவள்தான், "போகிறது விடுங்கள்! இதற்கெல்லாம் எதற்கு மன்னிப்பு? எனக்கு உதவிதானே செய்தீர்கள்?" என்று சமாதானம் சொல்லி வழியும்படி ஆயிற்று!

அப்புறமும் ஒரு சில சமயங்களில், இப்படி நடக்கத் தான் செய்தது!

என்றேனும், என் விஷயத்தை நானே பார்த்துக் கொள்வேன்... நீங்கள் தலையிட வேண்டாம் என்று சொல்லி விட வேண்டியதுதான் என்று அவள் கன கம்பீர மாக, நிமிர்ந்து உட்கார்ந்தால், உடனே காலில் விழாத குறையாக, பெரிதாக மன்னிப்புக் கேட்டு விடுவான்.

இவனைப் போய்க் காரணமற்று தப்பாக எண்ணி னோமே என்று அவளுக்குக் கழிவிரக்கமாகி விடும்!

அப்புறம் அதை ஈடுகட்ட, இன்னும் சகஜமாகப் பேசு வாள் அவள்!

ஆனால், அத்தோடு அவனை மறந்தும் போவாள்!

இன்று, அவன் உடல்நிலை பற்றிக் கேட்டது, அதுவும் கரிசனமாகக் கேட்டது, அவளுக்கு உள்ளூர எரிச்சல்தான்!

வேலைக்கு வந்தால், கொடுக்கப்பட்ட வேலையைப் பார்க்க வேண்டும்! மற்றபடி, அவளது உடல், மன நலங் களைப் பற்றி பேச, இவன் யார்?

எவ்வளவு சிரமப்பட்டு வேலையில் மனதை ஈடுபட வைத்திருந்தாள்! அதைப் போய்க் கெடுக்கிறானே!

எரிச்சலை அடக்கிக் கொண்டுதான் அவள் பதில் சொன்னது!

ஆனால், அவள் முகம் சிவந்திருக்கிறது, கண்ணிமை வீங்கியிருக்கிறது., குரல் சரியில்லை என்று கவலை போல அடுக்கவும், நிர்மலா பொறுமையிழந்தாள்!

எவ்வளவு சிரமப்பட்டு, அழுததை மறைக்க, மறக்க முயற்சி செய்து, ஓரளவு வெற்றி கிடைத்தது! அதைப் போய்க் கெடுக்கிறானே!

எரிச்சல் அதிகரிக்கவே, "ஒரு பெண்ணுக்கு, இரவு விழித்திருந்து, அழுகைப் படம் ஒன்றைப் பார்ப்பதற்கு உரிமை கிடையாதா? இதைப் போய்ப் பெரிது படுத்து வார்களா? போங்கள், பிரதீப் சார், போங்கள்! போய், உங்கள் இடத்தில் உட்கார்ந்து, உங்கள் வேலையைப் பாருங்கள்! இப்படித் தேவையற்று மூக்கை நுழைக்காதீர்கள்!" என்றாள் எரிச்சலோடு!

அடுத்தடுத்த இடங்களில் அமர்ந்திருந்தவர்களின் காதுகளில் கூட விழுந்திருக்கும்!

நிச்சயமாக விழுந்தது என்பதன் அடையாளமாக, ஓரிருவர் தலை திருப்பி அவர்களைப் பார்க்கவும், அலுவலகம் முழுவதும் அவள் அழுதது பரவப் போகிறதோ என்று, நிர்மலாவின் முகம் கன்றியது!

பிரதீபனின் சிந்தனை எங்கே பாய்ந்ததோ, அவனும், முகம் சுட்ட கத்தரிக்காயாய் வதங்க, விசுக்கெனத் திரும்பிப் போய்விட்டான்!



பெரிதாக எதுவும் எண்ணத் தோன்றாமல், போய்த் தொலைந்தான் என்று நிம்மதியோடு, நிர்மலா மீண்டும் வேலையில் முனைந்தாள்!

மனதை மிகவும் கட்டுப்படுத்தி, அலுவலில் முயன்று செலுத்தி, அதில் நல்ல வெற்றியும் அடைந்துவிட்டோம் என்று நிர்மலா இறுமாந்த வேளையில், "அண்ணி" என்ற அழைப்புடன் மணப்பெண் ரதி அவளருகே வந்து நின்றாள்!

நிர்மலா துள்ளிக் குதிக்காத குறைதான்!

அவள் மட்டுமல்ல! அவனது இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பிரதீபனுக்கும், ஏற்கனவே சற்றுப் பிதுங்கினாற் போல இருந்த விழிகள் வெளியே தெறித்து விழாத குறைதான்!



## 8

அழகான பெண்களைக் கண்டால், பிரதீபனுக்கு உள்ளத்தின் ஒரு பக்கம் வேகமாகத் துடிக்கும்! அந்தத் துடிப்பில், அவர்களை ஏகத்துக்குப் புகழ்ந்து தள்ளி விடுவான்!

ஆனால், அதே சமயம், அவனது இதயத்தின் அடுத்த பக்கத்துக்குப் பணம் தவிர மற்றதை உணரத் தெரியாது!

அதனாலேயே முதலில் நிர்மலாவைப் பார்த்துக் கிறுகிறுத்த அவனது மனம், அவள் திருமணமானவள் என்று தெரிந்ததும், நிதானமாகத் துடிக்கலாயிற்று!

அப்புறமும், நிர்மலா கணவனைப் பிரிந்து தனியே விடுதியில் வாழ்கிறவள் என்று தெரிய வந்த போதும், அவன், அதைப் பெரிதாக எண்ணவில்லை!

கணவன் மனைவி பிரிவுக்குக் காரணங்கள் எத்தனையோ இருக்கலாம்!

கணவன் வெளியூரில் இருக்கலாம்! வெளி நாட்டில் கூட இருக்கலாம்!

நல்ல வேலை., சம்பளம்! சம்பளம் மேலும் உயர வழியுள்ள வேலை என்பதால், வேலையை விட மனமின்றி, அவள் இங்கே தனித்து வாழலாம்!

இப்படித்தான் அவன் நினைத்திருந்தான்!

லட்டு மாதிரிப் பெண்ணைப் பிரிந்து எங்கோ இருக்கிறானே மடையன் என்று, மனதிற்குள் நிர்மலாவுடைய கணவனை, அவன் ஏளனமாக நினைத்தது உண்டு!

அந்தச் சமயத்தில், ஒரு நாள் குடும்பக் கோர்ட் ஒன்றின் பக்கம் ஒரு நண்பனோடு போயிருந்தபோது, அங்கே, அவன், நிர்மலாவைப் பார்க்க நேர்ந்தது!

இவள், இங்கே என்ன செய்கிறாள்?!

அவனை மாதிரி யாரோடாவது சும்மா வந்திருப்பாளோ என்று எண்ண வாய்ப்பில்லாமல், முகம் மிகவும் வாடிப் போயிருந்தது. அழுகையை அடக்கிக் கொண்டிருப்பது போல!

இந்த வாட்டம் அடுத்தவருக்காக வருவது என்றால், இவள் மிகவும் இளகிய மனம் படைத்தவளாக இருக்க வேண்டும்! ஆனால், யாருக்காகவும், யாரும் பெரிதாக



மனம் இளகக் கூடும் என்று அவனால் நம்ப முடியவில்லை!

ஏனெனில், அவனைப் பொறுத்த வரை, அடுத்தவர் துன்பம் சும்மா வேடிக்கை பார்ப்பதற்கு மட்டுமேயானது! தன்னைப் போலப் பிறரையும் நினைக்கும் அவனது நல்ல மனம், மற்றவர்கள் மட்டும் எப்படி வித்தியாசமாக இருக்க முடியும் என்று யோசித்தது!

இதில், அவனுக்கு லாபம் இருக்கக் கூடுமா?

ஒரு பொறி தட்ட, விவரம் சேகரித்தான்.

கிடைத்த விபரம், பிரதீப்புக்குப் பிடித்தமாகவே இருந்தது!

அழகான பெண், அவனை விடவும் அதிகம் சம்பாதிக்கிறாள். வேலையை விட்டுவிட்ட கணவனை விவாகரத்து செய்யப் போகிறாள்.

அவளுடைய குடும்பத்தில் யாருக்கும் இது பிடித்தம் இல்லை என்பது அவர்கள் யாரும் கூட வராததில் இருந்து தெரிந்த விஷயம்!

கொசுறாக, இவள் பிடிவாதக்காரி என்பதும் தெரிந்தது!

மற்றபடி, குடும்பத்தினர் எதிர்ப்பை மீறி, மணவிலக்கில் இவ்வளவு தீவிரமாக இருக்க மாட்டாள்!

கணவனுக்கும் சமமான பிடிவாதம் இருக்க வேண்டும்! மற்றபடி வேலையில்லாமல் சும்மா உட்கார்ந்திருக்கிற அவன், கை நிறையச் சம்பளம் வாங்கும் இவளை விட மாட்டான்!

அடுத்து, பிரதீப்பின் மனதில் இன்னொரு கணக்கு ஓடியது!





அவனைப் பொறுத்தவரையில், சொல்லுகிற வேலையைச் செய்வானே தவிரத் தானாகப் புதிது புதிதாக உத்திகளைக் கையாண்டு நிர்வாகத்திடம் பேர் வாங்கும் திறமை கிடையாது!

நிர்மலாவிடம், அது இருந்தது!

திறமைக்குப் பரிசளிக்கும் நிர்வாகம், அவளுக்கு இன்னுமே நிறையக் கொடுக்கப் போகிறது! அதை ஏன் விடுவது?

இப்போதே, இருவர் வருமானமும் சேர்ந்தால், நாற்பதை எட்டும்! நிர்மலா மூலமாக இன்னும் இன்னும் சேரும் போது, அவன் பெரிய பணக்காரனாகி விடுவான்! அப்புறம், ஏசி, கார்... தயிர்க்காரி கதை மாதிரி, அவனுள் எத்தனையோ கனவுகள் விரிந்தன!

வெறும் கனவுகளிலேயே மிதந்து விடாமல், இவை அனைத்துக்கும் அடிப்படை நிர்மலாவை மணப்பதுதான் என்பதை, அவன் நன்றாக உணர்ந்திருந்தான்!

குறிக்கோள் அவனுக்குத் தெளிவாக இருந்தது!

அதை அடைவதின் முதல் கட்டமாக, நிர்மலாவின் மனதில், அவளுக்கு வேண்டியவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முனைந்தான்!

அவனது முயற்சியைக் குறை சொல்ல முடியாது! ஆனால், நிர்மலா, அதைக் கண்டுகொண்ட மாதிரியே தோன்றவில்லை!

அவள், தன்போக்கில் அலுவலகத்துக்கு வந்தாள், வேலையைச் செய்தாள்., எல்லோரிடமும் சாதாரணமாகப்



பேசிப் பழகினாள், வேலை முடிந்ததும் விடுதிக்குத் திரும்பிச் சென்றாள்!

பொதுவாக எதிலுமே அவளுக்கு அதிக அக்கறை இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை!

ஆனால், இந்த மாதிரிப் பெண்களுக்குத் தான் மட்டும் தான் எல்லாம் என்கிற உணர்வுதான் அதிகமாக இருக்கும்! அதனால்தான் மற்றவர்களைப் பற்றி நினைக்கக் கூடத் தோன்றாது என்பார்கள்!

நிர்மலாவும் அப்படித்தான் என்று கணக்கிட்டுத்தான், அவளிடம் பிரதீப் அதிகக் கரிசனமாகப் பேசுவது! இப்போது பேசியதும் அப்படி எண்ணித்தான்!

எதற்காகவோ அழுது கரைந்திருக்கிறாள்! பரிவு காட்டி, உருகிப் பேசினால் முழுசாக வழிக்கு வந்துவிடுவாள் என்று நினைத்தான்!

ஆனால் பாதகி, சற்றும் எதிர்பாராத விதமாக அவன் மூக்கை அறுத்துவிட்டாளே!

அவன் கவனமாக வளர்த்து வைத்திருந்த, அவளுக்கு நெருங்கியவன் என்கிற மாயை நொறுங்கிப் போய் விட்டது! இதை, இப்படியே வளர்த்துக் கொண்டுபோய், அவளது மணவிலக்கு அமுலுக்கு வரும் தருணத்தில், ஒரேடியாக உருகி வழிந்து, அவளைப் பிடித்து அமுக்கி விட வேண்டும் என்ற அவனது திட்டத்துக்கும் அதே கதிதான்!

இன்றைய மதிய உணவு இடைவேளைப் பேச்சின் முக்கியக் கருப்பொருள் என்னவாக இருக்கும் என்று, இப்போதே பிரதீப்பால் ஊகிக்க முடிந்தது!

நிர்மலா, பிரதீப்பை உதறித் தள்ளி விட்டாள்! இந்தச் செய்தி கண் காது வைத்துப் பரப்பப்படப் போகிறது!

மற்றவர்கள் யார் என்ன பேசினாலும், அதைப் பற்றி, அவனுக்கு அக்கறையில்லை!

ஆனால், அவனது திட்டமல்லவா குலைந்து போகும் போல இருக்கிறது. இதைத் தடுப்பது எப்படி? அதுதான் அவனுக்குப் பெருங்கவலையாக இருந்தது.

மூன்று மாதங்களுக்கும் மேலாக, இந்த முயற்சி செய்து கொண்டிருக்கையில், அதை வீணாக விடலாமா? கூடாது என்பது அவனுக்கு நிச்சயம்!

ஆனால், அடுத்து என்ன முயற்சி எடுப்பது?

ஒன்றும் நடவாதது போல, சாதாரணமாகக் காட்டிக் கொள்ளலாமா? அல்லது, வருத்தத்தில் மூழ்கிக் கிடப்பது போல இருப்பது மேலா?

இந்த யோசனையில் பிரதீப் தீவிரமாக ஈடுபட்டிருந்த போதுதான், ''அண்ணி'' என்று அழைத்தபடி, இளம் பெண் ஒருத்தி வந்து நின்றாள்!

அந்த அழைப்போடு, அவளது முகத்தைப் பார்த்ததுமே பிரதீப் அதிர்ந்து போனான்.

அவன் நிர்மலாவைக் குறி வைக்கத் தொடங்கிய பிறகு, குடும்பக் கோர்ட் வளாகத்தில் அவளுடைய கணவனைப் பார்த்திருக்கிறான்.

இப்போது, அண்ணி என்று பிரியமாக அழைத்தபடி வந்து நின்ற பெண்ணுக்கு, அவனது சாயல் அப்படியே இருந்தது!



அப்படியானால்... என்று விழித்தான் பிரதீப்!

இந்த உறவு எப்படித் தொடரலாம்?!

ரதியைப் பார்த்து, நிர்மலாவுக்கும் பிரமிப்பே!

"ரதி..! இங்கே, எப்படி?" என்று வியப்புடன், தணிந்த குரலில் வினவினாள், அவள். அடுத்தவர் வேலை கெடக் கூடாதல்லவா?

அவளைப் பின்பற்றித் தானும் தனியாகவே, ''உங்களைப் பார்க்கத்தான் வந்தேன், அண்ணி!'' என்ற ரதி, முகம் செக்கர் வானமாகச் சிவக்க, விஷயத்தைச் சொன்னாள்.

''அண்ணி, மோகனு... வந்து... வந்து, உங்கள் சின்ன அண்ணனுக்குத் திருமணப் பரிசாக, நான் ஏதாவது கொடுக்க வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது! முதலில், இங்குள்ள கடைகளும் எனக்குத் தெரியாது! அத்தோடு, அவருக்கு என்ன பிடிக்கும், பிடிக்காது என்று, அதுவும் எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது! உங்களுக்கு அவரது விருப்பு வெறுப்பு பற்றித் தெரியும் அல்லவா? அவருக்குப் பிடித்தமானதாக, ஒரு நல்ல பரிசைத் தேர்ந்தெடுக்க, நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும், அண்ணி!'' என்று வெட்கத்துடன் விளம்பிய ரதியைப் பார்க்கையில், நிர்மலாவுக்குச் சிரிப்பு வந்தது!

கூடவே சந்தோஷமாகவும் இருந்தது!

நானும் இப்படித்தானே எண்ணினேன் என்று நினைத்ததும், தவிர்க்க முடியாமல் உள்ளூர வலியும் உண்டாயிற்று!

அப்போது அலைந்து திரிந்ததும், மனத்திற்குப் பாந்த மாக ஒன்றும் கிடைக்காமல், கடைசியாக அவளே வடி வமைத்துச் செய்யச் சொன்னதும்... கடைசியில்...

கடவுள் புண்ணியத்தில், இந்த ஜோடியேனும் நல்ல படியாகவே இருக்கட்டும் என்று, கண்மூடி ஒரு தரம் வேண்டிக் கொண்டுவிட்டு, "எப்போது வாங்க வேண் டும்?" என்று கேட்டபடி எழுந்தாள் நிர்மலா.

"இப்போதே, அண்ணி! உங்கள் அலுவலக நிர்வாகி யிடம், உங்களைக் கூட்டிப் போவதற்கு அனுமதி கூட வாங்கிவிட்டேன்!" என்று உற்சாகத்துடன் மணப்பெண் இயம்ப, நிர்மலா மேலும் வியந்து, கூடவே முகமும் மலர்ந்து சிரித்தாள்!

கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டியவாறு, "பரவாயில்லையே! ரொம்பவும் வேகமாகத்தான் வேலை செய்கிறீர்கள்! மோகனன் அண்ணன் அதிர்ஷ்டசாலி தான்!" என்று, ரதியைக் கேலி செய்தவாறே, நிர்மலா கிளம்பினாள்!

நிர்வாகியிடம் ஒரு வார்த்தை சொல்வதற்காக அவர் அறைக்குச் சென்றால், அவரும் ரதியைக் கேலி செய்யத் தொடங்கிவிட்டார்!

"பலே ஆளம்மா, இந்தப் பெண்! மணமகன் உன் ஒன்றுவிட்ட அண்ணன் என்றாயில்லையா? பார்த்துக் கொண்டே இரு! உன் அண்ணனை, இந்தப் பெண், சுண்டு விரலால் ஆட்டிப் படைக்கப் போகிறாள்!" என்று சிரித்தார் அவர்!

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, இரு பெண்களும் கிளம்பினர்!



தனக்கு ஏன், அப்படி ஆட்டிப் படைக்கத் தெரியவில்லை என்று நிர்மலாவுக்குள் யோசனை ஓடியது.

இத்தனைக்கும், நித்யன் அன்பாகத்தானே இருந்தான்? ரொம்பவே!

ஆனால், திரும்பத் திரும்ப இப்படிப் பழசையே நினைத்து அலைபாய்வது சுத்த மடத்தனம் என்று தன்னைத்தானே கண்டித்துக் கொண்டு, பிடிவாதமாக நிகழ்வுக்கு மனதைத் திருப்பி, ஒரு ஷாப்பிங் காம்பளக் சுக்கு, ரதியை அழைத்துச் சென்றாள் நிர்மலா!

அங்கே ரதி 'ஷாப்பிங்' செய்ததைப் பார்த்ததும், நிர்மலாவுக்கு ஒரு நல்ல அனுபவமாயிற்று!

ஒரு பொருளை வாங்குவதற்கு, இவ்வளவு யோசிப் பார்களா என்று, அவளுக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது!

இவ்வளவு யோசிக்கவில்லை என்றுதான், நித்யன் அவ்வளவு கோபப்பட்டானோ?

முதலாவதாகத் துணிமணிப் பரிசு வாங்க, ரதிக்குப் பிடிக்கவில்லை!

எப்படியும் ஒருநாள் கிழிந்து வீணாகி, அதைத் தூரப்போட்டு விடுவோமாம்! ரதியின் பரிசு, அவளுடைய கணவனிடம் வாழ்நாள் பூராவும் இருக்க வேண்டும் என்பதால், எவ்வளவு விலை உயர்ந்ததாக இருந்தாலும் துணி வகை வேண்டாம் என்றாள்!

பத்திரமாகவே வைத்திருந்தாலும், இன்றைய நாகரீகம் சில பல ஆண்டுகளில், பத்தாம்பசலி ஆகிவிடாதா? அப்போதும் அணிய முடியாதபடி, வீண்தானே?

அடுத்து வெள்ளியினால் செய்யப்பட்டவைகளும் ஒதுக்கப்பட்டன!

காரணம், நல்ல வெள்ளி என்றால் காற்றில் உள்ள பிராணவாயுவினாலேயே கறுத்து விடுமாம்! அப்போது பார்க்க நன்றாக இராதாம்! அப்படிக் கறுக்காதது என்றால், அது நல்ல வெள்ளியாக இராது என்பதால் அதுவும் வேண்டாமாம்!

தங்கம் என்றாலோ, ஆண்கள் அதிகம் நகையணிந்தால், அவளுக்கே பிடிக்காது என்றாள்! அது மட்டுமின்றி, இவள் தன்னிஷ்டமாக ஏதாவது நகை மோதிரமோ, கைச் சங்கிலியோ வாங்கிக் கொடுக்க, அவன் ஏற்கனவே அந்த மாதிரிகளில் சென்டிமென்டாக ஏதேனும் வைத்திருக்க, எதை அணிவது என்று, அதிலேயே இருவருக்கும் மன வேறுபாடு வந்து விடாதா?

அழகழகாக நிறைய போட்டோ ப்ரேம் காட்டினார்கள்!

"இப்போதைய படங்களை வைத்தால் அழகாகத்தான் இருக்கும்! ஆனால், பத்து... இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும்போது, இந்த அழகு இப்போது இல்லையே என்று வருத்தம் வராதா அண்ணி? வருத்தப்படுத்தக் கூடியதைப் போய், வாங்குவானேன்? கொடுப்பானேன்? அதனால் இதுவும் வேண்டாம்!"

வருங்கால நாத்தனாரைப் பிரமிப்புடன் பார்த்தாள் நிர்மலா!

இவர்கள் குடும்பமே, இப்படி ரொம்ப ரொம்ப யோசித்து தான் முடிவு செய்வார்களா?

ஆனால், எல்லாவற்றையுமே இப்படி யோசித்துக் கொண்டிருந்தால், மனித உணர்ச்சிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, வாழ்க்கை இயந்திரத்தனமாகி விடாதா?



ஆனால், நித்யனோடு அவள் வாழ்ந்த வாழ்க்கையில், இயந்திரத்தனம் இருந்ததில்லையே!

அதிலும், அந்த முதல் ஆறு மாதங்களில், வார நாட்களில்கூட, திடுமென்று தோன்றிவிட்டால், வீட்டில் இருக்கும் உணவை ப்ரிட்ஜில் வைத்துவிட்டு, வெளியே போய்ச் சாப்பிட்டு, இனிப்பாய் பீடாவைக் குதப்பிக் கொண்டு வருவார்கள்!

வீணாக்குவதில்லை, மறுநாள் உணவுக்கு வேறு செய்யாமல், இதையே சூடு பண்ணிச் சாப்பிட்டு விடுவார்கள். கூடவே, அன்றைய ஆனந்தத்துக்கும் குறைவிராது!

உண்டு முடித்தால், காலாற நடந்தே வருவார்கள்!

அப்படி வரும்போது, ஒரு பழைய பொருள் கடையில், ரோமன் எண்களுடன் கூடிய ரொம்பப் பழைய காலத்துச் சுவர்க் கடிகாரம் ஒன்று, பெண்டுலத்துடன் சாவி கொடுத்து ஓடுகிற மாடலில் உள்ளதைப் பார்த்துவிட்டுக் கையில் இருந்த பணத்தையெல்லாம் கொடுத்து, நித்யன் அதை வாங்கினானே!

வாங்கி, அதைக் கையில் தூக்கிச் சுமந்து கொண்டே வீட்டுக்குக் கொணர்ந்தானே!

நடு வழியில் நடக்க முடியாது போனால் ஆட்டோவுக்குக் கொடுக்கக் கூடப் பணம் கிடையாது! மறுநாள் பாங்கில் எடுத்தால்தான் உண்டு என்கிற நிலை!

அப்போதும், அந்தக் கடிகாரத்தை வாங்க நித்யன் தயங்கவில்லை!

எனவே, யோசித்து முடிவு செய்துதான் விரலைக் கூட அசைக்க வேண்டும் என்கிற இயந்திரத்தனம் அவனுக்குக் கிடையவே கிடையாது!

இல்லை! இது... இருவரின் தகராறின் காரணமே வேறு ஏதோ!

மோகம் தீர்ந்துவிட்டது என்றும், ஒரேடியாகச் சொல்ல முடியாது!

அவர்களது சண்டைகளுக்குப் பின்னான சமாதானங்களை எண்ணிப் பார்க்கும்போது...

நினைத்தால் வலிக்கிறது... அதனால் நினைக்கக் கூடாது என்று, நன்கு யோசித்து ஆராயாமல், சும்மா ஒதுக்கி வைத்ததும் தப்புதானோ?

பலமுறை நினைத்து, காரண காரியம் யோசித்து, ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டுமோ?

ஆராய்ந்து பார்த்திருந்தால்... பிரச்சினையின் ஆணி வேரைக் கண்டு பிடித்து அகற்றி, அவளது இல்லறத்தைக் காப்பாற்றியிருக்கலாமோ?

என்னவோ புரிந்தும் புரியாமலும் அவளுள் ஜாலம் காட்டியது!

ஆனால், இனி, இதை யோசித்து என்ன பயன்? அதற்கான காலம் கடந்துவிட்டதே!

ஐயோ என்று நெஞ்சு தவிக்கையில், "அண்ணி" என்று ரதியின் குரல் சற்று உரத்துக் கேட்டது! "என்ன அண்ணி?" என்றாள் சிறு கவலையுடன் அவள்.

எங்கே இருக்கிறோம், என்ன செய்கிறோம் என்று ஒருவாறு உணர்ந்த நிர்மலா, சட்டெனக் குன்றிப் போனாள்!



இந்தப் பெண் பாவம், எதற்காக உதவி கேட்டு அவளை அழைத்து வந்திருக்கிறாள்? அவளானால், தன்னையே எண்ணி, உள்ளூரப் புலம்பிக் கொண்டிருக்கிறாள்! கண்ணராவி!

அவசரமாகச் சமாளித்து, "ஒன்றுமில்லை, ரதி! வேறே எந்த இடத்துக்குப் போகலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்! இந்தக் காம்ப்ளக்சின் பின் பக்கம் இன்னொரு குட்டிக் கடை இருக்கிறது! கடை சின்னது என்றாலும், வைத்திருக்கும் பொருட்கள் அருமையாக இருக்கும்! அதிகம் வாங்காவிட்டாலும், சும்மாப் பார்ப்பதற்காக வேனும், அவ்வப்போது, நான் அங்கே போவதுண்டு! வாருங்கள். அங்கே போவோம்!" என்று ரதியைத் தன்னுடன் கூட்டிப் போனாள்.

செல்லும்போதே, "அண்ணியாக இருந்து கொண்டு, நீங்கள் என்னை 'வாங்கள், போங்கள்' என்றால், ஒரு மாதிரி இருக்கிறது, அண்ணி!" என்றாள் ரதி.

"நீங்களும்தான், சீக்கிரமே எனக்கு அண்ணியாகப் போகிறீர்கள்!" என்று நிர்மலா முறுவலிக்கவும் ஒரு கணம் திகைத்துவிட்டு, "ஆமாமில்லை?" என்று கேட்டு மகிழ்ச்சியோடு தானும் புன்னகை செய்தாள் ரதி!

தொடர்ந்து, "நம் இருவருக்கும் கிட்டத்தட்ட சம வயது தானே? சில மாதங்கள் தான் வேறுபாடு! அதனால், நாம் இருவரும் உறவை மறந்துவிட்டு, சினேகிதிகளாக இருந்தால் என்ன, அண்ணி?" என்று கேட்டாள் அவள்.

"உறவை மறக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, 'அண்ணி'யிடம் அபிப்பிராயம் கேட்டால் எப்படி?"



என்று குறுநகையோடு நிர்மலா கேட்கவும், கலீரென்று சிரித்தாள் ரதி!

"அண்ணனுக்கு ஏற்ற மனைவி! நித்தியண்ணன் இப்படித்தான் புத்திசாலித்தனமாக, நெத்தியடி கொடுப்பார் என்று அப்பா சொல்லுவார்! ஆனால், ரொம்பவும் முன்னாலேயே வளைகுடாப் பக்கம் போய்விட்டதால், எனக்கு இங்கே அதிகப் பழக்கம் கிடையாது அண்... நிர்மலா! ஆனால், உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.." என்று பேசிக்கொண்டே வந்த ரதி, நிர்மலா காட்டிய கடைக்குள் சென்றதும், "வாவ்!" என்று வாயைப் பிளந்தாள்!

அத்தனையும் கிரிஸ்டலில் வடித்த பல்வேறு கலைப் பொருட்கள்! பொருத்தமான விளக்கொளியில் கண்ணைப் பறித்தன!

உலக அதிசயங்களில் இருந்து, உள்ளான் மாதிரிச் சிறு பறவைகள் வரை உள்ளும் வெளியுமாகப் பளபளத்தன!

"ஹையோ! இதில் எதை விடுவது என்றே தெரியவில்லையே!" என்று குதித்தபோது, ரொம்ப யோசிக்கிற சீரியஸ் ரதி காணாமல் போனாள்!

அவளுடைய அண்ணனைப் போல!

"இனிமேல், ஒரொரு தரம் இந்தியாவுக்கு வரும் போதும், என் ஷாப்பிங் எல்லாம் இங்கேதான்! இப்போது... நிம்மி, இது போலப் பொருட்கள் மோகனுக்குப் பிடிக்குமோ?" என்று சிறு கவலையுடன் கேட்டாள் அவள்!

"எங்கள் வீட்டு 'ஷோ கேசி'ல் வைத்திருப்பதை சின்ன அண்ணன் ரசிப்பதைப் பார்த்திருக்கிறேன்!" என்று நிர்மலா கூறவும் ரதிக்கு ஒரே சந்தோஷமாகிவிட்டது!



"அப்படியானால் கிறிஸ்டல்தான்! ஆனால், இதிலும் எதை வாங்குவது?" என்று தேடினாள்.

கடைக்காரர் ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கொடுக்க, சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒரு பிரமிட் மாதிரி கொஞ்சம் உயரமாக டவர் போலவும் இருந்த கிறிஸ்டலை, ரதி தேர்ந்தெடுத்தாள்!

"பிரமிட், டவர் எல்லாம் வீட்டில் இருப்பது வளர்ச்சி என்று கேள்விப்பட்டிருக்கிறேன்!" என்றவள் மறுபடியும் முகம் சிவந்து, "வாஸ்துப் படியும் குடும்பத்துக்கு மிகவும் நல்லதாம்! பிள்ளைகள் நன்றாகப் படிப்பார்களாம்! இது, பார்க்கவும் மிகவும் அழகு! இதையே பத்திரமாகப் 'பாக்' பண்ணிக் கொடுங்கள்! என்று அந்த டவரையே வாங்கினாள் ரதி!

பிள்ளைகள் படிப்பு!

எவ்வளவு காலத்துக்குத் திட்டமிடுகிறாள்!

நிர்மலாவுக்கும்தான் திருமணம் நடந்தது!

அவளும் கணவனுக்குப் பரிசு கொடுக்கத்தான் செய்தாள்!

அழகானது! பெறுமானமும் உள்ளதுதான்! நாள் கணக்காகத் திட்டமிட்டு, வரைந்து கொடுத்து செய்த கலைப் பொருளும் கூட!

தங்கத்தில் அழகான பிலிகிரி வேலைப்பாடு செய்யப்பட்ட மோதிரம்! பிலிகிரி வேலைப்பாட்டின் நடுவே, அவர்கள் இருவரின் பெயர்களின் ஆங்கில முதல் எழுத்துக்களான இரண்டு 'என்'கள் ஒன்றோடொன்று இணைந்து பிணைந்திருக்கும்! வெறும் மூன்று கோடுகளைச் செடி கொடிகள் சுற்றிக் கொண்டிருப்பது போல, முதல் பார்வை

யில் தோன்றினாலும், பார்க்கப் பார்க்க, இரு எழுத்துகளும் ஒட்டி இணைந்திருப்பது நன்றாகவே தெரியும்!

நகைக் கடைக்காரரிடம் அவளே வரைந்து கொடுத்துச் செய்யச் சொன்னது!

பார்த்ததுமே, நித்யனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

எப்படிச் செய்தாள் என்ற விவரம் கேட்டறிந்து, 'கலா ராணி' என்று போற்றிப் புகழ்ந்து, கொஞ்சிக் குலாவினான்!

விரலை விட்டு, அவன் அதைக் கழற்றியதே கிடை யாது!

அதாவது, அவள் அவனோடு மகிழ்ச்சியோடு இருந்த அந்த ஆறு மாதங்கள் வரையிலும்!

அப்புறம், அவர்களது சண்டை, சமாதானங்களுக்கு ஏற்றவாறோ, என்னவோ, அவ்வப்போது அவன் கையி லிருந்து மோதிரம் காணாமல் போகும்., வரும்!

கடைசியில் காணாமலே போய்விட்டிருந்தது!

அது பற்றிக் கேட்டால், சரியாகப் பதிலே சொல்ல மாட் டான்! தொலைந்து விட்டதோ என்று, அவள் நினைத் ததும் உண்டு!

வெறுப்பில், கழற்றிப் போட்டிருக்கிறான் என்று இப் போது புரிந்தது!

ஏனெனில் இப்போது, வீட்டுப் பெரியவர்களுக்காக மோதிரத்தை எடுத்துக் கையில் மாட்டிக் கொண்டுதான் வந்திருக்கிறான்!

என்னவோ, நடிக்கிற நாடகத்தை நல்லபடியாக நடித்த தாக வேண்டுமே!



திருமணத்தின்போது, நித்யானந்தனும் அவளுக்கு ஒரு பரிசு கொடுக்கத்தான் செய்தான்!

மெல்லிய சங்கிலியில், மூடித் திறக்கிற மாதிரி அழ கான ஓவல் வடிவ பெண்டன்ட்! பெண்டன்டின் உள்ளே அவனது வண்ணப் புகைப்படம்!

தன்னை அவளுக்குக் கொடுத்து விட்டதாக அர்த்தம் என்றான்!

ஒருவருக்கொருவர் காதல் பொங்கி வழிவதாக, இருவரும் சொல்லிக் கொண்டார்கள்!

ஆனால், பிள்ளைகளின் படிப்பு வரை திட்டமிடு கிறாளே! என்னவோ சொல்லுவார்களே, ஆயிரம் காலத்துப் பயிர் என்று! பலகாலத்துக்கு நிலைத்த இல்லறம்!

இதை விடப் பெரிதாக என்ன இருக்க முடியும்?

ஆனால், தங்களின் பரிசுகளைக் குறைவாக மதிப் பிடவும், நிர்மலாவுக்குப் பிடிக்கவில்லை!

ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று உயர்வு! எதிர்காலமும், குடும்பமும் ரதிக்கு முக்கியம்!

தங்கள் இருவரின் நேசம், நிர்மலா, நித்தியானந்தனுக்கு முக்கியம்!

ஆனால்... அந்தக் காதல் நிலைத்து நிற்காமல் போனது தான் பரிதாபம்!

இப்போதும் காதலர்களை மனமொத்து வாழ வைக்கும் என்று கடைக்காரர் விளக்கம் கூறிய புறா ஜோடிதான், நிர்மலாவின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது!

அதை வாங்கிவிடவும் அவள் மனம் துடியாய்த் துடித்தது!

ஆனால், அவள் அதை இப்போது வாங்கி, உள் விஷயம் ஒன்றும் தெரியாத ரதி, அது பற்றி நித்யன் இருக்கும் இடத்தில் வாயை விட்டாள் என்றால், அவன் அவளைத் தவறாக நினைப்பானே என்று ஒரு காரணத்தினாலேயே, நிர்மலா சும்மா இருந்தாள் எனலாம்!

அவள் வாங்கிய பரிசுப் பொருளை என்ன மாதிரி 'பாக்' செய்ய வேண்டும் என்று சொல்லி, கடை ஆள் அதே போலச் செய்கிறானா என்று கவனித்தவாறு ரதி நிற்கையில், கிறிஸ்டல் புறா ஜோடி காந்தம் போல இழுக்க, மீண்டும் ஒரு தரம் அதன் அருகே சென்று பார்த்த நிர்மலா, ஒரு முடிவுக்கு வந்தாள்!

அதன்படி, திருப்தியும் நன்றியுமாக ரதி கிளம்பிச் சென்ற பிறகு, மறுபடியும் அதே கடைக்குத் திரும்பிச் சென்று, அந்த ஜோடிப் புறாக்களை வாங்கிப் பெட்டிக்குள் திருப்தியோடு பத்திரப்படுத்திய நிர்மலாவுக்கு, பெட்டிக்குள் இருந்த இன்னொரு சிறு டப்பாவைப் பார்த்ததும், கண்களில் நீரும் துளிர்த்தது!

சங்கிலி மெல்லியதாக இருப்பதால் சட்டென்று அறுந்து விழுந்து, அவனது பரிசான பெண்டன்ட் தொலைந்து போய்விடக் கூடும் என்று நிர்மலாவுக்கு அச்சம் இருந்தது!

நித்யனுக்கும் அப்படியே தோன்றியதோ, என்னவோ?

"நிலாச் செல்லம், இந்தச் சங்கிலியை வாங்கும்போது, தாலிச் சங்கிலியோடு சேர்ந்து, அதிகப் பளுவாகி உன் கழுத்தை உறுத்தக் கூடாதே என்று யோசித்து, மெல்லியதாக வாங்கினேன். இப்போது பார்த்தால், பெண்டன்ட்



கனத்தை இந்தச் சங்கிலி தாங்காது போலத் தோன்றுகிறதே! எனக்கோர் எண்ணம்! இதை நீ கழுத்தில் அணிந்திருந்தால்தான், உன் மனதில் நான் இருப்பதாக அர்த்தமா? உன் இதயம், என் இடம் என்று எனக்கும் தெரியும்... உனக்கும் தெரியும்! அதனால், அறுந்து விழுந்து பெண்டன்ட் தொலைந்து போய்விடாமல், சங்கிலியைக் கழற்றி உள்ளே வைத்துவிடம்மா! அப்புறமாக இன்னும் இரண்டு சவரன் சேர்த்து, கனமான சங்கிலியாகச் செய்து, அதன் பிறகு அணிந்து கொள்ளலாம்!" என்று கூறிய கணவனின் சொல்படி, நிர்மலா கழற்றி வைத்திருந்த அவனது அன்புப் பரிசு, அந்த டப்பாவினுள்தான் இருந்தது!

கழற்றி வைத்தது, அவன் சொல்லித்தான்!

ஆனால், அவனது பேச்சின் பின்பாதி, காற்றோடு போய்விடும் என்று அப்போது அவளுக்குத் தெரியாது!

தெரிந்திருந்தால், அந்தச் சங்கிலியை அவள் கழற்றியே இருக்க மாட்டாளே., இப்படிப் பிரிவு, விவாகரத்து என்று ஆகியிராதே என்று தவிப்புடன் எண்ணும்போதே, என்ன பைத்தியக்காரத்தனமான யோசனை என்றும் நிர்மலாவுக்குத் தோன்றிவிட்டது!

சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் கல்யாணம் நின்று போகும் என்று எண்ணி, எவனோ ஒரு பைத்தியக்காரன் செயல்பட்டானாம்!

அவனுக்கு, இவள் எந்த விதத்தில் உயர்வு?

அவளும் நித்யானந்தனும் பிரிந்தது, மன வேறுபாட்டால்! இந்தச் சங்கிலியை விடாப்பிடியாகக் கழுத்தில் அணிந்திருப்பதால், அந்தப் பிரிவை எப்படித் தவிர்த்திருக்க முடியும்?

கழற்றியிருக்க மாட்டேனே, கழற்றியிருக்க மாட்டேனே என்று புலம்புவதும், தவிப்பதும் கூட, அதே ரகம்தான்!

சுத்தமான, முழுமையான பைத்தியக்காரத்தனமே!

ஆனால், அந்தப் பைத்தியக்காரத்தனத்தின் அடிப்படைக் காரணம் புரியாத அளவுக்கு, நிர்மலா முட்டாளல்ல!

அவளுக்குப் புரிந்த அந்தக் காரணம், அவளை மேலும் பைத்தியக்காரியாகத்தான் ஆக்கிக் காட்டியது!

ஏனெனில், வெகு விரைவிலேயே மணவிலக்கு பெற இருந்த நிர்மலா, அவளுடைய கணவனான நித்யானந்தனை, உயிரினும் மேலாக இன்னமும் நேசிக்கிறாள் என்றால், அது முழுப் பைத்தியக்காரத்தனம்தானே?




அடி மனதில் புதைந்து கிடந்த ஆசை தெள்ளத் தெளிவாகத் தெரிய வந்தபோதே நிர்மலாவுக்குப் பெரிய அதிர்ச்சிதான்!

கணவனோடு, நேருக்கு நேராக மோதிய போது, இந்த ஆழ் மனக் காதல் விவகாரம், அவளது கருத்துக்கு ஏன் புரியாமல் போயிற்று?

காரணம், அவன் சொன்ன மாதிரி, அவள் யோசிக்கவில்லை!



நிறைய யோசித்திருக்க வேண்டும்!

நித்யன் ஒன்று சொன்னால் அவள் ஒன்பது திருப்பிக் கொடுப்பாளே! காரணம் என்ன?

என் ஆசைக் கணவன் என்னிடம் குற்றம் காண்பதா என்ற ஆத்திரம்தானே?

வீட்டைவிட்டு வெளியேறிய பிறகு, எதிலும் ஓர் அலுப்பும், சலிப்புமாகவே இருந்ததே! அவனை விட்டு அகன்றதால்தானே?

மணவிலக்கைக் கணவனிடமிருந்து விடுதலையாக எண்ணுகிறவளுக்கு உற்சாகம் அல்லவா ஏற்படும்? அவள் எதிர்பார்ப்பே இல்லாமல் சோர்ந்து அல்லவா இருந்தாள்!

மறுமணம் பற்றி அண்ணன் கேட்டபோது, எவ்வளவு ஆத்திரம் வந்தது? அப்படி ஓர் எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கக்கூட, அவளால் முடியாது என்பதால்தானே?

அன்று பெரியப்பா வந்தது பற்றிச் சொல்வதற்காக விடுதிக்கு வந்தானே! விவாகரத்து கிடைத்துவிட்டதாகச் சொல்ல வந்தானே என்று எப்படி அதிர்ந்தாள்!

நிரந்தரப் பிரிவை நினைக்கும் போதெல்லாம் அவள் மனதில் தோன்றிய வலி? கடைசியாக நேற்றைய அழுகை?

எல்லாமே, அவள் மனதில் எப்போதும் பசுமையாக இருந்த நேசத்தைத்தானே பறை சாற்றின?

இதையெல்லாம், அவள் முதலிலேயே கொஞ்சம் யோசித்துப் பார்த்திருந்தால்?



கொஞ்சமில்லை! நிறையச் செய்திருக்க வேண்டும்.

ஏன் இந்தச் சண்டை? இந்தத் தகராறு ஏன் வந்தது என்று, நிதானமாய் ஆராய்ந்து, மிக ஆழமாய் யோசித்திருக்க வேண்டும்! பிரச்சினையைக் கண்டறிந்து, அதைத் தவிர்ப்பதற்குரிய வழிகளையும் ஆலோசித்து, செயல்படுத்தியிருக்க வேண்டும்!

அதை விட்டு, அவன் ஒன்று சொல்லுமுன் எண்ணையில் விழுந்த அப்பமாய், அவனுக்கு மேல் இவள் எகிறிக் குதித்து, அவன் திருப்பிக் கொடுத்து... இப்போது எல்லாமே நாசமாகிவிட்டதே!

பிழை செய்து, எல்லாவற்றையும் கெடுத்துவிட்டோமே என்று மறுகும்போதே, அதுவும் மடத்தனம் என்று நிர்மலா உணர்ந்தாள்.

இல்லறம் சிறக்க இரண்டு பேர் வேண்டும்! இவள் எவ்வளவு இணங்கிப் போனாலும், சேர்ந்து வாழ, நித்யனுக்கு மனம் இருக்க வேண்டுமே!

அவனல்லவா அடியோடு வெறுத்துவிட்டான்!

நம் நாட்டுச் சட்டப்படி, மண விலக்கு ஒன்றும் எளிதாகக் கிடைப்பதில்லை!

ஒரு திருமணம் உடைந்து விடாமல் இயன்றவரை காக்க வேண்டும் என்ற நோக்கத்தில், எத்தனையோ தட்டுத் தடங்கல்கள், தாமதங்கள்!

இத்தனையிலும், இவ்வளவு கால அவகாசத்திலும், ஒரு தரம் கூட விவாகரத்து வேண்டாம் என்று, நித்யானந்தன் சொல்லவே இல்லை! அப்படிச் சொல்லி விடுவோமோ என்ற பயத்தினால், வாயையே திறக்கவில்லை!



இதற்கான விளக்கம், பச்சைக் குழந்தை கூடச் சொல்லும்!

அவனுக்கு அவள் அலுத்துவிட்டாள்! அவளது பொறுமையற்ற பேச்சும் செயலும், அவள் கணவனின் அன்பைக் கொன்றுவிட்டன. அவன் விடுதலைக்குத் துடிக்கிறான்!

எனவே, இந்தக் கடைசி நேரத்தில் அவனைப் பிடித்து வைக்க முயற்சிக்காமல், கண்ணியமாக விலகிக் கொள்வது தான் அவளுக்குக் கௌரவம்!

இந்த ஏக்கம், தாக்கம் எல்லாம் சிறு முக்கல், முனகலில் கூட வெளிப்பட்டு விடாமல், அவளுள் புதைக்கப் பட வேண்டியது!

ஏதோ கடவுளாகப் பார்த்து, இந்தத் திருமணத்தின் மூலமாக, நித்யனை அடிக்கடி அருகிருந்து பார்க்கும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். அந்த நேரத்தைப் பொக்கிஷமாய் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்!

அத்தோடு, அவர்களது பிரிவுக்குப் பிறகும், இந்தச் சங்கிலி பெண்டன்டை மட்டும் திருப்பிக் கொடுக்காமல், அவளே வைத்துக் கொள்ள வேண்டும்!

அதைப் பிரிய மனமில்லை என்று சொன்னால் நன்றாயிராது. எனவே, தொலைந்து போய்விட்டது என்று சொல்லி, அதற்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டால், அவளுக்கு நப்பித்தனம், தங்க நகை மதிப்புக்காகப் பொய் சொல்லுகிறாள் என்று யாராலும் சொல்ல முடியாது!

கடைசிக் காலம் வரை, அவளுக்கு, அது துணையாக இருக்கும்! அதுவும், அவனது நினைவுகளும்!

மனதில் தீர்மானித்தபடியே நிர்மலா நடந்துகொண்டாள்.

ஒவ்வொரு நாள் முடியும்போதும், வேதனையும் வலியும் கூடத்தான் செய்தன!

இன்னும் பத்தே நாள், எட்டே நாள், ஏழே நாள் என்று தவிப்பாகத்தான் இருந்தது!

ஆயினும், பொடிக் கட்டமிட்ட அரைக்கைச் சட்டையில், மெல்லிய கோடு போட்ட நீல ஷர்ட்டில், வாய்விட்டுச் சிரிக்கும்போது, புன்னகையில், கூர்ந்து கவனிக்கையில் என்று, நித்யானந்தனது பல்வேறு தோற்றங்கள், டிஜிட்டல் போட்டோக்களாக, அவளது மனத்திரையில் தெளிவாகப் பதிந்தன!

அதிலும், திருமண நாளன்று, பட்டு வேஷ்டியில் மைத்துனன் முறையில் மணமகன் மோகனனை நித்யானந்தன் அழைத்து வருகையில், இமை தட்டக்கூட மறந்து பார்த்துக் கொண்டே இருந்தாள் அவள்.

பெண்ணுக்கு நாத்தனாராக அவளும், பையனுக்கு மைத்துனனாக நித்யனும் மேடையிலேயே நின்று, எல்லாச் சடங்குகளிலும் கலந்து கொள்ள நேர்ந்தது, ஒரு வித இன்பம் கலந்த வேதனையாக இருந்தது அவளுக்கு!

திருமணம் நல்லபடியாக நடந்தேறி, மணமக்களுக்குப் பால் பழம் சாப்பிடக் கொடுத்து, பெரியவர்களிடம் ஆசி பெற அழைத்துச் சென்று, எல்லாவற்றுக்கும் சற்றே மூத்த இளம் தம்பதியாக, இருவரும் மணமக்களின் கூடவே இருந்தனர்.

அந்தச் சாக்கில், நித்யன் அருகிலேயே நிர்மலா இருந்தாள்.



எல்லாம் இன்னும் கொஞ்ச நேரம்!

அதன்பின்?

நினைக்க முடியாமல், நிர்மலாவுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது!

இன்றோடு எல்லாம் முடிகிறது! எல்லாமே!

வேண்டாம்! எனக்கு மணவிலக்கு வேண்டாம்! நான் உங்களுக்கு விலக்குத் தர மாட்டேன் என்று கத்தினால் எப்படி இருக்கும்?

வேறெப்படி இருக்கும்? பைத்தியக்காரிப் பட்டம், உடனேயே கிடைத்துவிடும்!

முக்கியமாக, நித்யன் முகத்தில் அருவருப்பு படரும்!

கடைசி, கடைசியாக அந்த முகம்! அது வேறு, அவளுக்குத் தேவைதானா?

மதிய உணவை, அவள் கணவனின் அருகில் இருந்து தான் நிர்மலா சாப்பிட்டாள்! ஆனால் இலையில் என்னென்ன பதார்த்தங்கள் இருந்தன? சுவை எப்படி என்று யாரேனும் கேட்டால், அவளால் ஒரு வார்த்தை கூடப் பதில் சொல்ல இயலாது!

அவர்கள் உணவருந்தி வந்ததும், சுந்தரலிங்கம், கணவன் மனைவி இருவரையும் அருகில் அழைத்தார்!

''நிம்மிம்மா, நீயும் மாப்பிள்ளையுமாக மண்டபம் முழுவதும் ஒரு தரம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து விடுங்கள். சாப்பிடாமல் யாரேனும் இருந்தால் பிடித்துக் கொண்டு போய்ச் சாப்பிட வைத்துவிட்டு, இங்கே வாருங்கள்!'' என்று தம்பதியர் இருவரையும் அனுப்பினார்!



அந்தப் பணிக்காகச் சுற்றியபோதுதான், பிரதீப்பை அவள் பார்த்தது!

பெண், பிள்ளை இருவர் வகையிலும் இவனுக்கு ஒரு தொடர்புமில்லை! பின்னே, இவன், இங்கே எப்படி வந்தான்?

அலுவலகத்தில் ஏதாவது காரணமாய் அனுப்பியிருப்பார்களோ என்று யோசித்தால், அதற்கும், அவளைக் கேளாமல் முடிவெடுக்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு, அவள் அங்கே அப்படி ஒன்றும் பெரிய ஆள் இல்லையே!

ஆனால் வந்து நிற்பவனை என்ன செய்வது என்று, வேறு வழியின்றி பிரதீபனை நித்யானந்தனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

முன்பொரு தரம், இவன், தன்னைப் புகழ்ந்ததாகச் சொல்லியிருக்கிறாள்!

அதை, நித்யன் மைத்துனனிடம் சொல்லியும் இருக்கிறான்!

ரஞ்சன், மடையன், அதை வைத்து, மடத்தனமாக ஏதோ கேட்டு, அவளிடம் வாங்கிக் கட்டிக்கொண்டு போயும் இருக்கிறான்!

ரஞ்சன் அப்படி மடத்தனமாகக் கேட்டதற்குக் காரணம், நித்யனாக இருக்குமோ என்ற சந்தேகம், நிர்மலாவுக்குத் தோன்றியது உண்டு!

மனைவி மீது வெறுப்புக் கொள்ள, நித்யனுக்கு அதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கவும் கூடும்!



அது முடிந்த விஷயமே என்றாலும் கடைசிப் பிரிவின் போது எந்த விதமான மனக் கசப்பும் இல்லாதிருக்க வேண்டும் என்று நிர்மலா விரும்பினாள்!

இப்போது போய், இவன் வந்து நிற்கிறானே!

உள்ளே என்ன நினைத்தானோ, அல்லது, எது நினைக்கவும் அக்கறைதான் இல்லையோ, அறிமுகத்தைச் சாதாரணமாக ஏற்று, ''சாப்பிட வாருங்கள்!'' என்று பிரதீப்பை உபசரித்தான் நித்யானந்தன்.

ஏதோ சிக்கலில் இருப்பவன் போல, வேண்டா வெறுப்பான அரைகுறைப் புன்னகையோடு, பிரதீப் உணவை மறுத்தான்!

''நான் நிர்மலா மேடத்தைப் பார்க்க வந்தேன்!'' என்றான் குறிப்பாக!

தாராளமாக என்பது போலக் கையசைவுடன் நித்யன் அங்கிருந்து அகன்றான்.

புருவம் சுளித்து, ''என்ன விஷயம் பிரதீப்?'' என்று கேட்டாள் நிர்மலா!

''அலுவலகத்தில் ஒரு வேலையிருப்பதால், உன்... உங்களை அழைத்து வரச் சொன்னார்கள்!'' என்ற அவனது பதில் அவளுக்கு வியப்பளித்தது!

''அப்படியா? இன்று விடுமுறை சொல்லியிருந்தேனே... நிர்வாகியிடம் நேற்றே சொல்லி விட்டுத்தானே வந்தேன்...'' என்று ஆச்சரியப்பட்டபடி தன் செல்போனை எடுத்தாள் நிர்மலா!

அவள் எண்களை அழுத்துமுன், ''வேண்டாம், நிர்மலா! அலுவலகத்தில் வரச் சொல்லவில்லை! நான்

நானாகத்தான், கொஞ்சம் இந்தப் பக்கம் தனியே வாருங்களேன்...'' என்று அவளைச் சற்று ஒதுக்குப் புறமாக அழைத்தான் பிரதீப்.

வேலையில் ஏதேனும் தப்புத் தண்டா செய்து உதவி கேட்கிறானோ என்று மண்டபத்தின் பின்புறச் சுவர் வரை அவனோடு சென்ற நிர்மலா, அங்கே யாரும் இல்லாதது கண்டு நின்று, ''என்ன சொல்லுங்கள்?'' என்று கேட்டாள்!

''அது வந்து... வந்து, உங்கள்... உன் நிலைமை எனக்குத் தெரியும், நிர்மலா! உங்... உன்னைக் காப் பாற்றவே, நான் இங்கே வந்தேன்!'' என்று, இடை யிடையே தடுமாறியவாறே சொல்லி முடித்தான் அவன்!

அவனது வார்த்தைகளோடு, மரியாதைப் பன்மையில் அவனுக்கிருந்த தடுமாற்றமும் வியப்பைத் தர, ''என்னைக் காப்பாற்றுவதா? யாரிடமிருந்து? என்ன விஷயம், பிரதீப்? முதலில் உங்களைக் கொஞ்சம் அமைதிப்படுத்திக் கொண்டு, அப்புறம் என்னவென்று விவரம் சொல்லுங்கள்!'' என்றாள் அவள்.

பிரதீபனின் புத்திசாலித்தனத்தில், எல்லோரையும் போல, நிர்மலாவுக்கும் அதிக மதிப்புக் கிடையாது! அவ்வப்போது கனவுலகத்தில் வாழ்கிறவன் என்ற எண்ணம்!

என்ன கனவு கண்டு உளறுகிறானோ என்று எண் ணியபடி கேட்டால், ''உன்னிடமிருந்து! சற்று முன், உன் அருகில் நின்றானே, அவனிடமிருந்து!'' என்று சற்று அதட்டலாகவே பதில் வந்தது!

''புரியவில்லையே!''



''என்ன புரியவில்லை? கொஞ்சம் யோசித்தால் புரியும்! அந்த ஆள், உன் பழைய புருஷன், உன் வரு மானத்துக்காக, மீண்டும் உன்னோடு இழையப் பார்க்கிறான்! உன் கூடக் கூட அலைவதெல்லாம், அதற்காகத்தான்... உனக்கு இன்னுமா புரியவில்லை? இப்படிச் சேர்ந்து திரிந்தால், விவாகரத்து எப்படிக் கிடைக்கும்? கிடைக் காமல் கெடுக்கத்தான் இந்த நாடகம்! உடனே இங்கிருந்து கிளம்பு. இல்லாவிட்டால், உன்னோடு நெருக்கமான உறவும் இருந்ததாகக் கதை கட்டி, விவாகரத்தைக் கெடுத்து விடுவான்!'' என்றான் அவன் வேக வேகமாக!

நிர்மலாவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியாத நிலை!

பெற்றவர்களையும், உடன் பிறந்தவனையும் கூட, அவள் விஷயத்தில் தலையிட, அவள் அனுமதித்தது இல்லை!

யாரோ ஒருவன்! அலுவலகத்தில் கூட, அவளுக்குக் கீழ் நிலையில் பணி புரிகிறவன்...! அவன் வந்து, அவளது வாழ்வைப் பற்றிப் பேசுகிறானா?

அவளது விழிகள் விரிவதைப் பார்த்துவிட்டுத் தவ றாகப் பொருள் கொண்டு, ''என்ன நிர்மலா, இதெல்லாம் இவனுக்கு எப்படித் தெரியும் என்று திகைப்பாக இருக் கிறதா? எனக்குக் காதல் நிர்மலா! உன் மேல் பயங்கரக் காதல்! விவாகரத்துக்குப் பிறகு, உனக்கு மறு வாழ்வு கொடுப்பதாக, நான் நிச்சயம் செய்துவிட்டேன். அதனால், பிற்பாடு தனிமைத் துயரில் கஷ்டப்பட வேண்டி யிருக்குமோ என்று பயந்து, அந்த நித்யானந்தனின் சூழ்ச்சிக்குப் பலியாகி விடாதே! அந்தக் கவலையே



வேண்டாம்! தனிமையைப் போக்க, உனக்கு நானிருக் கிறேன்!'' என்று தேறுதலாகக் கூறி, அவளது கையைப் பிடிக்க முன்னே வந்தான் பிரதீப்!

அவசரமாக இரண்டெட்டு பின்னே நகர்ந்து, ''வெளியே போ!'' என்றாள் நிர்மலா.

ஆத்திரத்தில், அவளது உடல் நடுங்கியது!

ஆத்திரத்தினால் மட்டுமல்ல.

என்ன துணிச்சலில், இவன் இப்படிப் பேசினான் என்ற விதிர் விதிப்பினாலும் கூட!

மணவிலக்குப் பெற்ற பெண் என்றால், அடுத்த துணைக்காகத் தவித்துக் கொண்டிருப்பாள் என்று எண்ணினானா?

அல்லது, அப்படித் தவிக்கிறவளை எளிதாக விழத் தட்டி விடலாம் என்று நினைத்தானா?

வாழ்வு கொடுக்கிறானா?

ராஸ்கல்!

அந்த மாதிரி, அவளை நினைக்க, இவனுக்கு என்ன துணிச்சல் இருக்க வேண்டும்?!

ஆத்திரத்தில் உடல் நடுங்க, ''மரியாதையாக வெளியே போகாவிட்டால், ஆட்களைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லுவேன்!'' என்றாள் நிர்மலா.

சில கணங்கள் பிரதீப்புக்கு ஒன்றும் புரியவில்லை!

தங்கையை அனுப்பி, அடுத்துத்தானே முயன்று, மீண்டும் நிர்மலாவைப் பிடிக்கப் பார்க்கிறான் அவள் கணவன் என்பதுதான் அவனது எண்ணம்!



அவனைப் பிடிக்காமல்தானே, மண விலக்குக்கு முயன்றிருக்கிறாள்!

இப்போது, மீண்டும் அவனிடம் மாட்டிக் கொள் வோமோ என்ற பயம் அவளுக்கு!

எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயம் இல்லாததால் அழு கிறாள்., அந்த ஏக்கத்தில், இன்னும் எதுவும் தெளிவாகச் சொல்லவில்லையே என்று தன்னிடம் எரிச்சல் பட்டிருக்கிறாள் என்று எண்ணினானே!

எவ்வளவு யோசித்து, வாழ்வு கொடுக்கிறேன் என்று அறிவித்தால், மறு வினாடியே காலடியில் நாய் மாதிரிச் சுருண்டு கிடப்பாள் என்று எதிர்பார்த்து வந்தால், மிரட்டி யல்லவா விரட்டுகிறாள்!

''நிர்மலா, நான் சொன்னதை, நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்! உங்களுக்கு வாழ்வு கொடுக்கிறேன் என்றுதான்...'' என்றவன் முடிக்கு முன், ''போடா!'' என்று கையை ஓங்கிவிட்டாள் அவள்!

''ஷ், நிர்மலா!'' என்று அருகிருந்த கதவுப் பக்கமிருந்து வேகமாக வந்து, அவளது கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான் அவளுடைய கணவன் நித்யானந்தன்!

''இன்னும் போகவில்லை?'' என்று அவன் பங்குக்கு ஒரு தீ விழி விழிக்கவும், தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஓடிவிட்டான் பிரதீபன்!

கடித்த பல்லும் உருட்டு விழியுமாகக் காளிகாதேவி அவதாரம் அல்லவா எடுத்து விட்டாள்! இவளாவது, தகராறு இல்லாமல், அவளது வருமானத்தை அவனிடம் கொடுப்பதாவது!

கண்ணாலேயே எரிக்கிற மாதிரி, அவன் வேறு!

இரண்டும்தான் ஒன்றுக்கொன்று பொருத்தம்! எப்படியோ போய்த் தொலையட்டும்!

முடிந்தவரை விரைவாக, வேறு கிளைக்கு மாற்றிக் கொண்டு ஓடி விட வேண்டும்!

அங்கிருந்து விரைந்தோடிச் சென்றவாறே பிரதீபன் நினைத்தது. இப்படித்தான்!



## 10

பிரதீப் ஓடி மறைந்த பிறகும், நிர்மலா இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குச் சற்று நேரம் ஆயிற்று!

இப்படி ஒருவன் அவளிடம் எப்படிப் பேசுவான்?

ராஸ்கல்...! அவன் முழியைத் தோண்டி.. கை காலை உடைத்து...

ஆத்திரத்தில் உடல் நடுங்க நின்றவளுக்குச் சற்று நேரம் கழித்துதான், கணவன் அருகில் நிற்கிறான் என்பதும், அனைத்தையும், அவன் கேட்டிருக்கிறான் என்பதும் உறைத்தது!

என்ன நினைப்பான்?

திடீரென்று ஒருவன், இப்படி, எப்படிப் பேசுவான்? இதற்கு முன் என்ன நடந்ததோ என்று அவளைத் தவறாக எண்ணுவானோ?



அவனது வெறுத்த பார்வையை, இப்போது அவளால் தாங்க முடியாதே!

தரைப் பக்கம் பார்வையைத் திருப்பியபோதுதான், அவன் பிடியில் கை இருப்பதும், அது இன்னமும் நடுங்கிக் கொண்டு இருப்பதும் தெரிந்தது!

அவள் பார்க்கும்போதே, அவளை விடுவித்து, அருகில் கிடந்த நாற்காலி ஒன்றை எடுத்துவந்து, அதில் அவளை உட்கார வைத்தான் நித்யானந்தன்.

அவளுக்கு யுகமாகத் தோன்றிய ஒரு நிமிஷம் காணாமல் போய், ஒரு தம்ளர் தண்ணீருடன் திரும்பி வந்தான்.

அவளிடம் கொடுத்து, "முதலில் இதைக் குடி!" என்று குடிக்க வைத்தான். "எவனோ ஒரு மடையன் என்னவோ சொன்னால், அதைப் பொருட்படுத்த வேண்டாம். விட்டுவிடு. அங்கே மாமா காத்திருப்பார். அவர் சொல்லி அனுப்பிய வேலை முடிந்தது என்று தெரிவிக்க வேண்டாமா. இப்போது பரவாயில்லை என்றால் கிளம்பு. போகலாம்!" என்றான்.

என்னவோ மனதில் குறையாகத் தோன்றியது அவளுக்கு!

ஆனால், குறைப்படவும் ஒன்றும் இல்லை!

பிரதீப் மடையன். அவன் பேச்சைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்றான். அப்படியென்றால் அவளைப் பற்றி, அவன் தவறாக எண்ணவில்லை.

உட்கார வைத்துத் தண்ணீர் கொடுத்து, அவளை அமைதியடையச் செய்ததிலும் குறையில்லை!

பின் என்ன?

பெரிதாக ஒன்றும் இல்லை! அவளை அணைத்து, ஆசுவாசப்படுத்தி, ''கவலைப்படாதே, கண்ணே, எந்த நிலையிலும் நான் உன்னைத் தப்பாக நினைக்கவே மாட்டேன்!'' என்று, இன்னோரன்ன வார்த்தைகளால் தேற்றியிருந்தால், எந்தக் குறையும் தோன்றியிராது!

ஒரு காலத்தில், சந்திரனைப் பிடிக்க ஆசைப்படுவது என்பார்களாம்! அவளது ஏக்கம் தீருவதும் அப்படித்தான்!

பெருமூச்சுடன் எழுந்தாள் அவள்.

இருவரும் திரும்பி வந்ததும், ''வாருங்கள்! இன்று இரவு விருந்து வைப்பதாக, முடிவு பண்ணிவிட்டோம். நம் ஆட்கள் மட்டும்தான்! ஆறு மணிக்கு எல்லோரும் வந்துவிட்டால், நாம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, சாப்பிடலாம்! 'பப்பே'யாக வைத்துவிட்டால், அங்கங்கே சேர்ந்து அமர்ந்து பேசிக் கொண்டே சாப்பிடலாம் என்கிறான், உன் அப்பா! ஒரொருவராகக் கேட்டாள், நிறையப் பேருக்கு, கேட்ட வரையில் கிட்டத்தட்ட எல்லோருக்குமே அதே அபிப்பிராயம்தான்! நீங்கள் இருவரும் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று அவர்களிடம் கேட்டார்!

நிர்மலா என்ன சொல்லுவாள்?

அவளது கனத்த உள்ளம், லேசாகித் துள்ளியது! ரொம்பவே ஆறுதல்!

எல்லாம் முடியப் போகிறதே என்று உள்ளூர அழுத வளுக்கு, இன்னும் சில மணி நேரம் அவனது அருகாமை கிடைக்கப் போகிறது!



ஆனால், நித்யன் மாலையில் வருவானா என்று அவள் கலங்கும்போதே, ''செய்யலாம், மாமா! நான் தயார்! உனக்கு எப்படி?'' என்று அவளிடம் கேட்டான் அவன்.

அப்பாடி என்று வெளியே தெரியாத நிம்மதிப் பெருமூச்சோடு, ஒப்புதலாய்த் தலையாட்டினாள் அவள்.

மருமகனைப் பார்த்துவிட்டு, ''படுத்து, தூங்கி ஓய்வெடுப்பதானால், இங்கே எல்லோருக்கும் இடம் போதாது மாப்பிள்ளை! அதனால், வெளியூர் ஆட்கள் தவிர, மற்றவர்கள் அவரவர் வீட்டுக்குப் போய் ஓய்வெடுத்துவிட்டு வந்தால், எல்லோருக்கும் வசதியாக இருக்கும் என்று பார்த்தோம்! இரவு உணவு இங்கேதான். காபி டிபனும் இருக்கும். வசதி போல வந்துவிடும்படி... அண்ணா சொன்னார்!'' என்று மகளைப் பாராமல் சொல்லி, சுந்தரலிங்கத்தின் பக்கம் கைகாட்டினார் நிர்மலாவைப் பெற்றவர்.

''ஆமாம்மா. முடிந்தவரை சீக்கிரமே வந்துவிடுங்கள்! இப்போது, நானே கொஞ்சம் படுத்துத் தூங்கப் போகிறேன். அல்லது, இப்போதே நிம்மதியாகப் பேசிக் கொண்டிருக்கலாம் என்று உன்னை இங்கேயே நிறுத்திக் கொள்வேன். நிம்மிக்குட்டி! கல்யாண அலுப்பு என்றால், அது திருமணம் நல்லபடியாக நடந்து முடிந்த பிறகுதானே தெரிகிறது! நீங்கள் இருவரும் முழு நேரமும் நின்று, வேலை வேறு நிறையச் செய்திருக்கிறீர்கள்! போய் அலுப்பு தீரத் தூங்கிவிட்டு வா...ருங்கள்!'' என்று அடக்கப் பார்த்து முடியாமல், ஒரு பெரிய கொட்டாவியை வெளியேற்றினார் பெரியவர்!

''நீங்கள் சீக்கிரம் கிளம்புங்கள். இல்லாவிட்டால் அண்ணா இங்கேயே உட்கார்ந்தே தூங்கிவிடுவார்!''





என்று விளையாட்டுப் போல கூறிச் சின்னவர்களைக் கிளப்பிவிட்டு, ''வாருங்கள் அண்ணா, அறைக்குப் போய்ப் படுத்துத் தூங்குங்கள்!'' என்று தமையனை எழுப்பி, அழைத்துச் சென்றார் ஞானலிங்கம்.

''போகலாமா?'' என்றது தவிரக் காரில் செல்லும் போதும், நித்யானந்தன் எதுவும் பேசவில்லை!

வாய் திறந்து எதையும் பேசுகிற நிலையில் அவளும் இல்லை!

என்ன சொல்வது?

மனதில் இருப்பதையா?

அவ்வளவுதான்! இது ஏதடா, உடும்பாய்ப் பிடித்துக் கொள்ளும் போலிருக்கிறதே என்று பயந்துபோய், அந்த இடத்திலேயே இறக்கிவிட்டுப் போனாலும் போய்விடுவான்!

அதை விடவும், கிடைக்கும் கொஞ்ச நேரமும் அவனது இயல்பான முகத்தையே பார்த்து மனதில் பதிய வைத்துக் கொள்ளலாமே என்று தோன்றவும், அவன் அறியாதவாறு ஓரக் கண்ணால், அவன் முகத்தைப் பார்த்தவளுக்குத் திக்கென்றது!

அந்த அளவுக்கு அவன் முகம் இறுகியிருந்தது!

இவளை இன்னும் எவ்வளவு நேரம் சகிப்பது என்றா?

இதோ இன்னும் கொஞ்ச தூரத்தில், அவளது மங்கம்மா விடுதி வந்துவிடப் போகிறது! இறக்கி விட்டுவிட்டால், அப்புறம் மாலையில் சில மணி நேரம்தானே?

இதற்கா இவ்வளவு இறுக்கம்? கடுப்பு?



இந்த சுமார் இருபது நாட்களிலுமே, பெரியப்பாவின் முன் ஜோடியாகப் போய் இறங்குவது என்று வைத்துக் கொண்டிருந்ததால், இதே போலக் காரில் இருவருமாகச் சென்று கொண்டுதான் இருந்தார்கள்!

மற்றவர்கள் முன்னிலையிலும், மற்றவர்களாலும் கலகலப்பாகப் பேசிச் சிரித்த போதும், இப்படித் தனியாகச் செல்லும்போதும், தேவைக்கு மேல் நித்யானந்தன் பேச்சுக் கொடுத்தது இல்லை!

சிள்வண்டின் ரீங்காரம் போல இருவரும் பேசிக் கொண்டே இருந்ததையும், இன்றைய வேறுபாட்டையும் எண்ணி, நிர்மலா வருந்தியும் இருக்கிறாள்.

ஆனால் இந்த இறுக்கமும், கடுப்பும் இன்றைய நிலைக்குமே அதிகப்படியாக அவளுக்குத் தோன்றியது!

ஆனால், இதைப் போக்குவதற்காக ஏதேனும் செய்யும் உரிமை, இப்போது அவளுக்கு இல்லையே.

ஏன் இந்த இறுக்கம் என்று கேட்கக் கூட, இன்றைக்கு அவள் யார்?

வேதனையோடு வெளியே பார்த்தபோது, விடுதிக்குச் செல்லும் சந்தில் திரும்பாமல், கார் நேரே செல்வது தெரிய திகைப்புடன் அவன் புறம் திரும்பினாள்.

''அலுவலகத்தில் வீடு கொடுத்துவிட்டார்கள்! அங்கே... அங்கே என்னென்ன செய்தால் வசதியாக இருக்கும் என்று உன்னிடம் கேட்கலாம் என்று நினைத்தேன். அதனால், முதலில் அங்கே போய்விட்டு... அப்புறம்... அப்புறம் பார்க்கலாமே'' என்று ஒரு மாதிரிக் குரலில் முடித்தான் அவன்.

இதற்கு மேல் இப்போது பேச்சு வேண்டாமே என்பது போல!

ஆனால், அவன் வீட்டுக்கு, அவள் என்ன ஆலோசனை சொல்வது?

இருக்கட்டுமே என்றது அவளது பேதை மனம்! பிற்பாடு, அந்த வீட்டிலும் அங்கங்கே அவனைக் கற்பனை செய்து பார்க்கலாம், அல்லவா?

நித்யானந்தனுக்கு அளிக்கப்பட்டிருந்த வீடு, நல்ல பெரிய ப்ளாட். பல அடுக்கு மாடி வீடுகள் அங்கே இருந்தபோதும், கார் நிறுத்த, பிள்ளைகள் விளையாட, செடிகொடிகள் வளர்க்க என்று அதற்கு நிறைய இடம் ஒதுக்கி இருந்தார்கள்.

ஓரோர் இடத்திலும் நித்யனை நிறுத்திக் கற்பனை செய்துபார்த்தாள் அவள்.

இந்த ஊஞ்சலில், நித்யனுடைய மகள் ஒருநாள் விளையாடுவாளோ?

புன்னகை, கண்ணீர் இரண்டையுமே அவள் அடக்க வேண்டியிருந்தது!

ஆனால், நின்று பார்க்க விடாமல், "அதெல்லாம் பிறகு பார்க்கலாம். முதலில் வீட்டைப் பார்!" என்று கூட்டிச் சென்றான் நித்யன்.

என்ன அவசரம்?

வீட்டைத் திறந்து உள்ளே சென்றபின், அவனுக்கும் ஏதோ பிரச்சினைதான் போலும்...! சற்று நேரம், ஒன்றுமே பேசாமல் சும்மா நின்றான்.



நெற்றியில் வியர்வை அரும்ப, அதை உணர்ந்தவன் போல, மின்விசிறியைச் சுழல விட்டான்.

நெஞ்சுக்குள் ஏதோ தடதடக்க திகைப்புடன் அவள் அவனை ஏறிடுகையில், ஒரு மூலையில் இருந்த கதவுப் பக்கம் கையைக் காட்டினான் நித்யன்.

"அந்த அறை... அங்கே பார்த்துவிட்டுச் சொல்லு!" என்று சற்றுத் திகைத்து நின்ற அவளை, அறை நோக்கி அழைத்துச் சென்றான்.

வழி காட்டுதல் போலக் கரத்தின்மீது லேசாகப் படிந்த விரல்கள்தான்.

ஆனால், அப்படியே அவன் கழுத்தைக் கட்டிக்கொள்ள வேண்டும்போலப் பேரலையாக எழுந்த உணர்வைக் கட்டுப்படுத்துமுன், நிர்மலா திணறிப் போனாள்.

நல்ல வேளையாக அறைக்குள் வராமல், நித்யன் வெளியேயே நின்றான்.

மற்றபடி, கண்ணில் பொங்கிய கண்ணீர் பார்வையை மறைத்ததில், அவள் தடுமாறி விழ இருந்ததை, அவன் பார்க்க நேர்ந்திருக்கும்!

கீழே விழாமல் அவளைத் தடுத்து நிறுத்தியது ஒரு கட்டில் என்பதை உணர்ந்து, கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்த நிர்மலா மீண்டும் திணறிப் போனாள்...!

ஏனெனில், நாலு பேர் படுத்து உருளலாம் போல இருந்த அந்தப் பெரிய கட்டிலின் தலைப்புறம், பின்னிப் பிணைந்திருந்த இரு 'என்'களால் வடிவமைக்கப் பட்டிருந்தது!

அவள், கணவனுக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்திருந்த மோதிரத்தில் பொன் கம்பிகளைக் கொண்டு அமைப்பட்டிருந்த அதே வடிவத்தைப் பெரிய அளவில், அப்படியே மரத்தில் கொண்டு வந்திருந்தார்கள்!

ஆக, நித்யன் சொன்ன ஏற்பாடு, இதுதான்! கட்டிலுக்காக வேறு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னானே!

வடிவம் சரியாக அமைவதற்காக, மாதிரியைப் பார்த்துக் கொள்ளவென்று, அவளது பரிசான மோதிரத்தையே கழற்றிக் கொடுத்திருக்கிறான்.

அலட்சியமாகக் கழற்றிப் போட்டுவிட்டான் என்று நினைத்தாளே!

நல்ல வைரம் பாய்ந்த தேக்கு! அதில் இவ்வளவு வேலை செய்வதானால், செலவும் அதிகம் ஆகியிருக்கும்!

அதனால்தான்... இவ்வளவு செலவு செய்து, இருவரின் அன்புக்கும் வடிவம் கொடுப்பதாகச் செய்யச் சொல்லி, அது தயாராகிக் கொண்டிருந்ததால்தான், அவள் அந்த விலை உயர்ந்த கட்டிலைக் கொண்டு வந்த இறக்கியதற்கு அவ்வளவு கோபப்பட்டிருக்கிறான்!

அதிலும், அவ்வளவு கணக்குப் பார்த்து அவன் செலவிட்டுக் கொண்டிருந்த அப்போதும், இந்தக் கட்டிலைச் செய்ய அவன் தயங்கவில்லை!

ஏனெனில், இது அவர்களது அன்பின் வடிவம்!

கடவுளே! இது தெரியாமல் என்னவெல்லாம் பேசி... விவகாரம் எந்த அளவுக்குப் போய்விட்டது!



பதிலுக்குப் பதில் என்று மாறி மாறி இருவரும் என்னவெல்லாம் பேசிவிட்டார்கள்!

அதில் எந்த வார்த்தை இல்லை என்று ஆகும்?

பொன், பொருளைக் கொட்டினால் அள்ளி விடலாம்., ஆனால், வார்த்தையைக் கொட்டினால் அள்ள முடியாது என்பது இதைத்தான் போலும்!

வள்ளுவர் கூட, எத்தனை விதமாக இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்!

தீப்புண் ஆறினாலும், 'ஆறாதே நாவினால் சுட்ட வடு' என்றும், நாவை அடக்காவிட்டால், 'சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' என்றும் அவளைப் போன்ற மரமண்டைகளுக்கு புரிய வேண்டும் என்பதற்காக, அவர் திருப்பித் திருப்பிச் சொன்ன போதும், அதை மதிக்கத் தோன்றியதா?

இந்தத் தாடிக்காரர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏதோ கிறுக்கித் தள்ளியதை, இப்போது படிக்கச் சொல்லுகிறார்களே என்று பள்ளிக் காலத்தில் எரிச்சல் பட்டது எவ்வளவு முட்டாள்தனம்!

அந்தக் குறள்களை நல்லதென்று மனதில் மதித்திருந்தால், இப்படிப் பேசியிருப்பாளா?

அவனும்தான்!

மதிக்காமல், இருவருமே கண்டபடி பேசி, எப்படிப்பட்ட சொர்க்கத்தைக் கை நழுவ விட்டுவிட்டார்கள்!

மன்னிப்பே கேட்டால்கூட, அந்தப் பேச்செல்லாம் எப்படி மறக்கும்?




அதை மறந்து எப்படி இணைய முடியும்?

என்ன மாதிரி வாழ்வை, எப்படிப்பட்ட அன்பை வீணடித்துவிட்டார்கள்!

இழந்தது பூதாகாரமாகத் தோன்ற, கைகளில் முகம் புதைத்து, விசும்பி அழுதவளின் தோளில், அவளுடைய கணவனின் கரம் பதிந்தது!

''நிலா!'' என்று கனிவும் தாபமுமாக அழைத்தது அவன் குரல்!




தொடர்ந்த பல நிமிஷங்கள், அங்கே விக்கலும், விசும்பலுமாக நிர்மலாவின் கண்ணீர் வெள்ளம் அங்கே பெருக்கெடுத்து ஓடியது.

பல மாதங்களாக மனதை வாட்டிய வேதனைகளை, அன்று அவள் அழுதே கரைத்துவிட்டாள் எனலாம்!

நெஞ்சோடு அணைத்து, அவளைத் தட்டியும் தடவியும் கொடுத்து ஆறுதல்படுத்த முயன்ற நித்யனும், முதலில் ஒன்றுமே பேசவில்லை!

சற்று நேரம் பொறுத்து, அவளை மெல்ல நடத்திச் சென்று, முன்னறை சோபாவில் உட்கார வைத்துவிட்டுத் தண்ணீர் எடுத்து வந்து, அதைக் குடிக்க வைத்தான்!



''வே...ண்டாம்...'' என்று திக்கியவளிடம், ''கொஞ்சமேனும் குடி. அழுகை நிற்கும்!'' என்று வற்புறுத்தினான் நித்யன்.

குரலில் பேதம் உணர்ந்து நிமிர்ந்து பார்த்தால், அவனுக்கும் கண்ணும் முகமும் சிவந்து போயிருந்தது!

அப்படியானால்...?

''நீ... நீங்களும் அழுதீர்களா, நித்தி?'' என்று வருத்தமாகக் கேட்டாள் அவள்.

முகத்தை வேறு புறம் திருப்பி, ''நீ அப்படி அழுதால், நான் எப்படித் தாங்குவேன்?'' என்று ஒரு கேள்வியிலேயே அவன் பதிலைத் தர, எழுந்தோடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள் நிர்மலா.

மீண்டும் பெருகிய கண்ணீரைப் பெரு முயற்சி செய்து கட்டுப் படுத்திக் கொண்டு, ''இவ்வளவு அன்பை வைத்துக்கொண்டு ஏன்... நாம் ஏன் இப்படியெல்லாம் நடந்துகொண்டோம், நித்தி? நாம் பேசிய பேச்சை நினைக்கையில்... அதை அடியோடு மறக்க முடியாது எனும்போது, மீண்டும் இணை... வந்து, நல்ல வாழ்க்கை நமக்கு எப்படி சாத்தியம், நித்தி?'' என்று தொண்டையடைக்கக் கேட்டாள்!

''பிரிவது மட்டும் சாத்தியமா கண்ணம்மா?''

மறுப்பாய்த் தலையசைத்து, ''ஆனால், என்னவெல்லாம் சொல்லி விட்டோம், நித்தி?'' என்றாள் அவள் கண்ணீர்க் குரலில். ''எல்லாவற்றையும் மன்னிக்க முடியுமா?''

அவள் அருகே வந்து அமர்ந்து, ஒரு கையை நீட்டி னான் நித்யானந்தன்.

அவள் தன் கையை, அவன் கையில் வைக்க, இரு கைகளும் இறுகப் பற்றிக் கொண்டன.

பிணைந்திருந்த கைகளைப் பார்த்தபடி, ''சற்றுப் பேசுவோம், கண்மணி!'' என்றான் அவன். அவனே தொடங்கினான்.

''என்னைப் பொறுத்தவரையில், இப்போது போலவே, அண்ணமார் வீடுகளுக்கு அம்மா, அப்பா அவ்வப் போது போய் வருவது பழக்கம் என்பதால், படிக்கும் போதே, விடுதி வாசம்தான். அதாவது, அப்போதே என் விஷயம் நானே பார்த்துப் பழக்கம்! அப்புறம் ஐந் தாண்டுகள் வேலை பார்த்த அனுபவம்! அதாவது... நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், மாதாமாதம் வேண்டிய பொருள், அவற்றின் மதிப்பு, தேவை... இதெல்லாம் முன்கூட்டியே யோசித்து, கணக்கிட்டுச் செலவு செய்து, எனக்குப் பழக்கம்...'' என்றவன், நிர்மலா விழி உயர்த்திப் பார்க்கவும் ''என்ன?'' என்று வினவி னான்.

ரதியோடு கடைக்குச் சென்றதை, எடுத்துச் சொன்னாள் அவள். ''ஒன்று வாங்குமுன் ரதி அவ்வளவு யோசித்தாள்! உங்கள் குடும்பமே அப்படி எதையும் யோசித்து செயல் படுவதோ என்று நினைத்தேன்.'' என்றாள் நிர்மலா. ''அதனால்தான் என்னை... என்னைப் பிடிக்காமல் போனதோ என்று...'' என்று மேலே பேச முடியாமல் நிறுத் தினாள்.



பிடியை அழுத்தி, ''உன்னைப் பிடிக்காமல் போகுமா? அதிகமாகப் பிடித்துப் போனதால்தானே, வம்பே!'' என்று முறுவலித்தான் நித்யன்.

நிர்மலா முகத்திலும் புன்னகை எட்டிப் பார்க்கவும், அவன் மறுபடியும் தொடங்கினான்!

''நான் திட்டமிட்டு வைத்தது போல ஓர் ஆண்டு கழித்துத் திருமணம் செய்திருந்தால், செலவு பற்றிப் பிரச்சினையே நமக்கு இருந்திராது! ஆனால், என்ன ஆயிற்று? உன்னைப் பார்த்ததும் அதிகம் பிடித்துப் போய்த் திருமணம் செய்து, மீண்டும் உன் குழந்தை ஆசையும் அதே போல அதிகம் பிடித்துப் போனதால், தேவைப்பட்ட பணம் சேருமுன் வேலையை விட்டு... சிக்கனம் பார்க்கத் தொடங்கி... கடைசியில் நான் சிக்கனம் பாராதது, வாய்ப் பேச்சு ஒன்றில்தான்!'' என்று தன் மீதே குற்றம் சாட்டிக் கொண்டான் நித்யன்.

''பொய்!'' என்றாள் நிர்மலா.

அவன் கேள்வியாய் நோக்கவும், படுக்கையறைப் பக்கம் கையைக் காட்டி, ''அங்கே இருப்பது என்ன விலை யாம்?'' என்று கேலியாகக் கேட்டாள் அவள்.

லேசாக அசடு வழிந்தாலும் சிரித்து, ''இது விதி விலக் கும்மா! உன் முகத்தைப் பார்த்தால், அப்படியொரு வார்த் தையை ரசாயனப் பாடத்தில் நீ கேட்டதே இல்லை போலத் தெரிகிறதே! ரசாயனத்தில் என்ன மார்க்கு?'' என்று தன் பங்குக்குக் கிண்டலடித்தான் நித்யன்.

இருவர் முகங்களும் மலர்ந்து, சில கணங்களில் மீண்டும் மாறின.

"உங்களைப் போன்ற தேவை எனக்கு இல்லாததால், அவ்வளவு யோசித்து செயல்படவும் எனக்குத் தெரிய வில்லை என்கிறீர்கள்!" என்றாள் நிர்மலா!

"அப்படியல்ல!" என்று மறுத்தான் அவன். "நீ அப்படி யோசியாமல் செயல்பட்டது எதிர்பார்க்கப்பட வேண்டிய, இயல்பான விஷயம்தான் என்றேன்! அதற்காக, ஆத்திரப் படுவதுதான் தப்பு என்கிறேன்." என்று விளக்கினான்.

"பரவாயில்லை! எனக்காக நன்றாகத்தான் வக்காலத்து வாங்குகிறீர்கள்!" என்றாள் நிர்மலா, மீண்டும் கேலி யாகவே, கூடவே கழிவிரக்கத்துடன்!

தொடர்ந்து, "அப்படியானால் நீங்கள் என்னைத் திட்டியதுதான் தப்பு என்பீர்கள் போல!" என்று அப்பாவி யாய் விழி விரித்தாள் அவள்!

கண்ணோரம் சுருங்க, "அதெப்படி? உனக்காக வக் காலத்து வாங்கியவன், உன் கணவனுக்காக மட்டும் வக்காலத்து வாங்காமல் விடுவானா?" என்றான் அவன்.

"எப்படியோ?"

"உன் பிள்ளை ஆசை என்னையும் பிடிக்க, ஆறு மாதம் முன்பாக வேலையை விட்டேன், அல்லவா? தேர்வுக் காகப் படிக்கிற காலத்துச் செலவுக்குத் தேவையான பணம் முழுமையாகச் சேரவில்லை! பணம் பற்றாமல் போய்விடுமோ என்ற பயத்தில்..."

"நான்தான் சம்பாதித்தேனே! நீங்கள் சீக்கிரமாக வேலையை விட்டதே, என் வருமானத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற திட்டத்தில்தானே?"



"ம்ம்... உண்மைதான்! ஆனால், அதுதான் நம் வேறுபாட்டுக்கான முக்கியமான காரணமும்!"

"புரியவில்லை!"

"ஐந்தாண்டு காலமாக, நானே சம்பாதித்து, நானே செலவு செய்தவன் அல்லவா? சம்பாதிக்கத் தொடங்கி யதில் இருந்து, அப்பாவிடம் கூட, எதற்கும் பணம் கேட்டதில்லை! இப்போது, உன்னிடம் வீட்டுச் செல வுக்கு என்று காசு கேட்பதற்கு, என் இவ்வளவு பெரிய சுய கௌரவம் இடம் தரவில்லை!" என்று வானமளவு கையை விரித்து, எவ்வளவு என்று காட்டினான் நித்யானந்தன்.

"ஆனால், அந்தப் பணத்தைச் செலவு செய்யலாம் என்று திட்டமிட்டு, அது நல்ல யோசனை என்று ஒத்துக் கொண்டுவிட்டு, அதன் பிறகுதானே, உங்கள் வேலையை விட்டீர்கள்?"

"ஆமாம்! சீக்கிரமாகத் தேர்வு எழுதி, சீக்கிரமாகப் புது வேலையில் அமர்ந்து, சீக்கிரமாகப் பிள்ளை பெற்றுக் கொள்ளலாம் என்று திட்டமிடும்போது, அப்படி எண்ணி வேலையை விட்டபோது, முழுக்க முழுக்கச் சரியாகத் தான் தோன்றியது! ஆனால், நடைமுறை யதார்த்தத்தில் தினம் தினம் அனுபவிக்கும் போதோ, எதுவுமே சரிவரவில்லை!"

"தலைமுறை தலைமுறையாக வந்த ஆண் என்கிற தன்மான... இல்லை... தன்னகங்காரம் என்பதுதான், இங்கே சரியாக இருக்கும்! அந்த அகங்காரம் தலையை உயரமாகத் தூக்கி வைத்துக் கொள்ளவே, செலவுக்கான அந்தப் பணத்தை உன்னிடம் கேட்டுப் பெற, எனக்கு



மனம் வரவில்லை! நீயாகவே செலவுகளை யோசித்து இந்தாருங்கள் என்று பணத்தைக் கையில் தர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு! அது போகவும், நீ செலவழிக்காமல் சிக்கனமாக இருந்து, பணத்தை சேமித்து, கையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை! அவசரத் தேவை நேர்ந்தால், செலவு செய்வதற்கு வேண்டும் என்பதற்காகவே!

ஆனால், நேர் மாறாக, நீ அதிகப் பணம் செலவழித்து விட்டு வந்த போது, அதன்பின் மாதச் செலவைச் சரிக்கட்டுவதற்காக இருப்பில் கை வைத்தபோது, எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது! அந்த ஆத்திரத்தில், மனதில் எண்ணாத வார்த்தையெல்லாம் வாயில் வந்துவிட்டன!" என்று வருத்தத்துடன் இயம் பியவன், உடனே சமாளித்து, "சம்பாதிக்காத ஆண் மகனின் தாழ்வுணர்ச்சியின் இயல்பான செயல்பாடு! இது, உன் கணவனுக்கான சரியான வக்காலத்துதானா?" என்று புருவம் தூக்கிக் கிண்டல் போலக் கேட்டான்!

ஆனால், அவளால் சிரிக்க முடியவில்லை!

சும்மாவே தாழ்வுணர்ச்சியில் துடித்தவனை, இன்ன மும் குத்திக் குதறினாளே!

"பெற்றவர்களிடம் கூடப் பணம் வாங்கப் பிடிக்காத ரோஷக்காரர் நீங்கள்! உங்களைப் போய், என்னவெல்லாம் பேசிவிட்டேன்! உங்களால், அதை எப்படி மன்னிக்க..."

"ஷ்!" என்று அவள் உதட்டில் கைவைத்துத் தடுத்தான் நித்யன். "இரண்டாவது முறையாக, இந்த மன்னிப்பு என்கிற வார்த்தையைச் சொல்கிறாய்! யோசி! நீ மட்டுமா



பேசினாய்? நான் மட்டும், உன்னைக் கொஞ்சமாகவா திட்டினேன்?

நினைத்துப் பார்க்கையில், என் கண்மணியை இந்த வார்த்தையெல்லாம் நானா சொன்னேன் என்று எவ்வளவு குன்றலாக இருக்கிறது! இருந்தது! பழசை நினைக் கையில், நினைத்து, நினைத்து என்ன பாடு பட்டேன், தெரியுமா? ஆனால், அதெல்லாம் மெய்யாகவே, பழைய கதைதான்! எல்லாமே, ஏன் எதனால், எப்படி நேர்ந்தது என்று இருவரும் புரிந்து கொண்டாயிற்று! அவ்வளவு தான்! அத்தோடு விஷயம் முடிந்தது!

நண்பர்களுக்குள்ளும், அன்பர்களுக்குள்ளும் விளக்கம் இருக்கலாமே தவிர, அதற்கு மேல் இந்த மன்னிப்பு என்கிற வார்த்தைக்கு இடமே கிடையாது. தெரியுமா? நமக்குள் இந்த இரண்டும் மட்டுமின்றி, உயிர் நேசமும் இருப்பதால், புரிதல் மட்டுமே போதும், கண்மணி!" என்று உருகினான் அவன்!

அவளுக்கும் அதே உணர்வு!

"நான் வேண்டுமானால் வேலையை விட்டுவிடட் டுமா? அல்லது, இனி எந்தப் பணத்தையும், நான் பணத்தைச் செலவே செய்யப் போவது இல்லை!" என்றாள் நிர்மலா தீவிரமான குரலில்!

"ஐய்யோ! அதெல்லாம் வேண்டாம், செல்லம்! அந்த அளவுக்கெல்லாம் தேவையே கிடையாது! உனக்குப் பிடித்ததை, உன் பணத்தில்..."

"என்னது? என் பணமா?" என்று ஆத்திரமாகக் கண்ணை உருட்டிக் கேட்டாள் நிர்மலா.

''சாரி, சாரி..! தெரியாமல் சொல்லிவிட்டேன்! அது நம் பணம்மா! எல்லாமே நம் இருவரின் பணம்தான்! நம் பணத்தில், நீ சம்பாதித்துக் கொண்டு வருவதில், என்ன வேண்டுமானாலும் வாங்கு! நான் கொண்டு வருவது, அன்றாடச் செலவுக்கும், எதிர்காலத் தேவைக்கும், இருக் கட்டும்! ஆனால், எதையும் ஒரே ஒரு தரம், அதிக மில்லை, ஒரே ஒரு தரம் மட்டும்தான், யோசித்து வாங்கு, என் நிலாச் செல்லம்!''

நிலா!

கலகலவென்று சிரித்துவிட்டு, ''எனக்கென்னவோ, இந்த இரவு விருந்தே, நம் இருவரையும் தன்னந் தனிமையில், எதையும் மறையாமல் மனம் விட்டு பேச வைப்பதற்கான சூழ்ச்சி என்றே தோன்றுகிறது!'' என்றாள் நிர்மலா!

''என் மனைவி அவ்வப்போது மகா புத்திசாலியாகி விடுவாள்! கண்டு பிடித்து விடுவாள் என்று, மெய்யாகவே நான் மாமாவிடம் சொன்னேன், நிலா!'' என்று சிரியாமல் சொன்னான் நித்யன்!

''அவ்வப்போது மட்டுமா? என்ன செய்வது? உங் களுக்கேற்ற மனைவியாக, மற்ற நேரம் இருக்க வேண் டுமே!'' என்று கணவனை கடைக் கண்ணால் நோக்கிக் கிளுக்கினாள் அவள்!

உடனே கண்ணை விரித்து, ''என்னது, என்னது? நீங்கள், அப்பாவிடம் சொன்னீர்களா? அப்படியானால், எல்லோரும் சேர்ந்து செய்த கூட்டுச் சதிதானா? அன் றைக்கு 'மாமா சொன்னார், மாமா சொன்னார்' என்றபோதே



எனக்கு சந்தேகம்தான்! எனக்குத் தெரியாமல் இப்படி ஒரு குலாவலா? இருக்கட்டும், இந்த அப்பாவை, அப்புறமாக ஒரு கை பார்க்கிறேன்!'' என்றாள் மிரட்டுவது போல!

சிரித்துக்கொண்டே, அருகில் கிடந்த மோடாவில் இருந்த ஒரு பாக்கெட்டை எடுத்து அவளிடம் கொடுத் தான் நித்யன்.

உள்ளே அந்தச் செம்பவள வண்ணத்துச் சேலை பளீரிட்டது!

வியப்பும் மகிழ்ச்சியுமாக, விழி விரித்து நோக்கியவ ளிடம், ''நீ பிடிக்கிறது என்று எடுத்து வைத்துவிட்டாய்! அப்புறம், இந்தச் சேலையை இன்னொரு பெண் அணி வதை, நான் எப்படிப் பொறுப்பேன்?'' என்று அவன் விளக்கம் தரவும், நிர்மலாவின் உள்ளம் பூரித்துப் போயிற்று!

இவ்வளவு நேசம் இருக்கும்போது, பிரிவதாவது, இன்னொன்றாவது? உயிருள்ள வரை, அவர்கள் இணைந்துதான் வாழப் போகிறார்கள்!

மிகவும் அன்போடு, ஆசையாக... என்று இனிமையாக எண்ணம் ஓடும்போதே, பாணகத் துரும்பாக அவளுக்குப் பிரதீபனின் நினைவு வந்தது!

அவனைப் பற்றி, நித்யன் ஒன்றும் கேட்கவே இல்லையே!

ஒரு திருமண மண்டபத்தில்... திருமணம் முடிந்து, வெளிக்கூட்டம் போன பிறகுதான் என்றாலும், திருமண வீட்டார் அங்கே இருக்கிற நேரம்தானே? அப்போதைக்கு,

அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை என்றாலும், யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்கிற நிலைதான்! அப்படி ஓர் இடத்தில் அவள் கையைப் பிடிக்க ஒருவன் முயன்றான் என்றால், அதைப் பற்றி, என்னென்னவோ நினைக்கலாமே!

இப்போதைய உணர்ச்சி வேகத்தில் நித்யன் அதை மறந்திருக்கலாம்!

ஆனால், சற்று அமைதியடைந்து நினைவு வரும் போது?

அவளைப் பற்றிய எந்தத் தவறான எண்ணமும் அவனுக்கு இருக்கக் கூடாது... அவளைப் பற்றி அவன் தவறாக நினைக்கவே கூடாது என்று தோன்றவும், அவளாகவே, பிரதீபனின் பேச்செடுத்தாள்.

''நித்தி, அந்தப் பிரதீப்...'' என்று தொடங்கிய வளுக்குத் தன்னையறியாமல் தொண்டை அடைத்து, அதைச் சீர்படுத்தச் செரும வேண்டியிருந்தது!

ஆனால், செருமிக் கொண்டு அவள் தொடங்குமுன், அவளுடைய கணவன் குறுக்கிட்டு, "வேண்டாம் நிலா! வீணாக, உன்னைச் சிரமப்படுத்திக் கொள்ளாதே! அவனைப் பற்றி, எனக்கு ஒரு விளக்கமும் தேவை யில்லை!'' என்று சொன்னான்.

வியப்போடு கூட, அவள் கேள்வியாக நோக்கவும், ''அவனைப் பற்றி நீ பேச வேண்டியதே கிடையாது! எப்போது, அவனைப் பற்றிய பேச்சை எடுத்ததற்காக ரஞ்சனை நீ அடிக்கப் போனாயோ, அப்புறம் உன் மனதில்



அவனுக்கு என்ன இடம் என்று, நீ சொல்லித்தானா, நான் அறிய வேண்டும்? வெறும் தூசு! ஊதிவிட்டுப் போய்க் கொண்டே இருக்க வேண்டும்! அவ்வளவுதான், அவ னுக்கு, மதிப்பு!'' என்றான் நித்யானந்தன்!

''ஆனால், அண்ணனிடம் கேட்கச் சொன்னது நீங்கள் தான் போல?'' என்று கேட்டாள் அவள்! ''அப்போது, தூசாகக் கருதி அலட்சியப்படுத்தவில்லையே! அதுவும், அவ்வளவு கௌரவம் பார்க்கிற நீங்கள், அண்ணனிடம் போய், இது பற்றிப் பேசுவது என்றால், ரொம்பவே சந்தேகப்பட்டிருக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்?''

''அது அப்படியில்லை நிலா! திடுமென மணவிலக்கு என்கிறாய்! உலகம் தெரியாத சின்னப் பெண்! என்னிடம் தோன்றியதுதான் வெறும் கவர்ச்சியோ என்று கலங்கி, மனம் என்னென்னவோ எண்ணிக் கலங்கிய குட்டை யாய்க் குழம்பியிருந்தது! ஒரு வேளை... அப்படியோ என்று சிறு கலக்கம்! அப்போதும் கூட ரஞ்சனிடம் நானாகப் போய்ச் சொல்லவில்லை! அவனுக்கு என்னிடம் எவ்வளவு பிரியம் என்று உனக்குத் தெரியும் அல்லவா? ஒருநாள் இங்கே வந்து உட்கார்ந்து, எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தான். நிம்மி வாயைத் திறக்க மாட்டேன் என்கிறாள், நீங்களாவது சொல்லுங்கள்... உங்கள் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன் என்று... அவனை மாதிரி ஒரு மைத்துனன் கிடைக்கக் கொடுத்து வைத் திருக்க வேண்டும், நிலா! கொஞ்சம் கூட, மான ஈனம் பாராமல் காலில் விழுகிறேன் என்று அவன் சொல்லும் போது, நான் மட்டும் எப்படி மறைப்பது?

பார்க்கும்படியாக, என் செல்லில் உள்ள கேமராவில் உன்னை எத்தனை படம் எடுத்துப் பதிவு பண்ணி யிருக்கிறேன் என்று உனக்குத் தெரியாது! அப்புறமாகக் காட்டுகிறேன், பார்! இத்தனையா என்று பிரமித்துப் போவாய்!'' என்று நித்யன் கூற, நிர்மலாவுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்துவிட்டது!

''ஒரே மாதிரி நினைப்பும்தான், இரண்டு பேருக்கும்!'' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள்! ஒரே மாதிரிச் சொல்லவும் செய்துவிட்டு, அதற்காகவும் நகைத் தார்கள்!

இருவருமே சிரித்து முடித்த பின், ''பெரியப்பாவுக்காக, வீட்டிலேயே இருந்து விடுகிறாயா என்று கேட்பீர்கள் என்று முதலிலேயே ஆசையாக எதிர்பார்த்தேன், தெரி யுமா?'' என்று தன் இன்னோர் ஏக்கத்தைத் தெரிவித்தாள் மனைவி!

''ஹைய்யோ! இது இன்னும் பயங்கரப் பொருத்தமாக இருக்கிறதே! இங்கேயே இருந்துவிடுவதாக நீ சொல்லு வாய் என்று, நான் எவ்வளவு ஆசையாக எதிர்பார்த்தேன் தெரியுமோ?''

''இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு எப்படி...'' என்று தொடங்கியவள், மணவிலக்கு என்ற சொல்லைச் சொல்லக் கூடப் பிடிக்காமல் பேச்சை நிறுத்தினாள்!

''எனக்கு அது ஆச்சரியம்தான்! இத்தனைக்கும், நம் சண்டை உச்சநிலைக்குப் போய், நீ வீட்டை விட்டு வெளி யேறிய அன்று கூட, உனக்கு முன்பாக வெளியேறிச் சென்றேனே, ஏன் தெரியுமா? அந்த இரவு நேரத்தில்



தனியாகச் சென்று, எந்த ஆபத்திலும் மாட்டிக்கொள் ளாமல், உனக்குக் காவலாக, உனக்குத் தெரியாமல், உன்னைப் பின் தொடருவதற்காகத்தான்! உன் தோழி சுபா வீட்டுக்குள் நீ செல்லும்வரை பார்த்து விட்டுத்தான் திரும்பினேன்!''

இவனுக்குப் போய் அன்பு இல்லை என்று எண்ணி னாளே!

அவன் கையைப் பற்றி மென்மையாக முத்த மிட்டு, ''ஆனால் ஒன்று நித்தி, நாம் திரும்பிப் போனதும், நம் முகங்களைப் பார்த்ததுமே, மணவிலக்கு இல்லை என்று எல்லோருக்கும் புரிந்து போகும்!'' என்று மகிழ்ச்சி யோடு கூறினாள் அவள்!

''ம்ம்ம்... ஆனால் அந்த அறிவிப்புக்கு, எனக்கு இன்னொரு யோசனையல்லவா இருக்கிறது!'' என்றான் அவள் கணவன், புன்னகையோடு.

''என்னது?'' என்று ஐயமும், ஆவலுமாகக் கேட்டாள் அவள்.

''நாம் போகாமலே இருந்து விடுவது...! போகா விட்டால் கூட, அது எல்லோருக்கும் புரிந்து போகும். நீ என்ன சொல்லுகிறாய், நிலா?'' என்று கண் சிமிட்டிக் கேட்டான்.

அவன் குறிப்பாகச் சொன்னது புரிய, ''ஏ...ய் நித்தி...! போங்கப்பா...!'' என்று செல்லமாகச் சிணுங்கிய நிர்மலா வின் முகம் செக்கர் வானமாக சிவந்து போயிற்று!